**தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை - 2021**

**-------------------------------------------------------------------------------**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ("சபை") இன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமென நான் கருதும் அவதானிப்புக்களும் கருத்துரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், பொருத்தமானவாறு அதனை வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபையின் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு குழுமத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | தொடர்புடைய உரிய நியமங்களுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| i. | நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 01) 32 ஆம் பந்திக்கு | கைமுறை பதிவு செய்தல் கணனிமயப் | நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கையில் |

| | | | |
|---|---|---|---|
| | முரணாக நடைமுறைச் சொத்துக்களை பிரதிநிதித்துவம் செய்கின்ற ரூபா 8,506,031 தொகையான வியாபார பெறவேண்டிய அசாதாரண செலவு மீதி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றிலுள்ள செலுத்தவேண்டியவை மற்றும் செயற்பாடற்ற பொறுப்புகளாக இனங்காணப்பட்டவை க்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே, நடைமுறை பொறுப்புகளை பிரதிநிதித்துவம் செய்கின்ற ரூபா 1,078,112 தொகையான பெறப்பட்ட பிடிகாசின் அசாதாரண வரவு மீதி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றிலுள்ள பெறவேண்டியவை மற்றும் செயற்பாடற்ற சொத்துகளாக இனங்காணப்பட்டவைக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தது. அத்துடன், மீளாய்வாண்டில் ஐயக் கடன்களாக பதிவழிப்புச் செய்யப்பட்ட தெஹிவலை முகாமையாளர் அலுவலகம் மற்றும் மொரட்டுவ பிராந்திய பொறியியலாளர் அலுவலகம் ஆகியவற்றுடன் தொடர்புடைய முறையே ரூபா 51,411,173 மற்றும் ரூபா 65,226,954 தொகைகள் ஏனைய செயற்பாட்டுச் செலவினமாக அங்கீகரிக்கப் படுவதற்குப் பதிலாக மானி விற்பனைக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தது. | படுத்தப்பட்டமையால் இந்த மீதிகள் 1999 இலிருந்து சுழன்று வருகின்றன. இந்த சிக்கலை தீர்ப்பதற்காக மேலதிக பொது முகாமையாளரின் தலைமையில் குழு வொன்று நியமிக்கப்பட் டுள்ளதுடன் இது இடம் பெற்று வருகின்றது. | LKAS 01 இலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கி ஒழுகு வதை உறுதிப்படு த்த வேண்டும். |
| ii. | நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 01) 60 ஆம் பந்திக்கு முரணாக, சபை இனங்கண்டிருந்த ரூபா 149,681,812 தொகையான இருப்புக்கள், கடன்பட்டோர், முற்பணங்கள் மற்றும் காசுப் புத்தக மீதிகளை உள்ளடக்கிய செயற்பாடற்ற சொத்துக்கள் அவை ஒவ்வொன்றினதும் திரவத்தன்மையினை தனித்தனியாக கருத்திற் கொள்ளாது உயர் திரவத்தன்மை விடயங்களாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | இந் மீதியும் கைமுறை பதிவு செய்தல் கணனி மயப்படுத்தப்பட்டமை யால் 1999 இலிருந்து சுழன்று வருகின்றது. | -மேற்படி- |
| iii. | நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 02) 9 ஆம் பந்திக்கு முரணாக, மூன்று ஆண்டுகளிற்கு மேலாக அசைவுறாதுள்ள ரூபா 632,408,899 கூட்டுத் தொகையான இருப்புகள் அவற்றின் நிகர தேறக்கூடிய பெறுமதிகள் மதிப்பிடப்படாது அவற்றின் கிரயத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | LKAS 2 இன் 6 ஆம் பந்திக்கு இணங்க, இதனை கணிப்பிடுதல் நடைமுறைச் சாத்திய மற்றதாகும். இந்த அனைத்து விடயங்க ளும் மூன்று ஆண்டு களிற்கு மேலாக அசைவுறாதுள்ள இருப்புகள் எனக் கூற முடியாதுள்ளது. | இருப்பின் பெறுமதி களை அங்கீகரிக் கையில் LKAS 02 இலுள்ள ஏற்பாடு களுடன் இணங்கி ஒழுகுவதை உறுதி ப்படுத்த வேண்டும். |
| iv. | நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 07) 07 ஆம் பந்திக்கு முரணாக, சேமிப்புக் கணக்கில் மேற்கொள்ளப்பட்ட | இலங்கை வங்கியின் சேமிப்புக் கணக்கில் மேற்கொள்ளப்பட்ட | சொத்துக்களை நடைமுறை மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 1,455,412 வைப்பு மற்றும் எஸ்க்ரோ சேமிப்புக் கணக்கில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 11,823.23 மில்லியன் வைப்பு என்பன நிதி நிலைமைக் கூற்றில் முறையே நிதிச் சொத்துக்கள் மற்றும் முதலீடுகள் என வகைப்படுத்தப்பட்டிருந்தன. இருப்பினும், ரூபா 2,065.8 மில்லியனுக்குச் சமமான தொகை எஸ்க்ரோ சேமிப்புக் கணக்கிற்கு வெளியிலிருந்து பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வைப்பு, குறுங்காலத் அதில் பயன்படுத்தும் நோக்கில் வைப்புச் செய்யப்படவில்லை. ஆகையால், இது காசு பாய்ச்சல் கூற்றிலுள்ள செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து விடுவிக்கப்பட்டது. | நடைமுறையல்லாத சொத்துக்களாக வகைப்படுத்துகையில் LKAS 07 இலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கி ஒழுகுவதை உறுதிப்படுத்த வேண்டும். |
| v. | கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 08) 41 மற்றும் 42 ஆம் பந்திகளுக்கு முரணாக, நீர்வழங்கல் அமைச்சிடமிருந்து 2020 ஆம் ஆண்டிற்காக கிடைத்த ரூபா 3,797,412 வாடகை வருமானம் மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சீதாவக முகாமையாளர் அலுவலகம் மற்றும் காலி முகாமையாளர் அலுவலகம் ஆகியவற்றிலிருந்து கிடைத்த முறையே ரூபா 354,080 மற்றும் ரூபா 1,078,301 கழிவுநீர் வருமானம் என்பன மீளாய்வாண்டிற்கான வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. மேலும், பெரும் கொழும்பு கழிவுப் பிரிவுடன் தொடர்பில் 2020 பெப்ரவரி 07 அன்று இடம்பெற்ற வழுவைத் திருத்துவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 436,090 கழிவுநீர் வருமானம் வரவு வைக்கப்பட்டிருந்ததுடன், குத்தகைக் காணியின் கிரயத்திற்கு சீராக்கப்பட வேண்டிய முன்னைய ஆண்டுச் சீராக்கமாக இனங்ககாணப்பட வேண்டிய ரூபா 700,000 தொகை மீளாய்வாண்டின் குத்தகைக் காணியின் மாற்றல் என தவறாக இனங்காணப்பட்டிருந்தது. அத்துடன், கொழும்பு நகர தெற்குப் பிராந்தியம் தொடர்பில் முன்னைய ஆண்டுகளின் பட்டியலிடல் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 22,696,939 தொகை பிழையான பட்டியலிடல்கள் காரணமாக கழிக்கப்பட வேண்டிய சீராக்கமாக மீளாய்வாண்டில் இனங்காணப்பட்டிருந்தது. இருப்பினும், கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 08) 41 மற்றும் 42 ஆம் பந்திகளின் படி அதனைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்காது அத்தொகை ஆண்டிற்கான மானிகள் விற்பனைக்கு சாட்டப்பட்டிருந்தது. | நீர்வழங்கல் அமைச்சிடமிருந்து பெறப்பட்ட வாடகை வருமானம் சரியான ஆண்டில் சீராக்கப்படும். 2021 பெப்ரவரி மாதத்திற்காக வழங்கிய தவறான பட்டியல்களின் சீராக்கலிற்காக ரூபா 22,696,939 தொகைக்கு சரியான பதிவு உருவாக்கப்பட்டது. | வழுக்களிற்காக நிதிக்கூற்றுக்களை மீளமைக்கையில் LKAS 08 இலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கி ஒழுகுவதை உறுதிப்படுத்த வேண்டும். |
| vi. | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட வக்வெல்ல நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கட்டிடத்தின் பழுதுபார்ப்பு செலவான ரூபா 5,855,591 தொகை நடைபெற்றுவரும் வேலைகள் என தவறாக அடையாளம் காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்தத் திருத்தத்தை கணக்கீட்டுக் கொள்கைகள், | 2022 ஆம் ஆண்டில் அது முன்னைய ஆண்டுச் சீராக்கமாக சீராக்கப்படும். | வழுக்களிற்காக நிதிக்கூற்றுக்களை மீளமைக்கையில் LKAS 08 இலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கி ஒழுகுவதை உறுதிப்ப |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 08) 42 ஆம் பிரிவின்படி சீராக்குவதற்குப் பதிலாக, வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட செலவினமாக இத்தொகை இனங்காணப்பட்டிருந்தது. மேலும், 2017 ஆம் ஆண்டில் 80836249 எனும் இலக்கத்தைக் கொண்ட நிலையான வைப்புத்தொகைக்கு வட்டியாகப் பெறப்பட்ட ரூபா 1,224,986 தொகை 2017 ஆம் ஆண்டில் வழிப்பணக் கணக்கில் தவறாக செலவு வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மேற்கூறிய ஏற்பாட்டின் படி அதனை ஆண்டின் தொடக்கத்தில் காணப்பட்ட நிறுத்திவைக்கப்பட்ட நட்டத்திற்கு சீராக்கப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டில் ஆண்டிற்கான வருமானம் இனங்காணப்பட்ட பின்னர் அது சீராக்கப்பட்டிருந்தது. | | டுத்த வேண்டும். |
| vii. | கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 08) 42 ஆம் பிரிவின்படி சீராக்குவதற்குப் பதிலாக, எட்டு (08) நிலையான சொத்துக்களின் ஐந்து (05) வகைகளின் மாற்றம் காரணமாக ரூபா 293,125 மேலதிக பெறுமானத்தேய்வு மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டில் நடைமுறையால்லாத சொத்துக்களிற்கு செய்யப்பட்ட சேர்ப்பனவுகளிற்கு மேலதிகமாக ரூபா 1,252.33 மில்லியனுக்குச் சமமான தொகை மேற்படி நியமத்தின் 42 ஆம் பிரிவின் படி இனங்காணப்படுவதற்குப் பதிலாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயத்திலிருந்து மாற்றீடு செய்யப்பட்டிருந்தது. அத்துடன், கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் படி ரூபா 845,272 குறைப் பெறுமானத்தேய்வு ஏற்பாடானது எட்டு (08) நிலையான சொத்துக்களின் ஐந்து (05) வகைகளின் மாற்றம் என்பதாக ஆண்டின் தொடக்கத்தில் காணப்பட்ட நிறுத்திவைத்த நட்டத்திற்கு முன்னைய ஆண்டுச் சீராக்கமாக செய்யப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டு<br>களின் சீராக்கமாக<br>செய்யப்பட வேண்டிய<br>முழுத் தொகையை<br>NWSDB ஏற்கனவே<br>மதிப்பிட்டுள்ளதுடன்<br>சீராக்கப்பட்ட சொத்துக<br>ளின் பெறுமதி ரூபா<br>4.8 மில்லியனாவதுடன்<br>எஞ்சிய தொகை 2022<br>இன் நிதிக்கூற்றுக்க<br>ளில் சீராக்கப்படும். | வழுக்களிற்காக<br>நிதிக்கூற்றுக்களை<br>மீளமைக்கையில்<br>LKAS 08 இலுள்ள<br>ஏற்பாடுகளுடன்<br>இணங்கி ஒழுகு<br>வதை உறுதிப்ப<br>டுத்த வேண்டும். |
| viii. | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 16) 51 ஆம் பந்தியின் படி, சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் குறைந்தது ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென்பதுடன் முன்னைய மதிப்பீட்டிலிருந்து எதிர்பார்ப்பு வேறுபடுமாயின் அந்த வேறுபாடானது LKAS 08 இன் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். இருப்பினும், தொடந்தும் பயன்படுத்தி வரப்படுகின்ற ரூபா 2,604,392,336 தொகையான முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்ட 17 சொத்து விடயங்கள் அதற்கமைய மீளாய்வு செய்யப்பட்டு | சபையின் சொத்துக்கள்<br>நாடு பூராவும்<br>பரவுண்டு<br>காணப்படுவதால் சபை<br>யின் சொத்துத் தளத்<br>தை பெறுமதியிடுதல்<br>நடைமுறைச் சாத்திய<br>மற்றதாக உள்ளது. | முழுமையாகத்<br>தேய்மானம்<br>செய்ய ப்பட்டு<br>தொடர்ந்து<br>பயன்படுத்தி வரப்ப<br>டுகின்ற சொத்துக்<br>கள் LKAS 16<br>இலுள்ள ஏற்பாடு<br>களுடன் இணங்கி<br>ஒழுகுவதை உறுதி<br>ப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன், 20 ஆண்டுகளிற்கும் மேல் வைத்திருக்கப்பட்டுள்ள ரூபா 396,328,070 தொகையான பிரதான உதிரிப்பாகங்கள் அவற்றின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்படாது 5 சதவீதத்தை பயன்படுத்தி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது. | | |
| ix. | அரசாங்க மானியங்கள் மற்றும் அரசாங்க உதவிகளை வெளிப்படுத்துதல் மீதான இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS 20) இற்கு முரணாக, கடந்த 15 ஆண்டுகளாக காலத்தேய்வு செய்யப்படாது வைத்திருக்கப்பட்டுள்ள 29 செயற்திட்டங்களுடன் தொடர்புடைய ரூபா 10,445.59 மில்லியன் மற்றும் கடந்த 12 ஆண்டுகளாக காலத்தேய்வு செய்யப்படாது வைத்திருக்கப்பட்டுள்ள 05 செயற்திட்டங்களுடன் தொடர்புடைய ரூபா 3,258.98 மில்லியன் வெளிநாட்டு மானிய மீதிகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்குகளிற்கு முன்னெடுத்துவரப் பட்டிருந்தன. இந்த வெளிநாட்டு மானியங்களுடன் தொடர்புடைய தகவல்கள் இல்லாமையால் காலத்தேய்வு செய்யப்படாமை காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்பட்டுள்ள தாக்கத்தை கணக்காய்வில் மதிப்பிட முடிந்திருக்கவில்லை. மேலும், நியமத்தின் 12 ஆம் பந்திக்கு முரணாக ரூபா 110,142,908 இற்குச் சமமான தொகை 13 நிலையான சொத்து விடயங்களின் பெறுமானத்தேய்வாக இனங்காணப்பட்டு ஒவ்வொரு மானியத்துடனும் தொடர்புபட்ட குறித்துரைத்த செயற்திட்டத்தை தனித்தனியாக இனங்காணாது காலத்தேய்மானம் என புறம்பான வெளிநாட்டு மானியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. ஆகையால், வெளிநாட்டு மானியக் கணக்கில் ரூபா 110,142,908 அசாதாரண வரவு மீதியொன்று அவதானிக்கப்பட்டது. | LKAS 20 இன் 14 ஆம் பந்தியுடன் இணங்கும் வகையில் ஆண்டு முழுவதும் மானியச் சொத்துக்கள் காலத் தேய்வு செய்யப்பட்டன. | வெளிநாட்டு மானிய காலத்தேய் மானம் தொடர்பில் LKAS 20 இலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கி ஒழுகு வதை உறுதிப்ப டுத்த வேண்டும். |
| x. | அம்மாந்தோட்டை முகாமையாளர் அலுவலகத்தில் மீளாய்வாண்டின் இருப்பு மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்டிருந்த இரத்தினபுரி நீர்வழங்கல் திட்டத்தின் ஒப்பந்தகாரரிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 27,669,420 பெறுமதியான இருப்பு விடயங்கள் மற்றும் அக்கரைப்பற்று முகாமையாளர் அலுவலகத்திற்கு மானியமாக கிடைத்திருந்த ரூபா 52,739,979 பெறுமதியான இருப்புகள் என்பன அரசாங்க மானியங்கள் மற்றும் அரசாங்க உதவிகளை வெளிப்படுத்துதல் மீதான இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS 20) இன் 03 ஆம் பந்தியின் பிரகாரம் அதற்குரிய மூலத்தை உரியவாறு இனங்காணாது வெளிநாட்டு மூலதன மானியங்களாக அங்கீகரிக்கப்பட்டிருந்தன. | ஆகையால் ரூபா 27,669,420.00 இருப்பின் பெறுமதியானது மானி யக் கணக்கிற்கு எதி ராக பதிவு செய்யப்பட் டது. | வெளிநாட்டு மானிய காலத்தேய் மானம் தொடர்பில் LKAS 20 இலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கி ஒழுகு வதை உறுதிப்ப டுத்த வேண்டும். |
| xi. | முதலீட்டு ஆதனங்கள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS 40) இற்கு முரணாக, ரூபா 328,259,619 | தற்போது நீர்வழங்கல் அமைச்சு அமைந்து | முதலீட்டு ஆதன த்தை அங்கீகரிக் |

| | | | |
|---|---|---|---|
| | தொகையான முன்கொண்டு செல்லப்பட்டிருந்த முதலீட்டு ஆதனத்தின் பெறுமதி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முதலீட்டு ஆதனங்கள் என காண்பிப்பதற்குப் பதிலாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், நியமத்தின் 75(ஊ) மற்றும் 79 ஆம் பந்திகளின் பிரகாரம் முதலீட்டு ஆதனங்கள் மீதான வருமானம் வெளிப்படுத்தப்படாததுடன் தேய்மானமிடல் முறைகள், பயனுள்ள ஆயுட்காலம் அல்லது பெறுமானத்தேய்வு வீதம், மொத்த முன்கொண்டுசெல் தொகை மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு அத்துடன் நட்டக்கழிவுத் தொகை என்பன தொடர்பில் உரிய வெளிப்படுத்தல் களை ஆண்டின் தொடர்க்கத்திலும் முடிவிலும் சபை செய்திருக்கவில்லை. | ள்ள கட்டிடம் LKAS 40 இன் 14 ஆம் பந்தியின் படி முதலீட்டு ஆதனம் என்பதாக தீர்ப்பளிக்கப்பட்து. ஆகையால் மேற்படி நியமத்தின் 75(இ) பிரகாரம் அத்தகைய தீர்ப்பு நிதிக் கூற்றுக் களிற்கு தேவைப்படுத்த ப்படவில்லை. | கையில் LKAS 40 இலுள்ள ஏற்பாடுக ளுடன் இணங்கி ஒழுகுவதை உறுதி ப்படுத்த வேண்டும். |
| xii. | நிதிக் கருவிகள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமம் (SLFRS 09) இன் 5.5 ஆம் பிரிவிற்கு முரணாக, எதிர்பார்க்கின்ற கடன் நட்டத்தை இனங்காணாது கழிவுநீர் கடன்பட்டோர் மற்றும் ஏனைய கடன்பட்டோர் மீது நிலையான வீதமொன்றில் ரூபா 30,617,873 நட்டக்கழிவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | SLFRS 9 இலுள்ள எதிர்பார்த்த கடன் நட்டத்திற்கான இந்த பரிகார முறை மீதியின் மீது குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்த வில்லை. | கடன்பட்டோருக்கு நட்டக்கழிவு ஏற்பா ட்டை மேற்கொள் கையில் SLFRS – 09 இலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கி ஒழுகு வதை உறுதிப்ப டுத்த வேண்டும். |
| xiii. | அருவச் சொத்துக்கள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 38) 12 ஆம் பிரிவிற்கு முரணாக, முன்னைய ஆண்டில் தளபாடம் பொருத்துகள், ஏனைய உபகரணங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பதாக இனங்காணப்பட்டிருந்த ரூபா 9,593,438 தொகை அவற்றை அருவச் சொத்துகளாக இனங்காண்பதற்கான எடுகோள்களுடன் உரியவாறு திருப்தியடையாது பிராந்திய உதவி நிலையத்தின் (நிலையம்) அருவச் சொத்தாக மீளாய்வாண்டில் இனங்காணப்பட்டிருந்தது. இருப்பினும், கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 08) தேவைப்படுத்தலுக்கு அமைய மேற்படி அருவச் சொத்து வகைகளின் மாற்றத்தினால் ஏற்பட்ட தாக்கத்தை வெளிப்படுத்தும் விதத்தில் அதற்குரிய கிரயம், திரண்ட பொறுமானத்தேய்வு மற்றும் நிறுத்திவைத்த நட்டங்கள் தொடர்பில் உரிய சீராக்கல்கள் ஆண்டின் தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டதுடன் அதற்குப் பதிலாக மீளாய்வாண்டில் அருவச் சொத்துக்களிற்கு சேர்க்கப்பட்ட தொகையாக அது காண்பிக்கப்பட்டிருந்தது. | துலைமை அலுவலக அத்தின் கிரயப் பிரிவால் தேவையான சீராக்கல்கள் மேற்கொ ள்ளப்படும். | அருவச் சொத்துக் களை அங்கீகரிக் கையில் LKAS 38 இலுள்ள ஏற்பாடு களுடன் இணங்கி ஒழுகுவதை உறுதி ப்படுத்த வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| i. | நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரிவு 3.2.1 இன் படி, மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான இருப்பு மீதியின் பெறுமதி நிறையளித்த சராசரி கிரய முறையில் மதிப்பிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், இருப்புப் பெறுவனவுகள் மற்றும் வழங்கல்களுக்கு இடையே உள்ள அசாதாரண விலை முரண் காரணமாக முகாமைத்துவ தகவல் முறைமையிலிருந்து எடுக்கப்பட்ட இருப்பு மீதியின் பெறுமதி நிறையளித்த சராசரி கிரய முறையுடன் இணங்கவில்லை என்பது கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. எனவே, நிதிக்கூற்றுக்களிலுள்ள இருப்பு மீதிகளின் சரியான தன்மையை கணக்காய்வில் மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை. | தகவல் முகாமைத்துவ முறைமை (IMS) முழுமையாக பூரணத்துவம் அடையும் வரை, முறைமையின் ஊடான உயர் விலை முரணானது இருப்புச் சீராகக்ல் கணக் கின் மூலம் சரி செய்யப்படும். | நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்குதல் வேண்டும். |
| ii. | நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரிவு 3.2.1 இன் படி, காலாவதியான மற்றும் மெதுவாக நகரும் இருப்புக்களிற்காக இருப்பு மீதியிலிருந்து ஒரு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இருப்பினும், கணக்குப் புத்தகங்களின் படி, ரூபா 236,958,510 தொகையான காலாவதியான மற்றும் பயன்படுத்த முடியாத இருப்புகளிற்கு மாத்திரம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மெதுவாக நகரும் இருப்புக்களிற்காக எந்த ஒதுக்கீடும் செய்யப்பட்டிருக்கவில்லை. | இருப்பு ஏற்பாட்டிற்காக காலாவதியான மற்றும் பயன்படுத்த முடியாத இருப்புகள் மாத்திரம் கருத்திற் கொள்ளப்படுகிறது. | -மேற்படி- |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| i. | மீளாய்வாண்டிற்கான உண்மையான வருமான வரியை இனங்காண்பதற்கு விபரமான வருமான வரிக் கணிப்பீட்டை மேற்கொள்ளாது 2019 ஆம் ஆண்டில் செலுத்திய ரூபா 138,860,749 பொருளாதார சேவைக் கட்டணம் (ESC) மீளாய்வாண்டின் விரிவான வருமானக் கூற்றில் நடப்பாண்டு வருமான வரியாக தவறாக இனங்காணப்பட்டிருந்தது. | பொருளாதார சேவைக் கட்டணம் (ESC) ஆனது 2021.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களிலுள்ள விரிவான வருமானக் கூற்றில் செலவினமொன்றாக தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. | விரிவான வருமானக் கூற்றிலுள்ள வரிருமான வரிச் செலவினத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். |
| ii. | 2016/2017 மதிப்பீட்டு ஆண்டிற்கான பொருளாதார சேவைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டிய வீதம் 2016 ஏப்ரல் 01 முதல் அமுலுக்குவரும் வகையில் 0.5 சதவீதமாக திருத்தப்பட்டிருந்த | திணைக்களத்துடன் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு | ESC இற்காக உரிய ஏற்பாட்டை செய்வதற்கும் அதனைச் செலுத்துவ |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், 0.25 சதவீதத்தின் அடிப்படையிலேயே அது செலுத்தப்பட்டிருந்தது. ஆகையால், உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் தண்டப்பணம் உள்ளடங்கலாக ரூபா 128.76 மில்லியனுக்கு மதிப்பீடொன்று செய்யப்பட்டிருந்தது. சபையின் பதிவேடுகளின் படி, வீதத்தின் மாற்றம் காரணமாக ரூபா 66.37 மில்லியன் தொகையை (தண்டப்பணம் அடங்கலாக) சபை செலுத்துதல் வேண்டும். இருப்பினும், எஞ்சிய செலுத்த வேண்டிய வருமான வரிக்காக மீளாய்வாண்டின் இறுதிவரை கணக்குப் புத்தகங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வருகின்றது. | தற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| iii. | 2015 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையயாய்வின் போது குருணாகல் பிராந்திய அலுவலகத்தில் 16 நீர் வழங்கல் திட்டங்கள் தொடர்பாக ரூபா 65,852,393 கூட்டுமொத்த பெறுமதியான நிலையான சொத்துக்கள் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் நீண்ட காலமாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இருப்பினும், அவற்றை கணக்குப் புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. மேலும், கணக்காய்வில் மேற்கொள்ள ப்பட்ட கணப்பீட்டின் படி, மீளாய்வாண்டிற்காக அவற்றின் மீது ரூபா 851,398 பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை வெளிப்பட்டிருந்ததுடன், முன்னைய ஆண்டிற்கான பெறுமானத்தேய்விப்படக் கூடிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 40,605,148 ஆகும். | அங்கீகாரத்தை பெற்றுக் கொண்ட பின்னர் இந்தப் பெறுமதிகளை கணக்குப் புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பயன்படுத்தப்பட முடியாத சொத்துக் களை அகற்றுவத ற்கும் கணக்குப் புத்தகங்களிலிருந் து அவற்றை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக் கப்பட வேண்டும். |
| iv. | சொய்சாபுர மற்றும் கொலன்னாவ கழிவுநீர் பிரிவுகளிற்கு உரித்தான ரூபா 4,900,000 பெறுமதியான 252-7905,252-8054 மற்றும் PA-2052 ஆம் இலக்கமுடைய மூன்று வாகனங்கள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கணக்குப் புத்தகங்களிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை. மேலும், கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் படி அந்த வாகனங்களிற்காக வருடாந்தம் ரூபா 445,000 தொகை பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்க வேண்டும். | 2022.06.30 இல் உள்ள வாறு இவை கணக்குக ளிற்கு எடுக்கப்பட்டன. | கணக்குப் புத்தகங் களில் பதியப்பட்ட நிலையான சொத் துக்களின் சரியான தன்மை, முழுமை த்தன்மை மற்றும் காணப்படு தன்மை யினை உறுதிப்படு த்த வேண்டும். |
| v. | சபையின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் அல்லது கணக்குப் புத்தகங்களில் பதியப்படாத நான்கு நிலையான சொத்து விடயங்கள் மீளாய்வாண்டில் கைதவிர்க்கப்பட்டிருந்தன. இருப்பினும், அவை கொள்வனவு செய்யப்பட்ட | 49-0557 ஆம் இலக்க உழவு இயந்திரத்திற்குரிய சுமைப்பெட்டி (46-5186) இன் கிரயம் அதனுடன் இணைக்கப்ப | கைதவிர்ப்பு இலாபக் கணிப்பீட்டின் சரியான தன்மை யை உறுதிப்படு த்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதியை கருத்திற்கொண்ட பின்னர் முன்னைய ஆண்டுகளிற்கான பெறுமானத்தேய்வு ஏற்பாட்டிற்கு உரிய சீராக்கலை மேற்கொள்ளாது ரூபா 1,178,000 தொகையான விற்பனை வருமானம் மீளாய்வாண்டின் இலாபமாக அங்கீகரிக்கப்பட்டிருந் தது. | ட்டுள்ளது. எஞ்சிய மூன்று வாகனங்கள் பேரேட்டில் பதியப்படாதிருந்ததுடன் பெறுமானத்தேய்வு ஏற்பாடு எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, விற்பனை வருமானமானது கைதவிர்ப்பு இலாபமாக கருதப்பட்டு வருமானக் கூற்றிற்கு சாட்டப்பட்டது. | |
| vi. | அம்பாறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் வடமத்திய ஆகிய பிராந்திய அலுவலகங்களின் கீழுள்ள 05 கிரய நிலையங்களுடன் தொடர்புடைய ரூபா 24,797,847 கூட்டுத் தொகையான பெறுமதியுடைய நிலையான சொத்துக்களை மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்ததுடன் பௌதீக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் அவை பௌதீக ரீதியாக காணப்படவுமில்லை. அத்துடன் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவுமில்லை. எனினும் அவற்றை கணக்குப் புத்தகங் களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது மீளாய்வாண்டின் போது ரூபா 605,749 பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டிருந்தது. | பௌதீக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம், இந்த சொத்துக்கள் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டதுடன் அவை காணப்படுகின்றன. மீளாய்வாண்டின் போது பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதுடன், விடுபாடுகள் எதுவும் இல்லை. | கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் சரியான தன்மை, பூரணத் தன்மை மற்றும் இருக்கும் தன்மை உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| vii. | வட மத்திய பிராந்திய உதவி நிலையம், வவுனியா, யாழ்பாணம், கிழக்கு, அம்பாறை, அக்கரைப்பற்று மற்றும் மட்டக்களப்பு பிராந்திய அலுவலகங்களின் பௌதீக மெய்மையாய்வின் பிரகாரம், ரூபா 52,399,850 கூட்டுமொத்தப் பெறுமதியுடைய இருபத்திரண்டு கிரய நிலையங்களுக்கு உரித்தான இறையில் கட்டிடங்கள், கட்டமைப்புக்கள், கீழ்க்கட்டமைப்புகள், கணனி மற்றும் ஏனைய உபகரணங்கள், நிலஅளவை உபகரணங்கள் மற்றும் கைப்பேசி உபகரணங்கள் போன்றவை சேதடைந்து பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும், அத்தகையை சொத்துக்களை அகற்றுவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 1,637,717 பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சபை பத்திரத்திற்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் மற்றும் திறைசேரியின் ஒத்திசைவுடன் கைதவிர்ப்பு மேற்கொள்ளப்பட்டதுடன் இதற்காக ஓரளவு காலம் எடுக்கும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| viii. | வட மத்திய பிராந்திய உதவி நிலையம், மாத்தளை, கடுகஸ்தோட்டை, வவுனிய மற்றும் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகங்களின் பௌதீக மெய்மையாய்வின் போது தெளிவாக இனங்காணப்பட்டிருக்காத ரூபா 946,780,882 கூட்டுமொத்தப் பெறுமதியுடைய 66 நிலையான சொத்து விடயங்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலும் கணக்குப் புத்தகங்களிலும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீது மீளாய்வாண்டின் போது ரூபா 39,211,284 பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இது எதிர்வரும் நிலையான சொத்து மெய்மையாய்வின் போது திருத்தப்படும். | -மேற்படி- |
| ix. | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான புதிய இணைப்பு கடன்பட்டோர் உள்ளடங்கலாக வியாபார கடன்பட்டோர் மீதி ரூபா 7,733,111,838 ஆக காணப்பட்டது. எவ்வாறாயினும், ரூபா 7,662,021,591 தொகையான கடன்பட்டோருக்காக மாத்திரம் நட்டக் கழிவிற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆகையால் ரூபா 71,090,247 கூட்டுத்தொகையான கடன்பட்டோருக்காக எவ்வித ஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன், நிதிக்கூற்றுக்களிலுள்ள செயற்பாடற்ற சொத்துக்களில் உள்ளடங்கியுள்ள ரூபா 3,743,920 ஏனைய கடன்பட்டோருக்காக எந்த ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கவில்லை. | வர்த்தக முறையிமையினால் வழங்கப்பட்ட உண்மையான தொகைக ளின் அடிப்படையில் காலத்தேய்மான கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. | கடன்பட்டோருக்கான நட்டக்கழிவு ஏற்பாடுகளின் சரியான தன்மை உறுதிப்படுதப்படுதல் வேண்டும். |
| x. | 2021 ஏப்ரல் அன்று பொது முயற்சிகள் திணைக்களத்தினால் பதிவழிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த ரூபா 1,243,209 வியாபாரக் கடன்பட்டோர் தொகையினை மீளாய்வாண்டிற்கான இலாபத்திற்கு சாட்டுதல் செய்வதற்குப் பதிலாக முன்னைய ஆண்டுச் சீராக்கமாக வருட ஆரம்பத்தில் காணப்பட்ட நிறுத்திவைத்த நட்டத்திற்கு சீராக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான இலாபம் அத்தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது. | 685 ஆவது பேரேட்டுக் கணக்கிற்கு வரவு வைப்பதற்காக முன்னைய ஆண்டுச் சிராக்கத்திற்கான நாளேட்டு உறுதிச்சீட்டு தயாரிக்கப்பட்டு வருகின்றது. | ஐயக்கடன் பதிவழிப்பாக இலாபத்திற்கு சாட்டப்பட்ட தொகையின் சரியான தன்மை உறுதிப்படுதப்படுதல் வேண்டும். |
| xi. | செயற்திட்டங்களிற்காக ஒப்பந்த காரர்களிற்கு சபையால் செலுத்தப்பட்டிருந்த ரூபா 12,697,619 தொகையான பெறுமதிசேர் வரி சபையின் வெளியீட்டு வரியாக ஏற்கனவே அறவிடப்பட்டிருந்த போதிலும், அத்தொகையினை பெறவேண்டிய வெற் வரியாக இனங்காண்பதற்குப் பதிலாக பிழையாக நடைபெற்று வரும் வேலையாக இனங்காணப்பட்டிருந்தது. ஆகையால், நிதிக்கூற்றுக்களிலுள்ள நடைபெற்று வரும் வேலை ஒத்த தொகையால மிகைத்துக் கூறப்பட்டிருந்ததுடன் பெறவேண்டிய வெற் கணக்கு குறைத்துக் கூறப்பட்டிருந்தது. | அது திருத்தப்படும். | வுழங்குனர்களிற்குச் செலுத்திய வெற் வரியை சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| xii. | பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், ரூபா 70,625.98 மில்லியன் தொகையான பூர்த்திசெய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட நூற்றிப் பதினான்கு (114) நீர் வழங்கல் மற்றும் புனரமைப்புச் செயற்திட்டங்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூலதனமாக்கப்படாமல் நடைபெறும் வேலையில் காணப்பட்டிருந்தது. | அவற்றை சொத்துக் களிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்ப டும். | பூர்த்தி செய்யப் பட்டு அங்கீகரிக்க ப்பட்ட நீர் வழங் கல் மற்றும் புனர மைப்புச் செயற்திட் டங்களை மூலதன மாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண் டும். |
| xiii. | மீள உயிர்ப்பித்தல் வேலைகளிற்காக கிடைத்திருந்த முற்பணங்களில் அக்கரைப்பற்று, அம்பாறை பிராந்தியம், மேற்கு மத்திய பிராந்திய உதவி நிலையம் மற்றும் தென் மேற்கு பிராந்திய உதவி நிலையங்களுடன் தொடர்புடைய ரூபா 171,985,691 முற்பணத் தொகைக்குரிய 44 செயற்திட்டங்கள் 2014 முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை பூரணப்படுத்தப்பட்டிருந்தன. இருப்பினும், அவற்றை மூலதனமாக்குவதற்கு அல்லது எஞ்சிய தொகைகளை உரிய வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கு 2022 ஏப்ரல் 30 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவை 2022 ஆம் ஆண்டில் பூரணப்படுத்தப் படும். | செயற்திட்டங்கள் முடிவடைந்தவுடன் உயிர்ப்பித்தல் வேலைகளிற்காக கிடைத்திருந்த முற்பணங்களை உரிய வருமானக் கணக்கிற்கு செலவு வைப்பத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண் டும். |
| xiv. | 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிற்குரிய தான முன்னைய ஆண்டுச் சீராக்கங்களை 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்களில் சபை மேற்கொண்டிருந்தது. அதன் விளைவாக 2020 ஆம் ஆண்டின் இறுதியில் நிறுத்தி வைக்கப்பட்ட நட்டம் ரூபா 123.22 மில்லியனால் தவறாக காட்டப்பட்டிருந்தது. ஆகையால் எதிர்வரும் ஆண்டிலும் மீளாய்வாண் டிற்கான இலாபத்திற்கு சீராக்கங்களை மேற்கொள்வதற்கான சாத்தியத்தன்மையை கணக்காய்வில் மறுக்க முடியாதுள்ளது. | எல்கேஎஸ் 8 இன் பிரகாரம் முன்னைய காலப்பகுதிக்கான வழுக் களை சீராக்குவதற்கு ஒழுங்குமுறை தேவைப் பாடு காணப்படுகின்றது. ஆகையால் சபை அந்த தேவைப்பாடுகளுடன் இணங்கியுள்ளது. | வழக்கத்தில் முன் னைய ஆண்டுச் சீராக்கத்தை மேற்கொள்வதன் மூலம் இலாபங்கள் தவறாக காட்டப்ப டுவதை தவிர்ப்பத ற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண் டும். |
| xv. | ஏழு (07) செயற்திட்டங்கள் தொடர்பாக நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்பட்ட ரூபா 198,729,791 கூட்டுமொத்தமான மீதிகள் நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்களை மேற்கொள்ளும் பொருட்டு புலனாய்வு செய்யப்படாமல் பன்னிரண்டு ஆண்டுகளிற்கு மேலாக மாற்றமடையாதிருந்தன. | பல்வேறு கட்டங்களில் பூரணப்படுத்தல் விலை மதிப்பீடுகளும் அங்கீகார ங்களும் பெறப்பட்டன. சொல்லப்பட்ட செயற்திட் டங்கள் இதுவரை மேற்குறித்த செயல் முறையிலேயே காணப்ப டுகின்றன. | பூர்த்தி செய்யப்ப ட்டு அங்கீகரிக்கப் பட்ட நீர் வழங்கல் மற்றும் புனரமைப்பு செயற்திட்டங்களை மூலதனமாக்குவத ற்கு நடவடிக்கை கள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| xvi. | நலன்புரி நிதியத்திலுள்ள ரூபா 12,506,980 தொகை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களிலுள்ள மூலதன அறவீட்டுக் கட்டண வருமான மூலத்திற்கு எதிராக எவ்விதக் காரணமும் இன்றி சீராக்கப்பட்டிருந்தது. ஆகையால், விரிவான வருமானக் கூற்றிலுள்ள ஆண்டிற்கான தேறிய இலாபம் ஒத்த தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், அதில் உள்ளடங்கியுள்ள ரூபா 1,199,700 தொகை 2020 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த சமூகப் பொறுப்பு நிதியத்திற்காக கிடைத்திருந்த தொகை என்பது அவதானிக்கப்பட்டது. | இது ஒரு கணக்கீட்டுச் சீராக்கம் என்பதுடன், இந்த கொடுக்கல் வாங்கலை வெளிப்படுத்துவதற்காக கடந்த பல ஆண்டுகளாக இது செய்யப்பட்டு வருகின்றது. | செய்யப்பட்ட கணக்கீட்டுச் சீராக்கல்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பித்தல் ஆகியவற்றின் சரியான தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். |
| xvii. | பெரும் குருணாகல் கழிவுநீர் முறைமை பராமரித்தல் தொடர்பில் சபைக்கும் குருணாகல் நகர சபைக்கும் இடையே 2021 மார்ச் இல் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி ரூபா 2.5 மில்லியன் மாதாந்த வருமானம் நகர சபையிடமிருந்து கிடைக்க வேண்டியிருந்தது. இருப்பினும், 2021 ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரையான ஐந்து மாதங்களிற்கான வருமானமான ரூபா 12.5 மில்லியன் தொகை கணக்குப் புத்தகங்களில் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | கழிவுநீர் கட்டணத்தை சேரிப்பதற்காக கடன்பட்டோர் பதிவேட்டை பராமரிப்பதற்கும் மாதாந்தம் அதனை பின்தொடர்வதற்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | கழிவுநீர் வருமான அங்கீகரிப்பின் சரியான தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். |
| xviii. | ஏனைய கடன்பட்டோர், முற்பணங்கள், வியாபார கடன்கொடுத்தோர், உரிமைகோரப்படாத சம்பளங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய ரூபா 149,748,448 மற்றும் ரூபா 71,927,749 தொகையான முறையே சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நீண்டகால நிலுவை மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்காமல் செயற்பாடற்ற சொத்துக்கள் மற்றும் செயற்பாடற்ற பொறுப்புக்களாக இனங்காணப்பட்டிருந்தன. மேலும் ரூபா 95,796,513 இனங்காணப்படாத முன்னைய ஆண்டு மீதி, நான்கு பிராந்தியங்களிற்குரிய ரூபா 22,007,307 இருப்பு மீதி மற்றும் ரூபா 5,906,882 வங்கி மீதிகளை புலனாய்வு செய்து தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் செயற்பாடற்ற சொத்துக்களாக மேற்குறிப்பிடப்பட்ட மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | கைகள் மூலமான பதிவுசெய்தல் முறைமை கணனிமயப்படுத்தப்பட்டதன் காரணமாக 1999 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து வருகின்றன | செயற்பாடற்ற சொத்து மற்றும் பொறுப்பு மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| xix. | ஐந்து ஆண்டுகளிற்கு முன்னர் களனிய பிராந்தியத்தில் களவாடப்பட்டிருந்த ரூபா 2,549,788 தொகையான இருப்புகள் மற்றும் மேற்கு மத்திய பிராந்திய உதவி நிலையம் (கொலன்னாவ) மற்றும் கிளிநொச்சி | இந்த இருப்பு மீதிகள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. விசாரணைகள் | இந்த இருப்பு மீதிகளை புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | பொறியியலாளர் அலுவலகம் ஆகியவற்றின் முறையே ரூபா 1,211,323 மற்றும் ரூபா 1,633,256 இருப்புப் பற்றாக்குறை என்பன 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சரக்கிருப்பில் உள்ளடங்கியிருந்தன. இருப்பினும், அந்த நட்டத்தை தொடர்புடைய உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முடிவடைந்ததும் கணக் குப் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடி க்கை எடுக்கப்படும்.<br>**கொஹுவல இருப்பு பற்றாக்குறை**<br>ரூபா 218,857.64 பெறுமதியான இருப்பு புத்தகப் பதிவு திருத்தம் என இனங்காணப்பட்டது. ரூபா 270,572.40 இருப்பு தொடர்பில் பொலிஸ் விசாரணை இடம்பெற்று வருவதுடன், தீர்ப்புக்காக காத்திருக்கப்படுகின்றது. எஞ்சிய ரூபா 721,893.47 தொடர்பில் விசாரணை இடம்பெற்று வருகின்றது. | எடுப்பதுடன், நட்ட த்தை தொடர்பு டைய உத்தியோ கத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண் டும். |
| xx. | 2020 யூலை 02 அன்று எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய, தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து பெறப்பட்ட ரூபா 30 பில்லியன் கடன் மீதான வட்டிக் கிரயம் திறைசேரியால் பொறுப்பேற்கப்படுவதுடன், முன்னைய ஆண்டில் அந்தக் கடன் மீதான ரூபா 699,702,314 வட்டியை சபை பொறுப்பேற்க வேண்டும். இருப்பினும், அதில் ரூபா 659,277,279 தொகை மாத்திரமே திறைசேரியிடமிருந்து பெறப்பட வேண்டியதாக மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருந்ததுடன், அத்தொகையேனும் 2022 மார்ச் இறுதி வரை திறைசேரியிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவை தீர்மானத் திற்கு அமைய வட்டிக் கிரயம் திறைசேரியால் பொறுப்பேற்கப்படுகிறது. அத்துடன், அது சபையால் செலுத்தப்பட வேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | திறைசேரியிடமிரு ந்து பெறவேண்டிய வற்றை அங்கீகரிக் கையில் ஏற்பட்ட தவறை திருத்துவ தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண் டும். |
| xxi. | செயற்பாட்டிலுள்ள ஆறு செயற்திட்டங்களுடன் தொடர்புடையதாக முன்னைய ஆண்டிற்கான வட்டிச் செலவினமாக இனங்காணப்பட்டிருக்க வேண்டிய (சபை மற்றும் திறைசேரியின் பங்கு உள்ளடங்கலாக) ரூபா 821,996,056 தொகை மீளாய்வாண்டிற்கான வட்டிச் செலவினமாக இனங்காணப்பட்டிருந்தது. ஆகையால், ஆண்டின் ஆரம்பத்திலுள்ள நடைபெற்றுவரும் வேலைகள் ஒத்த தொகையால் குறைத்துக் கூறப்பட்டுள்ளது. | குறித்த செயற்திட்டங் களுக்குரிய உண்மை யான வட்டிச் செலவினம் நிதியளிப்போரிடமிருந்து வட்டிக் கொடுப்பனவு அறிவித்தல் கிடைக்கின்ற போது இனங்காணப்படு வதுடன், நாம் மதிப்பீட்டு வட்டிச் செலவினத்தையே 2021 ஆம் ஆண்டிற்கான அட்டுறு வட்டியாக காட்டியுள்ளோம். | நிதிக்கூற்றுக்களில் நடைபெற்று வரும் வேலையாக அங்கீ கரித்துள்ள வட்டிச் செலவினத்தின் சரியான தன்மை யை உறுதிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| xxii. | பதினேழு (17) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் அட்டுறு வட்டி தொடர்பாக வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தலை நிதிக்கூற்றுக்களிலுள்ள மீதிக ளுடன் ஒப்பிடும் போது ரூபா 318,850,651 தொகையால் குறைவாக ஏற்பாடு செய்யப்பட்டி ருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகையால், மீளாய்வாண்டிற்கான அட்டுறு வட்டியும் இலாபமும் ஒத்த தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தன. | வங்கி 2021.12.30 இல் உள்ளவாறான வட்டியை அறிவித்திருந்ததுடன், அத்தொகை நிதியாண் டின் இறுதியில் அட்டுறு எனக் காட்டப்பட்டது. ஆனால், வங்கி உறுதிப் படுத்தலுக்கான உண் மையான வட்டி 2021.12.31 இற்காக தரப் படுகின்றது. | ஆண்டிறுதிக் கடன் மீதிகள் மற்றும் அவற்றின் மீதான அட்டுறு வட்டிக ளின் கணிப்பீட்டின் சரியான தன்மை யை உறுதிப்படுத்த வேண்டும். |
| xxiii. | பியகம மற்றும் சீதாவக முகாமையளர் அலுவலகங்கள் தொடர்பில் செப்தம்பர் மாதத்திற்கான ரூபா 5,013,530 கழிவுநீர் வருமானம் மற்றும் ஆகஸ்ட் மாதத்திற்கான ரூபா 8,040,601 கழிவுநீர் வருமானம் என்பன இரண்டு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. ஆகையால், ரூபா 13,054,131 தொகையால் மீளாய்வாண்டிற்கான நட்டம் குறைவாகவும் கழிவுநீர் கடன்பட்டோர் அதிகமாகவும் காட்டப்பட்டிருந்தன. | சீதாவக தொடர்பில் அந்த அதிகரித்துக் காட் டப்பட்ட பதிவை திருத்து வதற்காக முன்னைய ஆண்டுச் சீராக்கத்தை மேற்கொள்வதற்கு ஏற்க னவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் கழிவுநீர் வருமான அங்கீகரிப்பின் சரி யான தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். |
| xxiv. | கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் படி மீளாய்வாண்டின் இறுதியில் முதலீடுகள் மீது பெறப்பட வெண்டிய வட்டி மீதி ரூபா 1,500,542 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. அதன் விளைவாக, ஆண்டின் ஆரம்பத்திலுள்ள நிறுத்திவைக்கப்பட்ட நட்டம் மற்றும் மீளாய்வாண்டிற்கான நட்டம் என்பன முறையே ரூபா 1,476,322 மற்றும் ரூபா 24,220 ஆல் குறைத்துக் கூறப்பட்டுள்ளன. | அது 2022 ஆம் ஆண்டில் திருத்தப்படும். | நிதிக்கூற்றுக்களில் வட்டி வருமான அங்கீகரிப்பின் சரி யான தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். |
| xxv. | 85304025 ஆம் இலக்க நிலையான வைப்பு தொடர்பில் 2020 (28/12/2020 முதல் 31/12/2020 வரை) ஆம் ஆண்டிற்கான ரூபா 302,055 வட்டித் தொகை மீளாய்வாண்டிலும் அவ்வாறே முன்னைய ஆண்டிலும் வட்டி வருமானமாக இனங்காணப்பட் டிருந்தது. மேலும், 85304053 ஆம் இலக்க நிலையான வைப்பு தொடர்பில் பெறவேண்டியி ருந்த ஆரம்ப வட்டி மீதி மீளாய்வாண்டில் ரூபா 86,302 குறைவாகப் பெறப்பட்டிருந்தது. | 85304053 ஆம் இலக்க நிலையான வைப்பு தொடர்பில் பெறவேண்டி யிருந்த ரூபா 86,301.37 வட்டி அறவிடப்பட்டதுடன் தவறு 2022 ஆம் ஆண்டில் திருத்தப்பட் டது. நிலையான வைப்பு (85304025) தொடர்பி லான உள்ளபடியான வட்டி வருமானம், பெற வேண்டியிருந்த ரூபா 302,054.79 தொகை 2021 திசெம்பர் 29 அன்று திருத்தப்பட்ட பின்னர் சரியாக பதியப்பட்டது. | உரிய காலப்பகுதி க்கான வட்டி வரு மானம் சரியாகப் பதியப்பட்டுள்ளதை யும் வருட ஆரம்ப த்தில் பெறவேண்டி யிருந்த வட்டி வருமானம் மீளாய் வாண்டில் பெறப்ப ட்டதையும் உறுதிப் படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| xxvi. | 83641912 என்ற எண்ணைக் கொண்ட நிலையான வைப்புத்தொகை தொடர்பாக 2021 செப்டம்பர் 30 முதல் 2021 டிசம்பர் 30 வரையிலான காலப்பகுதியுடன் தொடர்புடைய ரூபா 4,986,301 வட்டி மீளாய்வாண்டில் வட்டி வருமானமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே மீளாய்வாண்டிற்கான இலாபம் அதே அளவால் குறைத்துக் கூறப்பட்டுள்ளது. | அது 2022 சனவரி 31 இல் பதியப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டின் வட்டி வருமான அங்கீகரிப்பின் சரியான தன்மை யை உறுதிப்படுத்த வேண்டும். |
| xxvii. | பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் மேம்பாட்டு முதலீட்டுச் செயற்திட்டத்தின் ரூபா 2,816,590 பொதுச் செலவுகள் (சிறப்பு முற்பணம் ரூபா 80,198 உட்பட) நடைபெற்றுவரும் வேலையில் சபையின் காசுக் கட்டுநிதிக் கணக்கிலும் (00/2/59/289/1) இருமுறை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக, காசுக் கட்டுநிதிக் கணக்கில் ரூபா 2,816,590 அசாதாரணமான செலவு மீதி காணப்பட்டது. அதேபோன்று, ஆண்டின் இறுதியில் நிலுவையில் உள்ள நடைபெற்றுவரும் வேலைகள் (சிறப்பு முன்பணம் ரூபா 80,198 உட்பட) இதனையொத்த தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | உரிய பேரேட்டுக் கணக் குகளிற்கு திருத்தும் பதிவுகள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன. | இடம்பெற்ற செல வினம் சரியாக பொதுப் பேரேட்டில் பதியப்பட்டமையை உறுதிப்படுத்த வேண்டும். |
| xxviii. | நாற்பது பிராந்தியங்களிலுள்ள ரூபா 131,828,414 மதிப்பிலான ஏலம் விடக்கூடிய கையிருப்பு பொருட்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்காமல், அதுவும் நிதிநிலைமை கூற்றில் இருப்புகளாக அடையாளம் காணப்பட்டிருந்தது. | ஏற்கனவே ஏலமிடுவதற் காக அனுப்பி வைக்கப்ப ட்டுள்ள ஏலமிடல் பொரு ட்களை இது பிரிதிநிதித் துவம் செய்வதுடன் இருப்பு சரிபாத்தலின் போது இவை களஞ்சிய த்தில் இருக்கவில்லை. | ஏலம் விடக்கூடிய கையிருப்பு பொரு ட்களை அப்புறப்ப டுத்தவும் அவற்றை இருப்பிலிருந்து அகற்றவும் நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |
| xxix. | ரூபா 2,000,000 செலவில் 2000 ஆம் ஆண்டுக்கு முன் கொள்வனவு செய்யப்பட்டு மேற்கு உற்பத்தி பிராந்திய ஆதரவு மையத்தின் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த குழாய் வெட்டும் இயந்திரத்தை, மீளாய்வாண்டின் இறுதியிலும் கூட மூலதனமாக்க எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்புப் பொருளாக அடையாளம் காணப்பட்டிருந்தது. | அவை வழங்கப்படுகை யில் இவை முலதனமாக் கப்படும். | கொள்வனவு செய் யப்பட்ட நிலை யான சொத்துக்கள் அங்கீகரிப்பு எடு கோள்களை பூரணப்படுத்தி மூல தமாக்கப்பட்டு தேய்மானம் செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| xxx. | களுத்துறை பிரதேசத்தில் வருடத்தின் போது வழக்கிழப்புச் செய்யப்பட்ட ரூபா 3,197,000 பெறுமதியான நீர் பவுசர் ஒன்று மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கணக்குப் புத்தகங்களிலிருந்து அகற்றப்படாமல் இருந்ததோடு கணக்குப் புத்தகங்களில் மீளாய்வாண்டிற்கான தேய்மானமாக ரூபா 159,850 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை மீள விலைமதிப்பதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட் டதுடன் 2022 ஆம் ஆண்டில் கணக்கிற்கு எடுக்கப்படும். | கணக்குப் புத்தக ங்களில் பதியப்ப ட்ட நிலையான சொத்துக்களின் சரியான மற்றும் முழுமைத் தன்மை யை உறுதிப்படுத்த வேண்டும். |
| xxxi. | 2018 நவம்பரில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து தென் மேற்கு பிராந்திய ஆதரவு நிலையத்தின் கீழுள்ள வஸ்கடுவ களஞ்சியசாலைகளுக்கு பெறப்பட்ட இருப்புப் பொருட்களின் பெறுமதியை மீளாய்வாண்டின் இறுதியிலும் கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எவ்வாறாயினும், விவரங்கள் எதுவும் கிடைக்காததால் இந்த விடுபாடு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்பட்ட தாக்கத்தை கணக்காய்வில் கண்டறிய முடியவில்லை. | சிக்கலை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்ப டும். | கணக்குப் புத்தக ங்களில் பதியப்ப ட்ட இருப்பு மீதிகளின் சரியான மற்றும் முழுமைத் தன்மையை உறுதி ப்படுத்த வேண்டும். |
| xxxii. | மீளாய்வாண்டின் இறுதியில் இருப்புச் சீராக்கல் கணக்கில் இருந்த அடையாளம் காணப்படாத ரூபா 155,974,054 இருப்பை அகற்ற எந்த நடவடிக்கையும் எடுக்காமல் நிதிக் கூற்றுக்களில் இருப்புத் தொகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மாத்தளை, கொஹுவளை, யாழ்ப்பாணம் கிளிநொச்சி களஞ்சியசாலைகள், பண்டாரகம ஐஓசி அலுவலகம் மற்றும் வாரியபொல நிலக்கீழ் நீர் பிரிவு ஆகியவற்றில் அடையாளம் காணப்பட்டிருந்த ரூபா 2,086,329 கையிருப்பு பற்றாக்குறையை முறையான விசாரணைக்குப் பிறகு கணக்குப் புத்தகங்களிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது. மேலும் மாத்தளை பிராந்திய அலுவலகம் தொடர்பான இருப்புச் சீராக்கல் மீதியான ரூபா 81,407,868 இல், கடந்த வருடங்களில் இருப்புக் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்யத் தவறியதன் காரணமாக ஏற்பட்டிருந்த ரூபா 41,739,680 வேறுபாடும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவற்றை அகற்றவோ அல்லது பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவோ முறையான நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் இறுதி வரை நிதிக் கூற்றுக்களில் சரக்கிருப்பாக அடையாளம் | 2021 ஆம் ஆண்டின் இருப்புக் கணிப்பீட்டின் போது இணங்காணப் பட்ட உயர் விலை முரணானது உண்மை யான முரண் கணக் கிணக்கம் செய்யப்படும் வரை இருப்புச் சீராக்கல் கணக்கிற்கு மாற்றப்பட்ட துடன், அதன்பின்னர் கணக்கிணக்கம் செய்து பதிவுகளை அகற்றுவத ற்கு நடவடிக்கை எடுக்க ப்பட்டது. சில களஞ்சிய ங்களில் இருப்புக் குறை வுகள் அடையாளம் காணப்பட்டதுடன், விசார ணை நடவடிக்கைகள் முடியும் வரை அவை கணக்குப் புத்தகங்களில் பதியப்பட்டன.<br>ரூபா 81,407,868 இருப்புப் பற்றாக்குறையை சீர்படுத்த குழுவொன்று நியமிக்கப்பட்டது.<br>கொஹுவல களஞ்சியத் தில் மெய்மையாய்வு செய்த இருப்பு | வேறுபாடுகளிற்கா ன காரணங்களை கண்டறிய உடனடி யாக நடவடிக்கை எடுப்பதுடன் அதனை கணக்கி ணக்கம் செய்து பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தருக் கு எதிராக நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டிருந்தது. | மீதிகளின் பிரதி ADDL இற்கு அனுப்பிவைக்கப்பட்டது. பொது முகாமையாளர் (மனிதவளம்) விசாரணை நடத்துகின்றார். களனிய இருப்பு மீதிகள் விசாரணை இடம்பெற்று வருவதால் தொடர்ந்து வைக்கப்பட்டுள்ளது. | |
| xxxiii. | ”அனைவருக்கும் நீர்” செயற்திட்டத்திற்காக இறக்குமதி செய்யப்பட்டிருந்த சரக்குகளுக்கான தாமதக் கட்டணத்திற்காக மீளாய்வாண்டில் ஒப்பந்ததாரரால் ரூபா 23,805,258 தொகை செலுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதியில் அதற்காக எந்த ஏற்பாடுகளும் கணக்குப் புத்தகங்களில் செய்யப்பட்டிருக்கவில்லை. | நிகழத்தக்க நிகழ்வுகள் மீதான அனைத்து தகவல்களும் உரிய தரப்பினரிடமிருந்து கோரப்பட்டதுடன், அந்த தகவல்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. | நிகழத்தக்க பொறுப்புகள் அனைத்தும் இனங்காணப்பட்டதை உறுதிப்படுத்தி நிதிக் கூற்றுக்களை வழங்குவதற்கு அங்கீகாரம் அளிப்பதற்கு முன்னர் அவற்றை அறிவித்தல் வேண்டும். |
| xxxiv. | கணக்காய்விற்காக வழங்கப்பட்ட தகவல்களின்படி, அம்பாந்தோட்டை பிரதேசத்தில் கிரம கட்டுவன நீர் வழங்கல் திட்டத்திற்காக கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்ட காணிகள் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் சபையினால் சட்டப்பூர்வமாக கையகப்படுத்தப்பட்டதை அவதானிக்க முடிந்தது. எவ்வாறாயினும், அத்தகைய காணிகளிற்காக செலுத்தப்பட்ட ரூபா 6,626,000 முற்பணம் நில முற்பணங்களிலும் சபையின் நிலையான சொத்துக்களிலும் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | இந்த செயற்திட்டம் 2022 பெப்ரவரி மாதத்திலேயே தொடங்கப்பட்டது. எனவே, அது காலக்கிரமத்தில் மூலதனமாக்கப்படும். | காணிகளை கையகப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட முற்பணங்கள் மூலதனமாக்கப்படுவதை உறுதிசெய்தல் வேண்டும். |
| xxxv. | 2014, 2017 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,234,790 பெறுமதியான கையிருப்பு பொருட்கள் இருப்பு முகாமைத்துவ முறைமை மற்றும் இரத்தினபுரி பிராந்தியத்தில் உள்ள கணக்குப் புத்தகங்களுக்கு எடுக்கப்பட்டிருக்காமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. எனவே ஆண்டின் இறுதியிலுள்ள சரக்குகளின் பெறுமதி இதே அளவு தொகையால் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | இது தற்போது இனங்காணப்பட்டுள்ளதுடன், அதனை IMS இல் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. | நிதிக் கூற்றுக்களிலுள்ள இருப்பு மீதிகளின் சரியான மற்றும் முழுமைத் தன்மையை உறுதி ப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| xxxvi. | மூன்று மாத காலத்திற்கான ரூபா 900,000 கட்டிட வாடகை அதிகமாக வசூலிக்கப்பட்டிருந்ததுடன் பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு திட்டத்தின் (திட்டம் 01) ஒப்பந்ததாரர்களுக்கான முன்பணங்களுடன் தொடர்புடைய ரூபா 3,029,984 நாணயமாற்று ஆதாயம் ஆண்டின் போது இரண்டு முறை கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. எனவே, ஒப்பந்ததாரர்களுக்கான முற்பணங்கள் மற்றும் ஆண்டின் இறுதியில் நடைபெற்று வரும் பணிகள் முறையே ரூபா 2,129,984 மற்றும் ரூபா 900,000 ஆக அதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ள அதேவேளை சபையின் மீளாய்வாண்டிற்கான நட்டம் ரூபா 3,029,984 ஆல் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. அந்த முற்பணத்திற்கு மேலதிகமாக, வருடத்தின் மூன்றாம் காலாண்டில் கண்டி நகர கழிவு நீர் முகாமைத்துவத் திட்டத்தின் ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால பட்டியல்கள் மூலம் பெறப்பட்ட ரூபா 32,933,980 தொகையானது சபையின் கணக்குப் புத்தகங்களில் இருமுறை கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, ஒப்பந்ததாரர் முன்பண நிலுவைத் தொகை குறைவாகக் கூறப்பட்டும், நடைபெற்றுவரும் பணிகள் அதே அளவு தொகையால் அதிகமாகக் கூறப்பட்டுமிருந்தன. | வீட்டு வாடகை முற்பண த்தை திருத்துவதற்காக தலைமை அலுவலகத் திற்கு நாம் தொடர்பு டைய நாளேட்டுப் பதிவுகளை சமர்ப்பித்துள் ளோம். ஒப்பந்தகாரர் முற்பணம் 2022 பெப்ரவரி இல் திருத்தப்பட்டது. | நிதிக் கூற்றுக்க ளிலுள்ள ஒப்பந்த முற்பண மீதிகள் மற்றும் நடைபெற் றுவரும் பணிகளின் சரியான தன்மை யை உறுதிப்படுத்த வேண்டும். |
| xxxvii. | கண்டி நகர கழிவு நீர் முகாமைத்துவத் திட்டம் தொடர்பாக ஒப்பந்ததாரர் சமர்ப்பித்த பட்டியல் களில் இருந்து சபையால் நிறுத்திவைக்கப்பட்ட ஆண்டின் மூன்றாவது காலாண்டிற்கான ரூபா 52,336,400 பிடிகாசு இருமுறை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனவே மீளாய்வாண்டின் இறுதியில் ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்த வேண்டிய பிடிகாசு மற்றும் நடந்துகொண்டிருக்கும் பணிகள் ஒத்த தொகையால் மிகைத்துக் கூறப்பட்டுள்ளன. | உரிய திருத்தும் பதிவுகள் 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் படும். | நிதிக் கூற்றுக்க ளிலுள்ள செலுத்த வேண்டிய பிடிகாசு மற்றும் நடைபெற் றுவரும் வேலை யின் சரியான மற்றும் முழுமைத் தன்மையை உறுதி ப்படுத்த வேண்டும். |
| xxxviii. | 2012 பெப்ரவரி 13 ஆம் திகதி இரத்தினபுரி பிராந்திய களஞ்சியசாலைக்கு பெறப்பட்ட ரூபா 2,902,933 மதிப்புடைய மோட்டார் மீளாய்வாண்டின் இறுதியில் கூட மூலதனமாக்குவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்புப் பொருளாக அடையாளம் காணப்பட்டிருந்தது. | இந்த பொருள் விடயம் விநியோகிக்கப்படும் வரை இது இருப்பு விடயமாகவே காணப்ப டும். | சபையின் அனை த்து நிலையான சொத்துக்களும் கணக்குப் புத்த கங்களில் உரிய வாறு பதியப்படு ள்ளமையை உறுதிப்படுத்த வேண்டும். |
| xxxix. | மூன்று (03) காணிகளின் பெறுமதிகள், கையகப்படுத்துவதற்காக செலுத்தப்பட்ட | ஆண்டின் இறுதியில், நிதிக் கூற்றுக்கள் தயாரி | கையகப்படுத்திய காணிகளின் பெறு |

| | | |
|---|---|---|
| முற்பணம், நட்டஈடு மற்றும் ஒன்பது (09) காணிகளுக்கு செலுத்தப்பட்ட வட்டித் தொகையான ரூபா 3,340,603 ஆகியன அந்தந்த காணிகளை கையகப்படுத்தியதன் பின்னர் கணிசமான காலம் கடந்திருந்த போதிலும் அவற்றை மூலதனமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ப்பதை துரிதப்படுத்துவதற்காக திசெம்பர் மாதத்தின் வருமானம் மதிப்பிடப்பட்டதுடன் அது நிதிக் கூற்றில் வெளிப் படுத்தப்பட்டது. அதன்படி அந்த மாதத்திற்கான உண்மையான வருமானம் அறிவிக்கப்படவில்லை. | மதி மூலதனமாக்கப்படுவதை உறுதிசெய்தல் வேண்டும். |

### 1.5.4 கணக்கிணக்கம் செய்யாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| i. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளிற்கும் சபையின் வர்த்தக பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட காலப் பகுப்பாய்வு பட்டியல்களில் காட்டப்பட்ட மீதிகளிற்கும் இடையில் வியாபார கடன்பட்டோரில் ரூபா 56,043,212 மற்றும் புதிய இணைப்பு கடன்பட்டோரில் ரூபா 127,184,503 ஆன வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது. | புதிய இணைப்பு பேரேட்டுக் கணக்குகளை கணக்கிணக்கம் செய்வதற்கு பிராந்திய கணக்காளர்களிற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. | இரண்டு முறைமைகளிற்கும் இடையில் வியாபார மற்றும் புதிய இணைப்பு கடன்பட்டோரை கணக்கிணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிதிக் கூற்றுக்களில் வியாபார கடன்பட்டோரின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். |
| ii. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளிற்கும் சபையின் வர்த்தக பிரிவின் அறிக்கையிலுள்ள மீட்டர் விற்பனைகள் மற்றும் மொத்த விற்பனைகளிற்கு இடையில் ரூபா 3,939.7 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளிற்கும் வர்த்தக பிரிவின் அறிக்கையிலுள்ள மீதிகளிற்கும் இடையே அவதானிக்கப்பட்ட கணக்கிணங்காத வேறுபாடு ஏற்கனவே இணக்கம் செய்யப்பட்டதுடன் பிராந்திய கணக்குகளிற்கு நாளேட்டுப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. | நிதிக்கூற்று, வர்த்தக முறைமை மற்றும் வற் வருமான வெளிப்படுத்தல்கள் என்பன கணக்கிணக்கம் செய்யப்பட வேண்டும். |
| iii. | சபையினுடைய நிதிக்கூற்றுக்களுடன் உரிய தனிப்பட்ட செயற்திட்டங்களின் நிதிக்கூற்றுக்களை ஒப்பிடும் போது உலர் வலய நீர் மற்றும் சுகாதார செயற்திட்டம், யாழ்ப்பாணம் கிளிநொச்சி கழிவுநீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம் மற்றும் | ***யாழ்ப்பாணம் கிளிநொச்சி கழிவுநீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம்*** வருடாந்தம் செயற்திட்டங்கள் விபரமான நடை | சபையின் நிதிக்கூற்று மற்றும் செயற்திட்ட நிதிக்கூற்று என்பவற்றிலுள்ள வெளிநாட்டு மானியங்களின் வித்தி |

| | | | |
|---|---|---|---|
| | குருணாகல் நீர் வழங்கல் விரிவாக்கச் செயற்திட்டம் என்பவற்றின் வெளிநாட்டு மானியங்களில் ரூபா 12,316.62 மில்லியன் கூட்டுத் தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | பெற்றுவரும் வேலைகளின் கணக்கிணக்கத்தை தயாரித்துச் சமர்ப்பிக்கின்றன. | யாசங்கள் கணக்கிணக்கம் செய்யப்பட வேண்டியதுடன் அவசியமான உரிய நாட்குறிப்பு பதிவுகள் அனுமதிக்கப்பட வேண்டும். |
| iv. | மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் பிரகாரம், சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைபெறும் வேலை மீதிக்கும் ஆறு (06) வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் தனிப்பிட்ட நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த மீதிகளிற்கும் இடையில் ரூபா 10,633.08 மில்லியன் கூட்டுத் தொகையான வித்தியாம் அவதானிக்கப்பட்டது. மேலும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- (செயற்திட்டம் i, ii மற்றும் iii) மற்றும் ஏஎப்டீ இன் கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் என்பன தொடர்பில் தயாரிக்கப்பட்ட இணக்கக்கூற்றினை பகுப்பாய்வு செய்யும் போது, சபையினுடைய நிதிக் கூற்றுக்களில் ரூபா 15.48 மில்லியன் பெறுமதியான பணிக்கொடை ஏற்பாடு மற்றும் செயற்திட்டப் பதிவியணியினருக்கான கொடுப்பனவுகள் பதியப்பட் டிருக்கவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | **ஆசிய அபிவிருத்தி வங்கியின் கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- (செயற்திட்டம் i)** 2021 ஆம் ஆண்டிற்கான செயற்திட்ட நிதிக் கூற்றுக் களிலுள்ள செயற்திட்ட இல. 02 இன் கீழான செலுத்தவேண்டிய பணிக் கொடைக் கணக்கில் ரூபா 7,777,092.28 என்பதாக இது உள்ளடக்கப்பட்டுள்ளது. நடைபெற்று வரும் வேலையின் வேறுபாட் டிற்கான காரணம் வெற், ஏடீபீ வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணம் அத்துடன் டொலர் மீள்மதிப்பீடு என்பனவாகும். | குறிப்பிடப்பட்டுள்ள வித்தியாசத்தை சரியாக இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| v. | தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் படி, ஐந்து (05) வங்கி கணக்குகள் தொடர்பில் 2015 ஆம் ஆண்டிலிருந்து 2020 வரையான வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களில் ரூபா 6,292,288 மற்றும் ரூபா 361,841 தொகையான முறையே இனங்காணப்படாத வரவு மீதிகள் மற்றும் செலவு மீதிகள் அவதானிக்கப்பட்டதுடன் அவை இதுவரை அகற்றப்பட்டிருக்கவில்லை. | ருத்மலான வங்கிக் கணக்கு இல. 6149 இலுள்ள ரூபா 368,055 வரவு மீதியிலிருந்து ரூபா 183,242.86 அகற்றப் பட்டுள்ளது. ஏனைய மீதிகள் 2022.12.31 இற்கு முன்னர் சீராக்கப்படும். | இனங்காணப்படாத வரவு மீதிகள் மற்றும் செலவு மீதிகள் இணக்கம் செய்யப்பட்டு அகற் றப்படுதல் வேண்டும். |
| vi | அநுராதபுரம் நீர் வழங்கல் செயற்திட்டம் (கட்டம் 1) தொடர்பிலான காசுக் கட்டுநிதிக் கணக்கில் ரூபா 7,351,693 இனங்காணப்படாத செலவு மீதியொன்று காணப்பட்டதுடன் அது 2021 திசெம்பர் 31 வரை அகற்றப்பட்டிருக்கவில்லை. | கணக்கிணக்கம் சமர்ப்பிக் கப்படுகின்றது. | இனங்காணப்படாத மீதிகள் அகற்றப்படு வதனை உறுதிப்படுத்த வேண்டும். |

### 1.5.5 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல் விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| i. | 2015 யூலை 08 ஆந் திகதிய PE/WS/NWSDB/GEN/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள பணிப்பாளரின் கடிதம் மூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் 2016 பெப்ரவரி 04 இல் எடுக்கப்பட்ட அமைச்சரமை தீர்மானம் என்பவற்றின் அடிப்படையில் ரூபா 100,263,323,220 தொகையான நிலுவையாகவிருக்கின்ற கடன் மீதிகள் 2015 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை அரசாங்க உரிமை மூலதன கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பொதுத் திறசேரி பதிவேடுகளின் பிரகாரம, ரூபா 75,388,884,922 இற்கு சமமான தொகை சபைக்குரிய மூலதன பங்களிப்பாக இனங்காணப்பட்டிருந்தது. எனவே, வெளிநாட்டு கடன்களாக சபையால் செலுத்த வேண்டியிருந்த ரூபா 24,874,438,298 இற்கு சமமான தொகை எவ்வித அனுமதியும் இல்லாமல் அரசாங்க உரிமை மூலதன கணக்கிற்கு மீளாய்வாண்டில் மாற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட கொள்கை தீர்மானம் காரணமாக கடன் உரிமை மூலதன த்திற்கு மாற்றப்பட்டி ருந்தது. இதன்படி 2014.12.31 இல் உள்ள வாறு இருக்கின்ற மீதி கள் உரிமை மூலதனத் திற்கு மாற்றப்பட்டிரு ந்தது. மேலும், உரிய கடன்களின் 2014.12.31 இன் பின்னரான கைதவி ர்ப்புகள் அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான அனுமதியின் பிரகரம் பின்னர் உரிமை மூலத னத்திற்கு மாற்றப்பட் டிருந்தது. | திறைசேரியுடன் உரிமை மூலதனமாக மாற்றப்பட்ட மீதியை கணக்கிணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| ii. | சபையின் தொழிற்படு மூலதனம், செயற்திட்ட நிதியளிப்புகள் மற்றும் பொறுப்புக்களைத் தீர்ப்பதற்காக 2020 யூன் 18 அன்று நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை வகுத்தல் அமைச்சரால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் அடிப்படையில், 2020 யூன் 24 அன்று தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து ரூபா 30 பில்லியன் கடனைப் பெறுவதற்கு அமைச்சரவை தீர்மானம் வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், மேற்கூறிய தீர்மானத்திற்கு மாறாக 2019 முதல் 2021 வரையான காலத்தில் மூன்று தடவைகளில் தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து ரூபா 32 பில்லியன் கடனாகப் பெறப்பட்டுள்ளது. மேலும், அந்தக் கடனுக்கான வட்டித் தொகையாக ரூபா 2,181.17 மில்லியன் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்ததுடன், அந்த வட்டியிலிருந்து, அந்தக் கடனின் நிமித்தம் செய்யப்பட்ட கடன் சேவைகளுக்கான வட்டியாக ரூபா 2,080.58 மில்லியனுக்குச் சமமான தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதுமட்டுமல்லாமல், கடனின் நோக்கங்களுக்கு முரணாக, மீளாய்வாண்டில், ”அனைவருக்கும் நீர் திட்டத்திற்கு” ரூபா 66.6 மில்லியன் கடனாகப் பெறப்பட்டிருந்ததுடன் இந்த நோக்கத்திற்காக சபையின் பாதீட்டில் ஏற்கனவே ரூபா 17 பில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. வாரியத்தின் பட்ஜெட். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் | 2020 மார்ச் 19 ஆந் தேதியிட்ட அமைச்ச ரவை முடிவு குறிப்பு: AMP/20/0501/206/018 இற்கு இணங்க, NWSDB இன் நீர் வழங்கல் திட்டங்களுக்கு நிதியளிக்கப்படுவதுடன் பிற அத்தியாவசிய மற்றும் நிதிப் பொறுப்பு களை நிறைவேற்றுவது உள்ளிட்ட தொழிற்படு மூலதனத் தேவைகளு க்காக NWSDB க்கு NSB இனால் கடன் வழங்கப்படுகின்றது. அதன்படி, கம்பஹா அத்தனகல்லை நீர் வழங்கல் (WSP) இற் காக இலங்கை வங்கி க்கு செலுத்த வேண்டிய ரூபா 492,382,118 கடன் சேவைக் கொடுப்ப | கடன்கள் மூலம் பெறப்ப ட்ட நிதிகளை பயன்படுத் துவது தொடர்பில் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தீர்மானத் துடன் இணங்குவதை உறுதிப்படுத்த வேண் டும். |

| | | | |
|---|---|---|---|
| | இறுதியில், தேசிய சேமிப்பு வங்கியின் கடனிலிருந்து அனைவருக்கும் குடிநீர் செயற்திட்டத்திற்காகச் செய்யப்பட்ட தொகைக்காக நீர் வழங்கல் அமைச்சிடமிருந்து ரூபா 10.43 மில்லியன் மீளப்பெற வேண்டியிருந்தது. | னவுகள் NSB கடனில் இருந்து NWSDB செலுத்தியது. | |
| iii. | ரூபா 31.06 மில்லியன் பொறுமதியான குழாயிகள் மற்றும் பொருத்திகள் இலங்கை நிதிப்பிரமாணங்கள் 806 இன் பிரகாரம் முறையான அனுமதி பெற்றுக்கொள்ளாமல் நீர் வழங்கல் மற்றும் சுகாதர செயற்திட்டத்தின் (நீர்வழங்கல் அமைச்சினால் காண்காணிக்கப்பட்ட) தனிப்பட்ட ஒப்பந்தகாரர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றை பெற்றுக் கொள்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் பொருட்கள் மீதான கொடுப்பனவை தீர்ப்பதற்கு கடிதமொன்று அனுப்பவைக்கப்பட்டது. | சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து பொருட்களை அல்லது பெறுமதியை அறவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| iv. | 2021 சனவரி 20 அன்று இரத்தினபுரி பாரிய நீர் வழங்கல் செயற்திட்டத்தின் செயற்திட்ட பணிப்பாளரால் செய்யப்பட்ட கோரிக்கையின் பேரில் இரத்னபுரி பிராந்திய களஞ்சியத்திலுள்ள இருப்புகளிலிருந்து ரூபா 79,603,030 மதிப்புள்ள குழாய்கள் மற்றும் பொருத்துதல்கள் 2021 ஏப்ரல் 01 அன்று வழங்கப்பட்டிருந்தன. இருப்பினும், இதற்காக பிராந்திய முகாமையாளரின் ஒப்புதல் 8 மாதங்களுக்குப் பிறகு 2021 திசெம்பர் 08 அன்றே பெறப்பட்டிருந்தது. | இது தீர்க்கப்பட்டுள்ளது. | களஞ்சியங்களிலிருந்து பரிமாற்றப்படும் அனைத்து பொருட்களிற்கும் உரிய முன் அனுமதி பெறப்பட்டிருப்பதை உறுதி செய்தல் வேண்டும். |

## 1.5.6 கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்றிருக்காத ஆவணச் சான்றுகள்

| | விடயம் | தொகை ரூபா | கிடைக்கப்பெறாக சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | ஏனைய கடன்பட்டோர் | 102,867,223 | விரிவான பட்டோலைகள் | (அ,ஆ,உ,எ,ஏ,ஐ,ஒ,க,கா,கி) சகல பட்டில்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டன. | (i) ஒவ்வொரு கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர், குறுகிய கால வைப்புக்கள், ஒப்பந்தகாரர் பிடிகாசு மற்றும் முற்பணம், பிடித்துவைத்தல் வரி போன்றவற்றின் தொடர் நடவடிக்கை எடுக்கும் நோக்கில் விரிவான பட்டியலை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ஏனைய கடண்கொடுத் தோர் | 342,938,996 | விரிவான பட்டோலைகள் | | |
| (இ) | அசையாத மற்றும் மெதுவாக நகரும் இருப்புகள் | 1,315,539,477 | காலப்பகுப்பாய்வு | (இ)NWSDB இலுள்ள அதிகளவு இருப்பு காரணமாக இதனை சமர்ப்பிக்க முடியவில்லை. | |
| (ஈ) | வரிச் செலவினம் | 138,860,749 | ஆண்டுக்கான விபரமான வருமான வரி | (ஈ) இது வருமான வரியல்ல ஆனால் நிதிக் கூற்றுக்களின் படி இது பொருளாதார சேவைக் கட்டணமாகும். | |
| (உ) | ஏனைய நிறுவனங்களிலுள்ள குறுங்கால வைப்புகள் | 12,779,730 | விரிவான பட்டோலைகள் | (ஊ) உறுதிப்படுத்தலு | (ii) ஆண்டிற்கான விரிவான வரிக் கணிப்பீட்டு செலவினத்தின் பின்னர் வருமானக் கூற்றில் அனுமதிக் கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஊ) | வீட்டுக் கடன்களிற்கான HDFC முதலீடு | 434,368 | வங்கி உறுதிப்படுத்தல்கள் | க்காக HDFC இற்கு கடிதம் அனுப்பப்பட்டது. | (iii) கணக்காய்விற்கு நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிப்பதற்கு முன்னர் வங்கி கடன்களின் உறுதிப்படுத்தல்கள் எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | உள்நாட்டு வங்கிக் கடன்கள் | 26,254,511 | வங்கி உறுதிப்படுத்தல்கள் | | |
| (ஏ) | பிடித்துவைத்தவரி | 111,540,855 | விரிவான பட்டோலைகள் மற்றும் சான்றிதழ்கள் | | (iv) கணக்காய்விற்கு நிதிக் கூற்றுக்களுடன் சகல பட்டியல்களுடன் சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஐ) | பாதுகாப்பு வைப்புப்பணம் (அரசாங்க விடுதிகள்) | 2,354,032 | விரிவான பட்டோலைகள் (விடுதி அடிப்படையில்) | | (v) அரசாங்க திணைக் களத்திடமிருந்து கையேற்ற சொத்துக்களின் பட்டியல் பேணப்பட வேண்டும். |
| (ஒ) | ஓப்பதகாரர் களிற்கான முற்பணம் | 5,772,482 | விரிவான பட்டோலைகள் | | |
| (ஓ) | புனரமைத்தல் வரி | 1,757,515 | விரிவான வரிப் பட்டோலைகள் | | (vi) நகராத மற்றும் மெதுவாக நகரும் விடயங்களின் காலப் பகுப்பாய்வு இருப்புகள் மிகையான விடயங்கள் அல்லது கைதவிர்க்க வேண்டிய விடங்கள் இனங்காணும் நோக்கில் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஔ) | அரசாங்க திணைக்களங்களிலிருந்து எடுக்கப்பட சொத்துக்கள் | 185,480,387 | எடுக்கப்பட்ட விரிவான சொத்து பட்டோலைகள் | | |
| (க) | திறைசேரி மானியம் | 98,979,261,620 | மானியம் தொடர்பான விரிவான பட்டோலைகள் | | (vii) செயற்பாடற்ற சொத்துக் கள் மற்றும் பொறுப்புகளின் விபரமான பட்டோலைகள் பேணப்பட வேண்டும். |
| (கா) | மூலதன மானியம் - உள்ளுராட்சி மன்றம் | 854,660,910 | மானியம் தொடர்பான விரிவான பட்டோலைகள் | | |
| (கி) | வெளிநாட்டு மூலதன மானியம் | 7,347,045,563 | மானியம் தொடர்பான விரிவான பட்டோலைகள் | | |
| (கீ) | நிறுத்திவைத்த கடன்கொடுனர் | 2,321,570 | விரிவான பட்டோலைகள் | | |
| (கு) | **செயற்பாடற்ற பொறுப்புகள்** | | | | |
| | கோரப்படாத வியாபாரக் கடன்பட்டோர் | 4,131,522 | விரிவான பட்டோலைகள் | | |
| | சம்பளம் மற்றும் சம்பள பட்டியல் அகற்றல் | 20,639,944 | விரிவான பட்டோலைகள் | | |

(கூ) **செயற்பாடற்ற சொத்துக்கள்**

| | | |
|---|---|---|
| ஏனைய கடன்பட்டோர் | 3,743,920 | விரிவான பட்டோலைகள் |
| முற்பணங்கள் | 15,274,131 | விரிவான பட்டோலைகள் |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டியவைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| i. | ரூபா 1,992.88 மில்லியன் கூட்டுத் தொகையான வியாபார கடன்பட்டோர், புதிய இணைப்பு கடன்பட்டோர், கழிவுகற்றல் கடன்பட்டோர் மற்றும் ஏனைய கடன்பட்டோர் என்பன இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக அறவீடு செய்யப்படாமல் இருந்தது. மேற்குறித்த வியாபார கடன்பட்டோரில் கொழும்பு, களணி, கோட்டை மற்றும் அம்பாந்தோட்டை பிராந்தியங்கள் 59 சதவீதத்தை பிரதி நிதித்துவப்படுத்துகின்றன. புதிய இணைப்புக் கடன்பட்டோர்கள் 3 தவணைகளில் அறவிடப்பட வேண்டிய போதிலும், ரூபா 7,359,256 தொகை 3 ஆண்டுகளிற்கு மேல் நிலுவையாக உள்ளது. | கோவிட் - 19 தாக்கம் காரணமாக ஏற்பட்ட பயணக் கட்டுப்பாட்டினால் துண்டித்தல் வேலைகளை செயற்படுத்த முடிந்திருக்க வில்லை. நிலுவைகளை அறவிட தற்போது நடவடி க்கை எடுக்கப்பட்டுள்ளது. . | கடன்பட்டோரிடமிரு ந்து நிலுவை தொகைகளை அறவிடுவதற்கு போதிய மற்றும் அவசியமான நட வடிக்கைகள் தாமத மின்றி எடுக்கப்பட வேண்டும். |
| ii. | 20 நுகர்வோர் வகைகளின் கீழுள்ள 1975 வர்த்தகக் கடன்பட்டோர் இடமிருந்து ரூபா 244.63 மில்லியன் நிலுவையில் உள்ளதுடன், அவர்களின் பட்டியல் பெறுமதிகள் ரூபா 50,000 க்கு மேற்பட்டதாகும். அத்துடன் 2021 நவம்பர் 30 இல் உள்ளவாறு 365 நாட்களுக்குத் தொடர்ந்து பட்டியல்கள் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலே உள்ள மீதியில் ரூபா 4.57 மில்லியன் என்பது 8 (எட்டு) அமைச்சரின் அலுவலக குடியிருப்புகளைக் குறிக்கின்றது. | கோவிட் - 19 தாக்கம் காரணமாக ஏற்பட்ட பயணக் கட்டுப்பாட்டினால் துண்டித்தல் வேலைகளை செயற்படுத்த முடிந்திருக்க வில்லை. நிலுவைகளை அறவிட தற்போது நடவடி க்கை எடுக்கப்பட்டுள்ளது. | நீண்டகாலமாக நிலுவையிலுள்ள கடன்பட்டோரை அறவிடுவதற்கு போதிய மற்றும் அவசியமான நட வடிக்கைகள் தாமத மின்றி எடுக்கப்பட வேண்டும் அல்லது சாத்தயமாயின் துண்டிப்புச் செய்யப்படுதல் வேண்டும். |
| iii. | அமைச்சர் விடுதிகளிற்கு வழங்கப்பட்ட 42 தண்ணீர் இணைப்புகள் தொடர்பில் ரூபா 6,996,050 ஆன தொகை மீளாய்வாண்டு இறுதி வரையும் அறவிடப்படாமல் இருந்ததுடன் அந்தப் பட்டியல்களின் பெறுமதி ரூபா 5,000 இற்கும் மேற்பட்டதாக காணப்பட்டதுடன் தொடர்ச்சியாக 365 நாட்களிற்கு மேற்பட்டு செலுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த இணைப்புக்களில், ரூபா 2,277,723 பெறுமதியுடைய 33 இணைப்புக்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் இருந்தது. | அமச்சர்களிடமிருந்து பெறவேண்டியவைகள் அறிவிடப்படுமென்பதுடன் செயலிழந்த அமைச்சுக் களின் மீதிகள் பதிவழிக்க ப்படும். | அமைச்சர் விடுதி கள் மற்றும் அரசா ங்க நிறுவனங்க ளிடமிருந்து அறவீட் டுச் செயற்பா டுகளை துரிதப்படு த்துவதற்கு நடவடி க்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| iv. | காலி நகர சபையின் 19 வருடங்களின்இரண்டு முறைகேடான இணைப்புகள் நீர் பாவனை தொடர்பிலான ரூபா 1,765,352 நிலுவைத் தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப் பட்டிருக்கவில்லை. மேலும், காலி பிராந்தியத்தில் தனிப்பட்ட குடும்பங்களின் மூன்று சட்டவிரோத இணைப்புகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனை கணக்காய்வின் படி, ரூபா 921,097 மீளாய்வாண்டின் இறுதி வரை கூட அறவிடப்பட்டிருக்கவில்லை. | தற்போது, காலி பிராந்தி யத்தில் ஏற்பட்டுள்ள வருமான இழப்பை அறவி டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சட்டவிரோத குடிநீர் இணைப்புகளால் ஏற்படும் இழப்பை உடனடியாக வசூலி க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| v. | சபையினால் வழங்கப்பட்ட சேவைகளுக்காக கொழும்பு மாநகர சபையிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 28,519,949 தொகையானது மீளாய்வாண்டின் இறுதி வரை 5 வருடங்களுக்கும் மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | வைப்புகளை அந்தந்த நிறுவனங்களிடம் இருந்து வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கொழும்பு மாநகர சபையில் இருந்து நிலுவையை அறவிடுவதற்கு உடனடியாக நடவடி க்கை எடுக்க வேண்டும். |
| vi. | 2021 டிசம்பர் 31 இல் நிலுவையில் உள்ள துண்டிக்கப்பட்ட கடன்பட்டோர் மீதிகள் ரூபா 1,334,585,928 ஆகும். அதில், 85 சதவீதத்திற்கு சமமான ரூபா 461,330,874 கடன்பட்டோர்கள் மீட்கப்படாமல் இரண்டு ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. | நிலுவைத் தொகையை வசூலிக்க ஏற்கனவே சட்ட நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன. | அறவிடுதல் செயல் முறையை துரித ப்படுத்த நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |
| vii. | ரூபா 100,000க்கு மேல் நிலுவையில் உள்ள வர்த்தக துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 134 வர்த்தகக் கடன்பட்டோரின் ரூபா 142,277,148 கூட்டுத்தொகைக்காக நேரடி உறுதிப்படுத்தல்கள் கோரப்பட்டதுடன், அதில் ரூபா 24,009,302 கடன்பட்டோர் மாத்திரம் மீதிகளை உறுதிப்படுத்தியிருந்தனர். ரூபா 26,656,777 தொகைக்குரிய கடன்பட்டோர் மீதிகளுடன் உடன்பட்டிருக்கவில்லை. 2022 யூன் 30 வரை ரூபா 91,611,069 கடன்பட்டோர் தொடர்பில் மீதி உறுதிப்படுத்தல்கள் கிடைத்திருக்கவில்லை. | நிரந்தர வழங்கல் முறைமையானது மாதாந்த அடிப்படையில் நீர் கடன் பட்டோரை பதிவு செய்ய பயன்படுத்தப்படுகிறது. | தற்போதுள்ள வாடி க்கையாளர் தரவுத் தளத்தின் துல்லிய த்தை மதிப்பாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கவும். |

| | | | |
|---|---|---|---|
| viii. | வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்பு மாநகர சபை, மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் பேருவளை நகர சபை உள்ளிட்ட வெளி நிறுவனங்களில் வைப்பிலிடப்பட்ட குறுகிய கால வைப்புத்தொகையான ரூபா 53,408,746 மூன்று வருடங்களாக மீளப் பெறப்படாமல் நிலுவையில் உள்ளது. மேலும், வரிசை அமைச்சகத்தில் வைக்கப்பட்டிருந்த முற்பணம் ரூபா 4,378,829 ஒன்பது ஆண்டுகளாக திரும்பப் பெறப்படாமல் நிலுவையில் இருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வுக்குட்பட்ட ஆண்டிற்கான வரிசை அமைச்சின் பொறுப்புகள் அறிக்கையில் இந்த முற்பணம் காட்டப்படாததால், அதனை மீளப்பெறுதல் சந்தேகத்தில் உள்ளது. | குழாய்கள் பதிக்கும் பணி முழுமையாக முடிக்கப் பட்டு, சாலைகள் முழுமை யாக சீரமைக்கப்பட்டவுடன் வைப்புக்களை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படும். | வைப்புக்கள் மற்றும் முற்பணங்கள் இருப் பதை மறுபரிசீ லனை செய்ய உடனடி நடவடி க்கை எடுப்பதுடன் அறவிடுதல் செயல் முறை துரிதப்படு த்தப்பட வேண்டும். |
| ix. | திருப்பியளிக்கக்கூடிய வைப்புத்தொகைகள் தொடர்பான செயற்திட்டங்கள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், பிராந்திய ஆதரவு மையம் (வடமேற்கு) இனால் இரண்டு வருடங்களுக்கு முன்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் செய்யப்பட்ட மீளப்பெறக்கூடிய ரூபா 7,068,327 வைப்புத்தொகைகளை மீளப்பெறுவதற்கு எந்தவொரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | அந்தந்த நிறுவனங்களிடம் இருந்து வைப்புத் தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | ஏற்கனவே நிறை வேற்றப்பட்ட திட்ட ங்களுக்காக வீதி அபிவிருத்தி அதிகா ரசபைக்கு செலுத் தப்பட்ட மீளப்பெற க்கூடிய வைப்புத் தொகையை மீளப் பெறுவதற்கு உடன டியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| x. | ரூபா 245,893,002 தொகையினை மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக மீளப் பெறுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல், பிடித்து வைக்கப்பட்ட பெறவேண்டிய வரியாக வைக்கப்பட் டுள்ளது. எவ்வாறாயினும், ரூபா 111,540,855 தொகைக்குரிய விரிவான பட்டோலைகள் கணக்காய்வுக்காக வழங்கப்படாததாலும் மீதியானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினூடாக உறுதிப்படுத்தப் படாததாலும் மீதியின் காணப்படும் தன்மையை சரிபார்க்க முடியவில்லை. | NWSDB உள்நாட்டு இறை வரி திணைக்களத் திற்கு செலுத்த வேண்டிய வருமான வரி அறிக்கை யை சமர்ப்பிக்கும் போது பெறத்தக்க WHT தொகை யை அறிவித்திருந்தது. | உள்நாட்டு இறை வரி திணைக்கள த்துடன் தொடர்பு டைய வரியைச் சரிபார்த்து, முடிந்த வரை அவற்றைத் திரும்பப் பெறுவ தற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண் டும். |
| xi. | 5 வருடங்கள் மற்றும் 6 வருடங்களுக்குள் மீளப்பெறுவதற்காக ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 2,509,328,912 இடர் கடன்களில், 187 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன் மீதியான ரூபா 13,773,945 தொகை உரிய தேதிகளுக்குள் வசூலிக்கப்பட்டிருக்கவில்லை. அதேபோன்று, 2011 முதல் 2020 வரையிலான காலப்பகுதியில் 123 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பண்டிகை முற்பணமான ரூபா 599,250 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வசூலிக்கப்பட்டிருக்கவில்லை. | முறையாக ஓய்வு பெற்று மற்றும் இறந்தவர்களில் சிலரின் பணம் ஆழ் நிதியில் இருந்தோ அல்லது சம்பந்தப்பட்ட ஊழியர்களிடம் இருந்தோ அறவிடப்படுவதுடன் பதவியை விட்டு வெளியே றியவர்கள் மற்றும் இடைநீக்கம் செய்யப்பட் டவர்கள் மற்றும் இராஜி னாமா செய்தவர்களி | உரிய தேதிகளில் வசூலிக்கப்படாமல் நிலுவையில் உள்ள ஊழியர்க ளுக்கு வழங்கப்ப ட்ட கடன்கள் மற்றும் முற்பணங் களை உடனடியாக வசூலிக்க நடவடி க்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | டமிருந்து வரவேண்டிய தொகை வசூலிக்கப்படும். மேலும் இது மற்ற ஊழியர்களால் சரிபார்க்கப் பட்டு எதிர்காலத்தில் முழு அறிக்கை சமர்ப்பிக்கப்ப டும். | |
| xii. | செயற்திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்ளாமல், கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் செயற்திட்ட அபிவிருத்தி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்காக சபையின் வடமத்திய பிராந்தியத்தினால் இல் ரூபா 1,417,916 செலவிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட வருடத்தின் இறுதி வரை அந்த செலவினத்தை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேலைகள் முடிவடைந்த பின்னர் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்படுகின்ற பட்டியல்கள் தொடர்பில் செயற்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் நிதியை மாற்றாமல் அவர்களின் செயல் நடவடிக்கைத் திட்டங்களுக்கு ஏற்ப பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொள்ளு மாறு RSC களை அமைச்சு கோருகின்ற சந்தர்ப்பங்கள் உள்ளன. | சபையால் மேற்கொ ள்ளப்படும் செலவி னங்களை சம்பந்த ப்பட்ட அமைச்சுக்க ளிடமிருந்து மீளப் பெறுவதற்கு உடனடி நடவடிக் கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்தவேண்டியவை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| i. | கண்டி, கண்டி வடக்கு, கண்டி தெற்கு மற்றும் தெஹிவளை ஆகிய பிராந்தியங்களின் 5 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையாக வுள்ள வியாபாரக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 43,267,366 ஆனது வருட இறுதியில் கூட தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் கணக்குப் புத்தகங்களில் வைக்கப்பட்டி ருந்தது. எவ்வாறாயினும், கணக்காய் விற்கு கிடைத்த தகவலின்படி, கணக்குப் புத்தகங்களில் சரியாகக் கணக்கு வைக்கப்படாதிருந்த போதிலும் மேற்கண்ட கடன்கொடுத்தோர் அனைவருக்கும் அவர்களது நிலுவைத் தொகைகள் செலுத்தியிருப்பது தெரியவந்தது. | காரணங்கள் விரிவாகக் கண்டறியப்பட்டு, தவறுகளைச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்கொடுத்தோர் தரவு த்தளம் மற்றும் நீண்ட காலம் நிலுவையாக விருக்கின்ற கடன் என்பவற்றின் உண்மைத் தன்மையை உறுதிப்ப டுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| ii. | பிராந்திய ஆதரவு மையம் (கிழக்கு), பிராந்திய ஆதரவு மையம் (மேற்கு தெற்கு), பிராந்திய ஆதரவு மையம் (வடமேற்கு), பிராந்திய ஆதரவு மையம் (சப்ரகமுவ), ருஹுணுபுர WSP மற்றும் | அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில், குறைபாட்டு கடப்பாட்டுக் காலம் முடிந்த தும் இந்தத் பிடிகாசுகள் தீர்க்கப்படும். | ஒப்பந்தகாரர் பிடிகாசு தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது உரிய நடவடிக்கை எடுக்க முயற்சித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சித்துல்புவ நீர் திட்டம் ஆகியவற்றில் ஆறு (06) முடிக்கப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் நான்கு (04) இடைநிறுத்தப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் ஒப்பந்ததாரர்களிற்குரிய முறையே ரூபா 1,963,560 மற்றும் ரூபா 666,375 பிடிகாசு நிறுத்திவைக்கப்பட்டிரு ந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியிலும் அத்தொகையினை உரிய தரப்பினருக்கு விடுவிக்கவோ அல்லது உரிய நடவடிக்கை எடுப்பதற்கோ முயற்சித்திரு க்கவில்லை. | | |
| iii. | மீளளித்தக்க கேள்விப்பண வைப்புத் தொகையான ரூபா 4,466,358 மூன்று ஆண்டுகளாக சம்பந்தப்பட்ட தரப்பின ருக்கு விடுவிக்கப்படாமல் இருந்தது. மேலும், இலங்கை நிதி பிரமாணங்களின் பிரிவு 571(2) இன் படி அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் ஏற்கனவே வருமானத்திற்கு மாற்றப்பட்ட வைப்புத் தொகையைத் திருப்பிச் செலுத்தியதன் காரணமாக, இரத்தினபுரி பிராந்தியத்தின் மீளளித்தக்க கேள்விப்பண வைப்புத் தொகையில் ரூபா 188,808 அசாதாரணமான வரவு மீதி காணப்பட்டது. எவ்வாறாயினும், வருடத்தின் இறுதிக்குள் கூட அசாதாரணமான வரவு மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட் டிருக்கவில்லை. | காலம் முடிந்ததன் பின்னர் NWSDB அந்தந்த ஒப்பந்த தாரர்களுக்கு வைப்புப் பணத்தை விடுவிக்கும். | மீளளிக்க வேண்டிய கேள்விப்பண வைப்புக ளை தீர்ப்பதற்கும் அசாதாரண வரவு மீதிகளை புலனாய்வு செய்வதற்கும் நடவடி க்கை எடுக்க வேண்டும். |
| iv. | ஐந்து (05) வெளிநாட்டு நிதியுதவி செயற் திட்டங்களுக்குரிய ஒப்பந்ததாரர்களால் விதிக்கப்பட்ட தேசத்தை கட்டியெழுப்புதல் வரியான ரூபா 321,662,628 தொகை 2018 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரை கூட சபையால் செலுத்தப்பட் டிருக்கவில்லை. | இந்த தொகையை செலுத்த பொது திறைசேரி இடமிருந்து NWSDB பணம் கோரியது ஆனால் இதுவரை நிதி கிடைக்கவில்லை. | சட்டரீதியான கொடுப் பனவுகளை உரிய வேளையில் உள்நாட்டு இறைவரி திணைக்கள த்திற்கு செலுத்துவதை உறுதிப்படுத்த வேண் டும். |

### 1.6.3 முற்பணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| i. | பிராந்திய ஆதரவு மையம் (மத்திய) மற்றும் அம்பாந்தோட்டை பிரதேசங்களில் காணிகளை கையகப்படுத்துவதற்காக வைப்புத்தொகையாகவும் முற்பணமாகவும் செலுத்தப்பட்ட முறையே ரூபா 103,259,692 மற்றும் ரூபா 28,969,283 | கையகப்படுத்தும் செயல் முறையின் நிலைமை, தலைமை அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் கண்டறியப் பட்டு, கையகப்படுத்தும் | நில முற்பணத்தின் நிலுவைத் தொகை யை விசாரித்து உடனடியாக தீர்வு காண நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | தொகைகளை விசாரணை செய்து மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் ஐந்து வருடங்களுக்கும் மேலாக கணக்குப் புத்தகங்களில் வைக்கப்பட்டுள்ளது. மேலும், பிராந்திய ஆதரவு மையம் (மத்திய) தொடர்பில் செலுத்தப்பட்ட நில முற்பணம் தொடர்பாக, அந்தந்த நிலங்கள் கையகப்படுத் தப்பட்டதா இல்லையா என்பதை கணக்காய்வு செய்வதற்காக பொறுப்பான அலுவலர்களால் தகவல்கள் வழங்கப்படவில்லை. | செயல்முறை முடிந்த பின்னர் நிலத்தை மூலதனமாக்க நடவடிக்கை எடுக்கப்படும். | எடுக்க வேண்டும். |
| ii. | ரூபா 17,535,788 தொகையான முன்னாள் ஊழியர்களிற்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களை அறவிடுவதற்கு எட்டு ஆண்டுகளிற்கும் மேலாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், கணக்காய் வுத் தெரிவுப் பரிசோதனையின் படி, மேற்குறித்த ஊழியர்களில் 90 சதவீதமானோரிடமிருந்து குறித்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் அறவிப்படாமல் ஓய்வுபெறச் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப் பட்டது. | நிதித் திணைக்களம், கைத்தொழில் உறவுகள் திணைக்களம், மனிதவளத் திணைக்களம், தகவல் தொழில்நுட்பத் திணைக் களம் ஆகியவை இணை ந்து இந்தப் பிரச்னையை ஆராய்ந்து, இப்பிரச்னைக்கு விரைவில் தீர்வு காணப்ப டும். | முன்னாள் ஊழியர் களிடமிருந்து நிலு வைகளை அறவிடும் செயல்முறை துரதப்படுத்தப்படுதல் வேண்டும். |
| iii. | 2008 ஆம் ஆண்டின் போது பிராந்திய ஆதார நிலையங்கில் (மத்திய) இடை நிறுத்தப்பட்ட செயற்திட்ட ங்களிற்காக வழங்கப்பட்ட ரூபா 9,278,335 கூட்டுத் தொகையான முற்பணங்களை அறவிடுவதற்கு 2022 ஏப்ரல் 30 வரையிலும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கவில்லை. | சட்ட நடவடிக்கைகளின் நிலைமை குறித்து கோரப்பட்டு சபையின் சட்ட உத்தியோகத்தருக்கு கடிதம் அனுப்பபட்டிருந்த துடன் பதில் பெறப்பட வேண்டியிருந்தது. | நிலுவையாகவிருக்கி ன்ற முற்பணங்கள் தொடர்பில் தாமதமி ல்லாமல் சட்ட நடவடிக்கைகள் எடுக்க வெண்டும். |
| iv. | தலைமை அலுவலகம் தொடர்பான நிறுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்கு 2010-2016 இல் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 41.11 மில்லியன் முற்பணத்தை மீளாய்வாண்டு இறுதி வரையிலும் கூட திரும்பப் பெறுவதற்கு எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | நீண்டகாலமாக நிலுவையி லுள்ள மீதிகளிற்கான காரணங்களை கண்டறிந்து திருத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | -மேற்படி- |
| v. | கண்டி தெற்கு மற்றும் பிராந்திய ஆதரவு மையம் (வடமத்திய) பிராந்தியத்தில் கொள்வனவுகளிற்காக வழங்குனர்களிற்கு வழங்கப்பட்ட முற்பணங்களில், ரூபா 210,863 தொகை ஒரு வருடத்திற்கும் மேலாக மீட்கப்படாமல் கணக்குப் புத்தகத்தில் வைக்கப்பட்டிருந்தது. | இது 2022 ஆம் ஆண்டில் திருத்தப்படும். | வழங்குனர் முற்பண ங்களை காலக்கிரம த்தில் அறவிடுவத ற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண் டும். |

## 1.7 உறவுமுறைத் தரப்பினர்கள் மற்றும் வெளிப்படுத்தப்படாத உறவுமுறைத் தரப்புக் கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உறவுமுறைத்தரப்பு வெளிப்படுத்தல்கள் (LKAS 24) தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரிவு 8 இன் படி சபையினது செயல்பாடுகளைப் பாதிக்கின்ற உறவுமுறைத் தரப்பினருடனான உறவை சபை மதிப்பிட்டு அங்கீகரித்திருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் இறுதிக்குள் கூட நிதிக்கூற்றுக்கள் அல்லது அதன் வரைவு ஆண்டறிக்கை ஆகியவற்றில் உறவுமுறைத் தரப்புக் கொடுக்கல் வாங்கல்களைக் கண்டறிந்து வெளிப்படுத்துவதற்கான வழிமுறையை அது அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. எனவே கணக்காய்வின் போது உறவுமுறைத் தரப்புக் கொடுக்கல் வாங்கல்களின் தன்மை மற்றும் அளவு ஆகியவற்றைக் கண்டறிய முடியவில்லை. | நவம்பர் 2021 நவம்பரில் வெளியிடப்பட்ட பொது முயற்சிகள் திணைக்களத்தின் புதிய வழிகாட்டுதலின் படி, பணிப்பாளர்களின் பிரகடனம் வெளிப்படுத்தப் பட்டுள்ளதுடன் வருடாந்த அறிக்கையில் தேவையான வெளிப்படுத்தல்கள் செய்யப் படும். | உறவுமுறைத் தரப்பினர்கள் மற்றும் வெளிப்படுத்தப்படாத உறவுமுறைத் தரப்புக் கொடுக்கல் வாங்கல் களை அடையாளம் காண உடனடி நடவடிக்கைகள் எடுக்கப் பட வேண்டுமென்பதுடன் உறவுமுறைத் தரப்பு வெளிப்படுத்தல்கள் (LKAS 24) தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் அல்லது வருடாந்த அறிக்கையில் அவற்றை வெளி ப்படுத்த வேண்டும். |

## 1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்கமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | பொது முகாமையாளருடைய சுற்றறிக்கை | | | |
| i. | 2015 ஆகஸ்ட 12 இன் Admin/12/ 2015 ஆம் இலக்க | துண்டிக்கப்பட்ட பின்னர் மூன்று மாதங்களிற்குள் நிலுயையாகவிருக்கின்ற கடன்பட்டோரை அறவிடுவ தற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 50,000 இற்கும் அதிகமாகவிருந்த 3,846 துண்டிக்கப்பட்ட கடன்பட்டோர் தொடர்பில் ரூபா | குடியிருப்பு வாடிக்கையாளரின் நிலுவைகள் துண்டிப்பு வேலைத் திட்டத்தின் மூலம் அறவிடப்பட்டன. | பொது முகாமையாளரின் சுற்றறிக்கையுடன் இணங்குவதை உறுதிப்படுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 431.5 மில்லியன் கூட்டுத் தொகையான நிலுவையாகவுள்ள கடன்பட்டோரை அறவிடுவத ற்கு சட்ட நடவடிக்கைகள் 2021 திசெம்பர் 31 வரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், துண்டிக்கப்பட்ட திகதியிலிருந்து 3 முதல் 11 ஆண்டுகளின் பின்னர் புதிய இணைப்புக்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள 12 அரசாங்க விடுதிகளிலிருந்து நிலுவையாகவுள்ள ரூபா 439,371 தொகை குறித்து துண்டிப்புகள் மேற்கொள்ள ப்பட்டிருக்கவில்லை. | | |
| ii. | 2018 செப்தெம்பர் 26 இன் Admin/09/ 2018 மற்றும் சபையின் விடுதிகள் கோவையின் 8.1.1 மற்றும் 8.2.2 ஆம் பிரிவுகள் | 5 ஆண்டுகளை விட அதிகமாக உத்தியோகபூர்வ விடுதிகளில் வசிக்கின்ற ஊழியர்களிடமிருந்து சந்தை வீதத்திற்கு சமமான வாடகை மற்றும் சம்பளத்திருந்து 12.5 சதவீத மிகையறவீடு சாட்டுதல் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பிராந்திய ஆதார நிலையங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தில் பணியாற்றும் அறுபத்தி ஆறு (66) ஊழியர்கள் 5 ஆண்டுகளிற்கு மேலாக உத்தியோகபூர்வ விடுதிகளில் வசித்திருந்த போதிலும் அவர்களிடமிருந்து ரூபா 29,996,237 தொகையான மிகை அறவீடு (சந்தை வாடகை நீங்கலாக) 2022 பெப்ரவரி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய அங்கீகாரங்கள் பெறப்பட்ட பின்னர் அனுமதிக்கப்பட்ட காலத்தை மிகைத்து உத்தியோகபூர்வ விடுதிகளில் வசிக்கின்ற ஊழியர்களிடமிருந்து மிகைஅறவீட்டை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| iii. | சபையின் விடுதிகள் கோவையின் 11.2 ஆம் பிரிவு | பணிபுரியும் இடத்திலிருந்து உத்தியோகபூர்வ குடியிருப்புகளுக்கு 25 கிலோமீட்டருக்கும் குறைவான தூரத்தில் நிரந்தர முகவரிகள் காணப்படுகின்ற பிராந்திய ஆதரவு மையத்தில் (மேற்கு உற்பத்தி) பணியாற்றும் ஆறு ஊழியர்களுக்கு ஆறு உத்தியோகபூர்வ குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும், வேலை செய்யும் இடத்திலிருந்து 25 கிலோமீட்டருக்கும் குறைவான | இது தொடர்பாக முதற்கட்ட விசாரணை தொடங்கப்பட்டுள்ளது. புலனாய்வு அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தொண்ணூறு விடயங்கள் குறித்து அறிக்கையிட்டு மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தூரத்தில் நிரந்தர முகவரி உள்ள ஆறு ஊழியர்களுக்கு அம்பத்தலே எரிசக்தி சேமிப்பு திட்டத்தின் நிதியில் இருந்து 2019 பெப்ரவரி முதல் 2021 நவம்பர் வரை ரூபா 2,997,000 க்கு சமமான தொகை வழங்கப்பட்டுள்ளது. | | |
| iv. | 2020 செப்தெம்பர் 02 ஆந் திகதிய Admin 16/2020 இன் பிரிவு 2.1 மற்றும் 2.3 | மேற்கு உற்பத்தி பிராந்திய உதவி மையத்துடன் இணைக்கப்பட்டுள்ள பதினேழு (17) உத்தியோகத்தர்க ளும், அம்பாறை பிராந்தியத்தில் இணைக்கப்பட்டுள்ள இருநூற்று மூன்று (203) உத்தியோகத்தர் களும், அக்கரைப்பற்று பிராந்தியத் தில் இணைக்கப்பட்டுள்ள நூற்று முப்பத்தெட்டு (138) உத்தியோக த்தர்களும் முறையே 06 முதல் 27 ஆண்டுகள், 05 முதல் 38 ஆண்டுகள் மற்றும் 5 முதல் 16 ஆண்டுகள் வரையான காலப்பகுதி யில் ஒரே இடத்தில் சேவையாற்றுகி ன்றனர். | 05 வருடங்களுக்கு மேலாக ஒரே பதவியில் பணிபுரிபவர்களுக்கு அவர்களின் விருப்பத்தி ற்கேற்ப இடமாற்றம் பெற வாய்ப்பு வழங் கப்பட்டுள்ளது. நாட்டின் நிலைமை மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக வருடாந்த இடமாற்றங்களை நடை முறைப்படுத்துவது மிக வும் கடினமாகியுள்ளது. | -மேற்படி- |
| v. | சபையின் விடுதிகள் கோவையின் 12.2 ஆம் பிரிவு மற்றும் 2015 நவம்பர் 30 ஆந் திகதிய Ad18/2015 ஆம் இலக்க சபைச் சுற்றறிக்கை | தண்ணீர் கட்டணம் நிலுவையில் உள்ள ஊழியர்களிடமிருந்து அவர்களது சம்பளத்தில் இருந்து மாதாந்த பட்டியல் பெறுமதியில் 10 சதவீத கூடுதல் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 201 இணைப்பு களிற்காக ரூபா 1000க்கு மேல் நிலுவையில் உள்ளவர்களிடமி ருந்து ரூபா 1,710,387 நிலுவையின் நிமித்தம் மூன்று மாதங்களுக்கும் மேலாக மிகை அறவீட்டை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அத்துடன், இரத்தினபுரி பிராந்தியத்தில் ஏற்கனவே இடிக்கப்பட்ட ஆறு உத்தியோகபூர்வ குடியிருப்புகளி லிருந்து பெறப்பட்ட வேண்டிய ரூபா 64,922 தொகை 2022 சனவரி இறுதி வரையிலும் மீளப் பெறப்படாமல் இருந்தது. மேலும் பிராந்திய ஆதரவு மையம் (மேற்கு உற்பத்தி) இல் உள்ள 9 அதிகாரிகளிடம் இருந்து தண்ணீர் | சம்பந்தப்பட்டவர்களின் தனிப்பட்ட கோப்புகள் ஆய்வு செய்யப்பட்டு, மனிதவளப் பிரிவு மற்றும் நிதிப் பிரிவு ஆகியவற்றின் ஒருங்கி ணைப்புடன் இந்தக் கடன்களை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதுடன் எதிர்கால த்தில் முன்னேற்றம் அறிவிக்கப்படும். | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நுகர்வு தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரை எந்தக் கட்டணமும் வசூலிக்கப்படவில்லை. அதனால் சபைக்கு ஏறத்தாழ ரூபா 255,600 நட்டம் ஏற்பட்டிருந்தது. | | |
| (b) | 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை மற்றும் 2021 நவம்பர் 17 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணை க்களத்தின் அரசா ங்க தொழில் முயற்சிகளிற்கான வழிகாட்டல் கையேட்டின் 3.2(i) ஆம் பிரிவு | சபையின் ஆட்சேர்ப்பு திட்டம் மற்றும் பதவியுயர்வு நடைமுறை என்பவற்றிற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி 2022 மார்ச் வரை பெறப்பட்டிருக்கவில்லை. | தற்போது வரை, தொழிற்சங்கங்களால் வழங்கப்பட்ட விடயங்கள் உள்ளடக்கப்பட்டு இறுதி படிவம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், 2022.06.06 ஆந் திகதி அமைச்சினால் பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையுடன் நேரடியாக இணக்குவதை உறுதிப்படுத்தல். |
| (c) | 2020 சனவரி 27 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை | | | |
| i. | பிரிவு 1.2 | மீளாய்வாண்டின் போது தலைவரிற்காக இரண்டு வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. | வாகனக் கொள்கையின் படி தலைவருக்கும் உப தலைவருக்கும் இரண்டு வாகனங்கள் வீதம் ஒதுக்கப்பட்டன. | பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையுடன் கண்டிப்பாக இணங்குவதை உறுதிப்படுத்தி பொது முயற்சிகள் திணைக்கள சுற்றகிக்கையின் பிரகாரம் வாகனக் கொள்கை தயாரிக்கப்பட வேண்டும். |
| ii. | பிரிவு 1.4 | மீளாய்வாண்டின் போது உப தலைவரிற்காக இரண்டு வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. | | |
| (d) | 2021 நவம்பர் 17 ஆந் தேதியிட்ட அரசுக்குச் சொந்தமான பொதுத் தொழில்முயற்சிகளி | சபையின் செயல்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய இடர்களை மதிப்பிடுவதற்கும், நிதி மற்றும் நிதி சாராத இடர்களின் தாக்கத்தை | 2022.02.09 அன்று 3 நிர்வாகமற்ற பணிப்பாளர்களை உள்ளடக்கி இடர் குழு நியமிக்கப்பட்டது. இடர் குழுவின் | பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையுடன் கண்டிப்பாக இணங்குவதை |

| | | | | |
|---|---|---|---|---|
| | ன் கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டுதலின் பிரிவு 4.3 | அளவிடுவதற்கும், 2022 மார்ச் வரையிலும் இறுதிக் குள் இடர் குழு நியமிக்கப்ப டவில்லை. | தலைவரின் பார்வைக் காக ரீஆர்ஓ வரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | உறுதிப்படுத்த வேண்டும். |
| (e) | 2019 மார்ச் 05 இன் 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரிவு 2.3.2 | 2021 செப்டம்பர் முதல் 2022 யூலை 31 வரையிலும் மாத்தறை (iv) ஆம் கட்ட நீர் வழங்கல் செயற்திட்டத்திற்கு முழு நேர செயற்திட்டப் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. | செயற்திட்ட இயக்குனர் ஓய்வு பெற்றதாலும், செயற்திட்டம் இறுதி கட்டத்தில் இருந்ததாலும் தெற்குப் பிராந்திய மேலதிக பொது முகாமையாளருக்கு வேலை பார்த்தல் நியமனம் வழங்கப்பட்டது. | முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள சுற்றறிக்கையுடன் இணங்குவதை உறுதிப்படுத்த வேண்டும். |
| (f) | 2021 நவம்பர் 17 ஆந் தேதியிட்ட அரசுக்குச் சொந்தமான பொதுத் தொழில்முயற்சிகளின் கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டுதலின் பிரிவு 3.5 | மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில், வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட இருபத்தொரு (21) ஊழியர்களிற்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா 28.73 மில்லியன் தொகையை 2021 திசெம்பர் 31 இல் சபை செலுத்தியுள்ளது. அதன்படி, நீர் வழங்கல் அமைச்சகம் 2015 திசெம்பர் முதல் 2021 திசெம்பர் 31 வரை விடுவிக்கப்பட்ட ஊழியர்களுக்காக சபைக்கு ரூபா 216.12 மில்லியன் தொகையை மீளளிக்க வேண்டியிருந்தது. | கோரிக்கைகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு சபையின் பல ஊழியர்கள் அமைச்சுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த ஊழியர்களுக்கு எந்த நிதி ஏற்பாடும் செய்யப்படாததால், அவர்களது சம்பளத்தை திருப்பிச் செலுத்த முடியாது என்று அமைச்சு தெரிவித்துள்ளது. | பொது முயற்சிகள் திணைக்கள வழிகாட்டல்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்த வேண்டும். |
| (g) | நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் 2017 யூன் 28 ஆந் தேதியிட்ட 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரிவு 06 | 2016 ஆம் ஆண்டிற்குப் பிறகு 2022 மார்ச் 30 ஆம் தேதிக்குள் கூட வாகனங்களைத் தவிர, நிலையான சொத்துகளைச் சேர்த்தல் மற்றும் அகற்றுதல் ஆகியவை கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு தெரிவிக்கப்படவில்லை. | தகவல்களைச் சேகரிக்க அதிக நேரம் தேவைப்படுகிறது. | நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையுடன் கண்டிப்பாக இணங்குவதை உறுதிப்படுத்த வேண்டும். |
| (h) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவை | | | |
| (i) | அத்தியாயம் XIX இன் பிரிவு 5 | கிழக்கு, மேற்கு வடக்கு, மேற்கு மத்திய, மேற்கு தெற்கு மற்றும் வடக்கு (வவுனியா) ஆகிய பிராந்திய ஆதரவு மையங்களிற்கு | விடுதிகளின் வாடகையை வசூலிப்பதற்கான புதிய வழிமுறைக்கு விடுதிகள் குழுவிடம் | வாடகைகளை நிச்சயிக்கையில் தாப விதிக் கோவையிலுள்ள |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மாதாந்த வாடகையை அறிவிடுவதற்கு அதிகாரபூர்வ குழு தீர்மானித்திருந்த போதிலும், ஆறு பிராந்திய ஆதரவு மையங்கள் மற்றும் தலைமை அலுவலகம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோத னையின்படி, மாத வாடகையாக ரூபா 85 முதல் ரூபா 4,000 வரை மட்டுமே வசூலிக்கப்படுவதையும், பிராந்திய ஆதரவு மையங்களில் உள்ள 20 ஊழியர்களிடம் இருந்து வாடகை வசூலிக்கப்படாமல் இருப்பதையும் அவதானிக்க முடிந்தது. | இருந்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளதுடன், விடுதிகளுக்கான ஒழுக் காற்று விதிமுறைக ளுக்கு பணிப்பாளர் சபை ஒப்புதல் வழங்கிய பின்னர் இது செயல்படு த்தப்பட உள்ளது. | ஏற்பாடுகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்த வேண்டும். |
| (ii) | அத்தியாயம் VII இன் பிரிவு 1.8, 4.6 மற்றும் 7.4 | பணியாளர் ஊதியத்திற்கு உரிமை இல்லாத போதிலும், சேவையை விட்டு வெளியேறியவர்கள் (பதவி வறிதாக்கப்பட்டோர்), ராஜினாமா செய்தவர்கள் மற்றும் பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள் ஆகிய பதினேழு (17) ஊழியர்களின் முறையே ரூபா 328,276, ரூபா 442,815 மற்றும் ரூபா 197,426 ஆகிய கூட்டுமொத்தம் ரூபா 968,517 தொகை மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக கணக்குப் புத்தகத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. | இந்த சிக்கலுக்கான அடிப்படை வழிகள் ஏற்கனவே கண்டறியப் பட்டு, இந்த சிக்கலை சரிசெய்ய சரியான நடவடிக்கைகள் எடுக்க ப்பட்டு வருகின்றன. | தாப விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்த வேண்டும். |
| (i) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 113 | மெதிரிகிரிய நீர் வழங்கல் திட்டம், கொழும்பு நகர சபை, கொழும்பு நகர தெற்கு, கொழும்பு நகர வடக்கு (மட்டக்குளிய), முகாமை யாளர் கோட்டே (பத்தரமுல்லை), தெஹிவளை முகாமையாளர் அலுவலகம், பாணந்துறை (பாணந்துறை) அலுவலகம், (ஹொரணை) முகாமையாளர் அலுவலகம் மற்றும் அமைச்சர் | பின்னர் திறைசேரியின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக் கப்பட்டது. | நிதிப்பிரமாணங்க ளிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்த வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | களின் குடியிருப்புகள் ஆகிய வீட்டு பாவனையாளர்களிடமிருந்து பெற வேண்டிய ரூபா 75,868,821 நீர்க்கட்டண நிலுவைகள் திறைசேரி அனுமதி பெறாமல் சபை தீர்மானத்தின் அடிப்படையில் மாத்திரம் மீளாய்வாண்டில் பதிவழிக்கப்பட்டிருந்தன. | | |
| (j) | 2017 பெப்ரவரி 27 ஆந் தேதியிட்ட 17/0453/714/008 ஆம் இலக்க அமைச்சரவை குறிப்பாணைக்கான 2017 மார்ச் 13 ஆந் தேதியிட்ட CF17/0453/714/006 ஆம் இலக்க கடிதத்தைத் தாங்கிய நிதி அமைச்சரின் அவதானிப்பு (03): | அமைச்சரவை தீர்மானத்திற்கு மாறாக மீளாய் வாண்டில் இலங்கை வங்கியிடமிருந்து கம்பஹா அத்தனக ல்லை மற்றும் மினுவாங்கொடை ஒருங்கிணைந்த திட்டத்திற்கு கடனாக பெறப்பட்ட ரூபா 492,381,118 தொகைக்கு வட்டி செலுத்தும் வகையிலும் தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடனுக்கான வட்டியை நிதியளிப்பதற்காகவும் திறைசேரி யில் இருந்து பெறப்பட்ட நிதியில் இருந்து ரூபா 29,912,098 செலவி டப்பட்டிருந்தது. | அமைச்சரவையின் AMP/20/0501/206/018 ஆம் இலக்க மார்ச் 19 ஆம் தேதியிட்ட குறிப்பின் படி, நீர் வழங்கல் திட்டங்களு க்கு நிதியளிப்பது மற்றும் NWSDB இன் பிற அத்தியாவசிய நிதிப் பொறுப்புகளை நிறைவேற்றுவது உள்ளிட்ட தொழிற்படு மூலதனத் தேவைகளின் நோக்கத்திற்காக NWSDB க்கு NSB கடன் வழங்கப்பட்டது. அதன்படி, கம்பஹா அத்தனகல்லை WSP க்காக இலங்கை வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் சேவை கொடுப்பனவுகளை NWSDB செலுத்தியது. | நிதி அமைச்சின் வழிகாட்டலுடன் இணங்கி ஒழுகுவதை உறுதிப்படுத்த வேண்டும். |

## 1.9 காசு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 1999 முதல் 2006 ஆம் ஆண்டுகளின் போது திருகோணமலை, களணி மற்றும் அம்பாறை பிராந்தியங்களில் இடம்பெற்ற ரூபா 246.64 மில்லயன் தொகயான காசு மோசடிகள் 2021 திசெம்பர் 31 வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், திருகோணமலை பிராந்தியத்தின் ரூபா 171.9 மில்லியன் காசு மோசடியில் ரூபா 24.15 மில்லியன் தொகை கடன்பட்டோராக பதியப்பட்டிருந்தது. மேலும், 2001 ஆம் ஆண்டின் | திருகோணமலை, களனி மற்றும் அம்பாறை அலுவலகங்களில் இடம்பெற்ற நிதி மோசடிகள் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்ப ட்டு சட்டமா அதிபரின் பணிப்புரையின் பிரகாரம் நடவடிக்கை | எதிர்காலத்தில் மேற்குறிப்பிட்ட நிலைகளிலிருந்து பாதுகாப்பதற்கு உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகள் எடுக்கப்பட்டன என்பதை உறுதிப்படுத்தல். |

| | |
|---|---|
| போது பண்டாரவரளை பிராந்தியத்தில் இடம் பெற்ற ரூபா 272,735 ஆன காசு மோசடி 2021 திசெம்பர் 31 வரையும் பொறுப்புடைய நபர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்படவுள்ளது. மேலும் முன்னாள் உதவிப் பொது முகாமையாளர் (நிதி) மீது தொடரப்பட்டுள்ள வழக்கு தொடர்பான தீர்ப்புகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும் |

### 1.10 விரிப் பிரமாணங்களுடன் இணங்கமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (a) | 2002 இன் 14 ஆம் இலக்க திருத்திய பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டம். | | | |
| i. | பிரிவு 26 (i) | 2021 சனவரி மாதத்திற்கான கழிவுநீர் வருமானம் (விநியோக மதிப்பு) ரூபா 26,123,533 தொடர்பில் ரூபா 2,081,107 ஆன பெறுமதிசேர் வரி (VAT) சனவரியில் கணக்கீடு செய்யப்பட்டிருக் காமையால் அது 2021 பெப்ரவரி இறுதிக்குள் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பணம் பெறப்பட்ட நேரத்தில் திருத் தம் செய்யப்படும். | பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் கடுமையாக இணங்குவதை உறுதிப்படுத்தல் |
| ii. | பிரிவு 21(i) | 2021 ஆம் ஆண்டின் நான்கு காலாண்டுகளுக்கான VAT அனுப்புதல் கள் மூன்று முதல் நான்கு மாதங்கள் வரை தாமதத்துடன் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | அனுப்புதலை பூர ணப்படுத்த போதிய நேரமின்மை, வரை யறுக்கப்பட்ட பணியாளர்கள், பிராந்தியங்கள் வாரியாக VAT பட்டோலையை பெறுவதில் தாம தம் போன்றவை இதற்கான காரண ங்களாகும். | -மேற்படி- |
| (b) | 2019 யூலை 09 ஆந் திகதிய CGIR/2019 /3V (INS&Cir) ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி | கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் படி, மீளாய்வாண்டில் ஐம்பத்து இரண்டு சந்தர்ப்பங்களில் VAT செயலற்ற 15 (பதினைந்து) வழங்குநர்களுக்கு ரூபா 2,465,952 | நாங்கள் மொத்த செயலற்ற வழங்கு னர்களிடமிருந்து ரூபா 2,112,048.74 அறவிட்டுள்ளோம். | VAT செயலற்ற வழங்குனர்களு க்குச் செலுத் தப்பட்ட VAT- |

| | | | | |
|---|---|---|---|---|
| | திணைக்கள சுற்றறிக்கையின் 1.4 ஆம் பிரிவு | பெறுமதிசேர் வரி செலுத்தப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் மீதியை அறவிடுவதற்கு நடவடிக் கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | ஐ அறவிட வேண் டுமென்பதுடன் எதிர்காலத்தில் பணம் செலுத்து கையில் உள் நாட்டு இறை வரித் திணைக்க ளத்தின் சுற்றறி க்கைகளின் விதிமுறைகளுட ன் கண்டிப்பாக இணங்குவதை உறுதி செய்ய வேண்டும். |
| (c ) | 2002 இன் 14 ஆம் இலக்க திருத்திய பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டத்தின் 2A பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட 2019 நவம்பர் 29 ஆந் திகதிய 2151/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமாணி அறிவித்தல் | 2021 சனவரி இல் குடியிருப்பாளர்கள், அரசாங்க குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் 8 பிராந்தியங்களிற்குரிய மானிவாசிப்பு விற்பனையில் 8 சதவீதத்திற்குப் பதிலாக குறைவான சதவீதமே வசூலிக்கப்பட்டது. எனவே VAT இன் சட்டப்பூர்வ சதவீதத்தை விட ரூபா 2,088,094 குறைவாக அறிவிக்கப்பட்டு சபையால் செலுத்தப்பட்டது. மேலும், 2021 ஆம் ஆண்டின் முதல் இரண்டு காலாண்டுகளில் கம்பஹா, கொழும்பு மற்றும் அம்பாறை பிராந்தியங்களுடன் தொடர்புடைய ரூபா 10,268,679 மதிப்பிலான மீட்டர் விற்பனை மீதான பெறுமதிசேர் வரி 2021 யூலை 31 இறுதி வரையிலும் கூட சபையால் அறிவிக்கப்பட்டு செலுத்தப்படவில்லை. | இது ஒரு கணினி பிழையா கும் என்பதால் இது 2022 ஆம் ஆண்டில் சரி செய்யப்படும் | பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்தல் |
| (d) | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயக த்தின் 2019 யூலை 09 ஆந் திகதிய CGIR/ 2019/3V/(INS & CIR) ஆம் இலக்க சுற்றறி க்கையின் 01 ஆம் பிரிவு. | பெறுமதி சேர் வரிக்கு பணம் செலுத்துவதற்கு முன்னர் வரிகள் செலுத் தப்படும் வழங்குனர்கள், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு, செல்லுபடியாகும் வரி அடையாள இலக்கத்தை வைத்துள்ளர் களா என்பதை சரிபார்க்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | VAT செலுத்தும் முன் வழங்குனர்க ளின் VAT பதிவு சான்றிதழை சரிபா ர்க்க அனைத்து கணக்காளர்களும் அறிவுறுத்தப்பட்டுள் ளனர். | ஊள்நாட்டு இறைவரி திணைக்கள சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் கடுமையாக இணங்குவதை உறுதிப்படுத்தல் |
| (e) | 2021/04 ஆம் இலக்க எளிமைப்படுத்திய பெறுமதி சேர் வரி முறைமை மீதான | 2021 ஆம் ஆண்டுக்கான முதல் மற்றும் இரண்டாம் காலாண்டுகளுடன் தொடர்புடைய முறையே ரூபா 3,531,056 மற்றும் ரூபா 3,248,019 மதிப்புடைய | கணக்காய்வு செய் யப்பட்ட காலத்தில் அனைத்து | எளிமையாக்கப் பட்ட பெறுமதி சேர் வரி சட்டத்திலுள்ள |

| | | | | |
|---|---|---|---|---|
| வழிகாட்டலின் 14 ஆம் பிரிவு | எளிமைப்படுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி (SVAT) வவுச்சர்கள் 2022 மார்ச் 30 வரையிலும் வசூலிக்கப்படவில்லை. | வவுச்சர் களும் கிடைத்தி ருக்கவில்லை. உள்நாட்டு இறை வரித் திணைக்க ளத்திற்கு VAT அறிக்கையைச் சமர்ப்பிக்க் முன் னர், RAMIS முறைமையின் ஊடாக நாம் வவுச் சர்களின் விவரங்க ளைப் பெற்றோம். | ஏற்பாடுகளுடன் கடுமையாக இணங்குவதை உறுதிப்படுத்தல் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,996,686,249 ஆன வரிக்கு முன்னரான இலாப தொகையாக இருந்ததுடன் மீன்னைய ஆண்டிலுள்ள நேரொத்த தேறிய இலாபம் ரூபா 642,781,124 ஆக (மீளக் குறிப்பிடப்பட்டது) இருந்தது. ஆகவே, நிதிசார் வளைவுகளில் ரூபா 3,639,467,373 ஆல் பாரியளவான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. நீர்மானி விற்பனை வருமானம் ஒப்பீட்டளவில் வீழ்ச்சியடைந்ததின் விளைவால் 6 சதவீதத்தால் மொத்த இலாப விகிதத்தில் ஏற்பட்ட குறைவு, சுத்திகரிப்பு நீர் உற்பத்தியுடன் இணைந்த ஆளனிச் செலவின் அதிகரிப்பு மற்றும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நீர் உற்பத்தியுடன் சம்பந்தப்பட்ட ஏனைய கிரயங்கள், நிர்வாகச் செலவினம், நிதிக் கிரயம் என்பவற்றில் அதிகரிப்பு என்பன நிதிசார் விளைவுகளின் இந்த பின்னடைவிற்கு பங்காற்றிய பிரதான காரணங்களான இருந்தன.

### 2.2 பிரதன வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

| விபரங்கள் | முரண் தொகை அதிகரிப்பு / (வீழ்ச்சி) (ரூபா. மில்) | முரண் % | முரணுக்கான காரணங்கள் |
|---|---|---|---|
| மீட்டர் விற்பனைகள் | 1,174 | 4 | வழங்கிய புதிய இணைப்பின் அதிகரிப்பு, உள்நாட்டு நுகர்வு அதிகரிப்பு, உலாவி வழங்கல் அதிகரிப்பு போன்றவை |
| விற்பனைக் கிரயம் | 2,408 | 14 | பணியாளர்கள் செலவு அதிகரிப்பு, பம்ப் செலவு, இரசாயன செலவு, பழுது பராமரிப்பு, வாடகை மற்றும் கட்டணங்கள், முதலியன. |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் மற்றும் இலாபம் | 314 | 21 | கழிவுநீர், நிலத்தடி நீர் வருமானம், மேலதிக கட்டணம், அபராதம் உள்ளிட்ட இதர வருமான அதிகரிப்பு. |

| | | | |
|---|---|---|---|
| ஏனைய செயற்பாட்டு செலவினம் | 1,622 | 10 | பணியாளர்களின் செலவு, பழுதுபார்ப்பு, பராமரிப்பு மற்றும் நிறுவன செலவுகள் அதிகரிப்பு |
| நிதிக் கிரயம் | 209 | 38 | கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் வருடத்தில் கடன் வழங்கல் அதிகரிப்பு, வருடத்தின் போது செலுத்த வேண்டிய தவணைகள் வீழ்ச்சி |

**2.3 விகிதங்களின் பகுப்பாய்வு**

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளிற்காக சபையின் முக்கியமான விகிதங்களில் சில பின்வருமாறு உள்ளன.

| **ஆண்டு** | **2021** | **2020** |
|---|---|---|
| மொத்த இலாப எல்லை | 33.77 | 39.65 |
| தேறிய இலாப எல்லை | (10.83) | 1.9 |
| நடைமுறை விகிதம் (எண்ணிக்கை) | 1.39 | 1.84 |
| திரவ விகிதம் (எண்ணிக்கை) | 1.22 | 1.63 |
| மொத்த சொத்து விற்பனை ( எண்ணிக்கை) | 0.04 | 0.04 |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் பிரதான நிதி விகிதங்கள் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது பாதகமான நிலையை (மொத்தச் சொத்துப் புரள்வு விகிதம் நீங்கலாக) காட்டியிருந்தது. முன்னைய ஆண்டின் 1.9 சதவீத தேறிய இலாப எல்லை மீளாய்வாண்டில் 10.83 சதவீத தேறிய நட்ட எல்லைக்கு குறைவடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொது நடைமுறை விகிதம் மற்றும் திரவ விகிதம் என்பன அடுத்த ஆண்டில் செலுத்தப்பட வேண்டிய கடன்களின் அதிகரிப்பு, ஒப்பதகாரர் பிடிகாசு அதிகரிப்பு மற்றும் அட்டுறு செலவின அதிகரிப்பு காரணமாக முறையே 0.45 மற்றும் 0.41 தடவைகளால் குறைவடைந்திருந்தது. மேலும், சபையின் மொத்த நிலுவையாகவிருக்கின்ற கடன் மீதிகள் மீளாய்வாண்டின் பொது வெளிநாட்டு கடன் வெளிப்படுத்தல்களில் அதிகரித்தமையால் பிரதானமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொது 201.09 பில்லியனிலிருந்து 240 பில்லியன் வரை அல்லது 19 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. எனவே, உரிமை மூலதனத்திற்கான கடன் விகிதம் (இணைப்பு விகிதம்) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொது 53 சதவீத்த்திலிருந்து 58 சதவீதம் வரை அல்லது 5 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| i. | மாத்தறை IV ஆம் கட்டம் நீர் வழங்கல் செயற்திட்டம் தொடர்பில் சபையால் தவணைப்பண திருப்பிச் செலுத்தல்களி லுள்ள தாமதத்தால் தண்டப்பண வட்டியாக ரூபா 162,900 இற்கு சமமான தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், மேற்கு உற்பத்திப் பிராந்நிதிய ஆதரவு மையத்தின் 2020 ஏப்ரல் முதல் 2021 | தேசிய அபிவிருத்தி வங்கி (NDB) அனுப்பிய கடன் சேவை அறிவிப்புகளில் ரூபா 162,900 தாமத வட்டி சேர்க்கப் பட்டிருக்கவில்லை. கொவிட் 19 நோய்த்தொற்று காரண மாக மின்சாரக் கட்டண ங்களை செலுத்த | தண்டணை வட்டி ஏற்படுவதிலிருந்து பாதுகாக்கும் நோக் கில் உரிய நேரத் தில் கடன் சேவை கொடுப்பனவை திருப்பிச் செலுத்துவ தற்கும் அவற்றினை |

| | | | |
|---|---|---|---|
| | ஒக்தோபர் வரையான காலப்பகுதிக்குரிய மின்சார பட்டியல்களிற்கு பணம் செலுத்துதல் தாமதிக்கப்பட்டமையால் தண்டப்பண வட்டியாக ரூபா 1,815,460 இற்கு சமமான தொகை செலுத்தப்பட்டிருந்தது. | முடிந்திருக் கவில்லை | பதிவழிப்பதற்கு உரிய நிதி நிறுவன ங்களுடன் பேரம் பேசும் சாத்தியம் இருக்குமாயின் அவசியமான நடவடிக்கை எடுக்க வெண்டும். |
| ii. | பிராந்திய ஆதரவு மையத்திலலுள்ள (மேற்கு உற்பத்தி) 11 ஊழியர்கள் வசித்துவருகின்ற உத்தியோகபூர்வ குடியிருப்புகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்ட ணத்தை விட குறைவான கட்டணத்தை வசூலித்தமையால் சபைக்கு ரூபா 1,432,839 இழப்பு ஏற்பட்டிருந்தது. | உத்தியோகபூர் குடியிருப்புக ளின் ஓழுக்கநெறிக் கோவைக் கான துணைக் குழுவின் பரிந்துரைகள் மற்றும் பணிப் பாளர் சபையின் ஒப்புதலுக்குப் பின்னர், அனைத்து பிராந்திய ஆதரவு மையங்களிலும் வாடகைகள் செயல்படுத்தப் படும். | உத்தியோகபூர்வ குடியிருப்புகளின் வாடகைக்கு நிர்ண யிக்கப்பட்ட கட்டண த்தை விட குறைந்த கட்டணத்தை வசூலித்தமையால் ஏற்பட்ட இழப்பை பொறுப்பு வாய்ந்த அதிகாரியிடமிருந்து அறவிட நடவடி க்கை எடுக்க வேண்டும். |
| iii. | மேற்கு உற்பத்தி பிராந்தியத்தின் கீழ் வழங்கப்பட்ட 7112 இணைப்புகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனை கணக்காய்வின் படி, நவம்பர் 2021 நவம்பர் மாத மானிவாசிப்பு முந்தைய மாதத்தை விட குறைவாக காணப்பட் டமையால் 2,435,948 அலகுகளிற்கான பட்டியலிடல் குறைவு அல்லது ரூபா 29,231,376 தொயையான சராசரி இழப்பு அவதானிக்கப்பட்டது. | இது குறித்து விரிவான பரிசோதனை நடைபெற்று வருகிறது. இருப்பினும், அடுத்த மாதத்தில் இது சரி செய்யப்படும். | பாவனையாளரால் நுகரப்பட்ட தண்ணீர் மீது சரியாக கட்ட ணம் அறவிடப்படு வதை உறுதிசெய் யதல் வேண்டும். |
| iv. | மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் படி, 2021 ஜனவரி 01 முதல் 2021 நவம்பர் 30 வரை மஹரகம, கோட்டே, இரத்தினபுரி, பாணந்துறை-ஹொரணை உள்ளிட்ட 31 பிராந்தியங் களுக்கு 41,546 நகல் பட்டியல்கள் வழங்கப்பட்டிருந்தன. ஆகையால், அந்த இணைப்புகளுக்குரிய ரூபா 69,351,972 இற்குச் சமமான தொகை 2021 நவம்பர் 30 இல் உள்ளவாறு அறவிடப்படாமல் நிலுவையில் உள்ளது. மேற்கூறப்பட்ட வைக்கு மேலதிகமாக மஹரகம, கோட்டே, களனி, அம்பாந்தோட்டை, கேகாலை, காலி மற்றும் அநுராதபுரம் பிராந்தியங்கள் தொடர்பில் ஒவ்வொரு | தகவல் தொழில்நுட்பப் பிரிவின் உதவியுடன் இந்தப் பிழைகள் சரி செய்யப்பட்டன. | வர்த்தக முறையில் நகல் பட்டியல்கள் வழங்கப்படுவதை தவிர்க்க நடவடி க்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிராந்தியத்திற்கும் 2000 க்கும் மேற்பட்ட நகல் பில்கள் வழங்கப்பட்டுள்ளன. | | |
| v. | தகுதிகாண் காலத்தில் இருந்த முன்னாள் மானி வாசிப்பாளர் (ஊழியர் இல. 2031868) மானி வாசிப்பின் போது செய்த குற்றங்களுக்காக சபை முகாமைத்துவம் அவரது சேவையை இடைநிறுத்தத் தவறியமையால் அந்த மானி வாசிப்பாளர் தாக்கல் செய்த வழக்கிற்கான இழப்பீடாக ரூபா 559,746 தொகையை சபை செலுத்த வேண்டியிருந்தது. மேலும், அவர் செய்த போலியான மானி வாசிப்பு இழப்பை வசூலிக்க மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பிரிவுத் தலைவர்கள் அவரது நிலையை உறுதிப்படுத்தி பரிந்துரைத்திருக்காமையால் பட்டியலிடப்பட்ட தேதியில் நிலையை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. அதைத் தெரி வித்து அவர்களது தகுதிகாண் காலம் நீடித்துக் கொள்ளப்ப ட்டிருக்க வேண்டிய போதி லும், தனிப்பட்ட கோப்பின்படி அத்தகைய கடிதம் வழங்கப் பட்டிருக்கவில்லை. மேலும், அப்போது இந்த கோப்புக்கு பொறுப்பாக இருந்த அதிகாரி கள் தற்போது ஓய்வு பெற்றுள்ளனர். | எதிர்காலத்தில் சபை க்கு ஏற்படும் இழப் பைத் தடுப்பதற்காக, தகுதிகாண் காலத்தி ற்குப் பிறகு பணியா ளர்கள் பணியில் உறுதி செய்யப்படு வதையோ அல்லது பணிநீக்கம் செய்யப் படுவதையோ உறுதி செய்ய, சரியான கண்காணிப்பு பொறி முறை உள்ளது என்பதை உறுதி செய்தல் வேண்டும். |
| vi. | கடுகஸ்தோட்டை நீர் சுத்திகரிப்பு நிலையத்தை புனரமைப்பதற்காக சுவீகரிக் கப்பட்ட காணியின் உரிமையாளருக்கு நட்டஈடு வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 2012 முதல் 2016 வரையான காலப்பகுதிக்கான இழப்பீட்டுத் தொகை யின் மீதான வட்டியாக ரூபா 2,050,962 செலுத்தப்பட்டிருந்தது. | குறித்துக்கொள்ளப்பட்டது. | தாமத இழப்பீட்டு வட்டியை செலுத்து வதைத் தடுப்பதற் காக நிலங்களை கையக ப்படுத்துவ தற்கு முன், இழப்பீடு வழங்குவதற்குத் தேவையான நிதி இருப்பதை உறுதி செய்யதல் வேண் டும். |

## 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| i. | சபையின் நுகர்வோர் சாசனத்தின்படி, புதிய இணைப்பு தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் நுகர்வோருக்கு முதலாவது பட்டியல் வழங்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கொழும்பு தெற்கு, மஹரகம, கெஸ்பேவ, களுத்துறை மற்றும் மாத்தறை பிரதேசங்களில் முதலாவது பட்டியலை வழங்குவதற்காக 149 சந்தர்ப்பங்களில் 2021 நவம்பர் 30 இல் உள்ளவாறு முதல் 37 நாட்கள் முதல் 329 நாட்கள் வரை கணிசமான தாமதம் காணப்பட்டது. | இது நாட்டில் நிலவும் கோவிட் கட்டுப்பாடுகள் காரணமாக ஏற்பட்டிருந்தது. ஆனால் தற்போது வழக்க ம்போல் தாமதமின்றி மூலப் பட்டியலான 1 ஆவது பிரதியை நுகர்வோருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சபையின் நுகர் வோர் சாசனத்தில் உள்ள விதிகளு டன் இணங்குவதை உறுதி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ii. | களுத்துறை முகாமையாளர் அலுவலகம் தொடர்பில் வாடிக்கையாளர்களுக்கு இணைப்புகள் வழங்கப்பட்ட தேதியிலிருந்து முதலாவது பட்டியல் வழங்கிய தேதிக்கு இடையே 57 முதல் 186 நாட்கள் வரை கணிசமான காலதாமதம் அவதானிக்கப்பட்டது. | இந்த தாமதத்தை சமாளிக்க COMS பட்டியலிடல் முறைமை உருவாக்கப் பட்டுள்ளது. | -மேற்படி- |
| iii. | சபையின் நுகர்வோர் சாசனத்தின்படி, ஒப்பந்தம் கையொப்பமிட்டு உரிய கட்டணம் செலுத்திய பின்னர் 1-4 நாட்களுக்குள் புதிய இணைப்பு வழங்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின்படி, பொத்துவில் மற்றும் பரகஹகலே நீர் வழங்கல் திட்டங்களில் குறித்த நுகர்வோருக்கு இணைப்புக்களை வழங்க 24 நாட்கள் முதல் 59 வரையிலான காலம் கடந்த பின்னரும் 2022 சனவரி 28 இல் உள்ளவாறு 6 தடவைகளிலும் காரைதீவு மற்றும் அக்கரைப்பற்று ஆகிய நீர் வழங்கல் திட்டங்களில் (OIC அலுவலகங்கள்) 01 முதல் 7 மாதங்கள் கடந்த பின்னரும் 2022 சனவரி 28 இல் உள்ளவாறு 26 சந்தர்ப்பங்களிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | இப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் காலதாமதத்தை குறைக்க அறிவுறுத்தல் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| iv. | நிர்மாண நடவடிக்கைகளுக்காக சுவீகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள காணிகளின் பொருத்தத்தை மீளாய்வுசெய்ய நியமித்த தொழில்நுட்பக் குழுவின் ஊடாக சபை அப்பணியை சரியாக மதிப்பீடு செய்யாததால், லபுகமவில் நீர்த்தேக்கத்தையும், தங்கொடுவ நீர் வழங்கல் திட்டத்துக்கான நீர்த் தாங்கியையும் நிர்மாணிப்பதற்கான இரண்டு காணிகளிற்கு ரூபா 41,920 தொகை செலவிடப்பட்ட பின்னர் அவை மீளக் கையளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | குறித்துக்கொள்ளப்பட்டது | திட்டமிடல் கட்டத்தில் தொழில்நுட்பக் குழு மூலம் கையகப்படுத்த உத்தேசித்துள்ள நிலங்களின் பொருத்தப்பாடு, முறையாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| v. | மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின்படி, நிலம் கையகப்படுத்தும் செயல்முறை தொடர்பான கண்காணிப்பு மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியதால், மூன்று நிலங்களை கையகப்படுத்துவதில் அல்லது உரிமைமாற்றச் சான்றிதழைப் பெறுவதில், வழங்கப்பட்ட கால அவகாசம் கடந்த பிறகும் 11 முதல் 17 ஆண்டுகள் வரை கணிசமான தாமதம் அவதானிக்கப்பட்டது. | LA/1784<br>நிலம் கையகப்படுத்தும் பணி இன்னும் நிறைவடையவில்லை.<br><br>LAJ656<br>பதியத்தலாவ நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் நீர் தாங்கி கட்டுவதற்கு இது பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலத்தை கையகப்படுத்தும் பணி முடிந்துள்ளது. இதற் குரிய இடமாற்றச் சான்றி தழை | நிலங்களை கையகப்படுத்துவது தொடர்பாக முறையான கண்காணிப்பு பொறிமுறை இருப்பதை உறுதிசெய்வதற்கு, தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பிரதேச செயலாளர் (பதியத்தலாவ) ஏற்கனவே வழங்கியுள்ளார்.<br><br>LA/1366<br>நிலம் கையகப்படுத்தும் பணி கிட்டத்தட்ட முடிந்து விட்டது. | |
| vi. | 1981 ஆம் ஆண்டு களுத்துறையில் களஞ்சியசாலை மற்றும் பணியாளர் குடியிருப்புகளை நிர்மாணி ப்பதற்காக சபை காணியொன்றை சுவீகரித்ததுடன் அதன் உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்குவ தற்காக 1991 ஆம் ஆண்டு களுத்துறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு ரூபா 531,000 செலுத்தப்பட் டிருந்ததுடன் விலைமதிப்பீட்டு திணைக்களத்திற்கு ரூபா 106,980 செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், காணியைப் பாதுகாப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையை சபை முகாமைத்துவம் செய்யத் தவறியதால், ஏற்கனவே சில குடும்பங்கள் சட்டவிரோதமாக நிலத்தை ஆக்கிரமித்துள்ளனர். எவ்வாறாயினும், நிலத்தின் உரிமையைப் பாதுகாக்க சபையால் ஏற்கனவே பணியமர்த்தப்பட்ட இரண்டு சட்ட அதிகாரிகளால் 41 ஆண்டுகளாக எந்தவொரு செயலூக்கமான தலையீடும் செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக, இந்த விடயத்தைக் கையாள ஒரு வெளிப்புற வழக்கறிஞர் பணியமர்த்தப்பட்டு அவருக்கு மீளாய்வாண்டில் ரூபா 3,472,875 கொடுப்பனவு செய்யப்பட்டது. எவ்வாறாயினும், 2022 யூலை மாத இறுதி வரையிலும் தற்போதுள்ள குடியிருப்பாளர்களை வெளியேற்றி, காணியின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது. மேலும் 1981 ஆம் ஆண்டு நிலத்தின் சட்டப்பூர்வ உடைமையாகப் பெற்ற பிறகு, நிலத்தைப் பாதுகாக்க நிர்வாகம் நடவடிக்கை எடுக்கத் தவறியதால் தெஹிவளையில் நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதற்காக கையகப்படுத்தப்பட்ட மற்று மொரு காணியும் இந்த வருட இறுதியில் எட்டு சட்டவிரோத குடியிருப்பாளர்களால் ஆக்கிரமிக்கப்பட் டுள்ளது. | **களுத்துறை நிலம்**<br>மனிதவளப் பிரிவினால் வெளிவாரி வழக்கறிஞர் பணியமர்த்தப்பட்டுள்ளது டன், இந்த வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.<br><br>**தெஹிவளை காணி**<br>கையகப்படுத்துவதற்கான நீதிமன்ற ஆணை செயற் படுத்தப்பட்டு வருகின்றது. ஆக்கிரமிப்பாளர்களை அகற்றுமாறு கல்கிஸ்ஸை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. | சபையின் சொத்துக்களின் உரிமை பாதுகாக் கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். |
| vii. | நிலத்தடி நீர்த்தேக்கம் மற்றும் பலாங்கொடை நீர் வழங்கல் திட்டத்திற்கான நுழைவுப் பாதையை அமைப்பதற்காக நிலச் சீர்திருத்த ஆணைக் குழுவிற்குச் சொந்தமான காணியை மாற்றுவதற்காக விலைமதிப்பீட்டுத் | கொள்வனவு விலையின் ஒரு பகுதி செலுத்தப்பட் டதுடன் உரிமைப் பத்திரம் வழங்குதல் நிலுவையில் உள்ளது. உரிமைத்துவ | சபையின் சொத்துக்களின் உரிமையானது முறையான காணி உறுதி அல்லது |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்திடமிருந்து விலை மதிப்பீட்டை பெற்றுக் கொள்ளாது 2013 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு ரூபா 1,675,000 தொகை முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும், நிலத்தின் உரிமையை மாற்றுவதற்கான பரிமாற்றச் சான்றிதழையோ அல்லது இலவசப் பத்திரத்தையோ அந்த ஆணைக்குழுவிடமிருந்து பெறுவதற்கு சபை தவறியிருந்தது. மேலும், காணியின் உரிமை தொடர்பாக வெளித்தரப்பினர் சபைக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். எவ்வாறாயினும், கொலொன்ன பலாங்கொடை நீர் வழங்கல் திட்டத்தின் நிதியில் சபையின் சட்டப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இரண்டு சட்ட உத்தியோகத்தர்களை சபை நியமித்திருந்த போதிலும் சபையை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு வெளிவாரி சட்டத்தரணி ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். | பத்திரத்தை விரைவாக வழங்குமாறு சபை பலமுறை எல்ஆர்சி. இற்கு கோரிக்கை விடுத்துள்ளது. | பரிமாற்றச் சான்றிதழின் மூலம் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும். |
| viii. | சபையின் சிரேஸ்ட சட்ட உத்தியோகத்தரின் பரிந்துரையின் மீது காலி பிரதேசத்திற்கான கழிவு நீர் சுத்திகரிப்புத் திட்டத்தின் கீழ் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கான நிலத்தை கொள்வனவு செய்வதற்காக நில உரிமையாளர் ஒருவருக்கு 2014 ஏப்ரலில் ரூபா 21.45 மில்லியன் அல்லது 30 வீத மதிப்பீட்டை சபை முற்பணமாக செலுத்தியிருந்தது. இதையடுத்து, நிலத்தின் உரிமை தொடர்பாக ஏற்பட்ட தகராறு காரணமாக, செலுத்தப்பட்ட முற்பணத்தை வசூலிக்க நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. மேலும், காணியை விற்பனை செய்வதற்கு காணி உரிமையாளரின் சம்மதம் குறித்த பத்திரங்கள் உரிய திகதிக்கு முன்னதாகவே வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. அதுமட்டுமன்றி, மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறும் சில குடும்பங்கள் இக்காணியை ஆக்கிரமித்துள்ளமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 2022 யூலை 31 வரையிலும் கூட, நில உரிமையாளரிடமிருந்து செலுத்தப்பட்ட முற்பணம் மற்றும் அபராதத் தொகையை அறவிடுவதற்குப் பொறுப்பான அதிகாரிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க சபை தவறியிருந்து. | முற்பணத்தை வசூலிக்கக் கோரி நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு இன்னும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. | சபையின் சொத்துக்களின் உரிமை பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்து, நிலங்களைப் பரிந்துரைப்பதற்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| ix. | ஆண்டின் இறுதியில் வருமானமற்ற தண்ணீர் உற்பத்தியை 23.09 சதவீதத்திற்கு குறைப்பதற்கு சபை திட்டமிட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் மொத்த உற்பத்தியில் அது 25.82 சதவீதமாக காணப்பட்டது. மேலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வருமானமற்ற தண்ணீர் | கடந்த இரண்டு ஆண்டுகளில் கோவிட் -19 தொற்று நிலைமை செயல் முன்னேற்றத்தை பாதித்தது. மேலும், குறிப்பிட்ட காலப்பகுதியில் நிலவிய | வருமானமற்ற தண்ணீர் குறைப்பு மீது அதிக கவனம் செலுத்துவதற்கும் அதன் மீது |

| | | |
|---|---|---|
| உற்பத்தியின் சதவீதம் 1.19 ஆல் அதிகரித்திருந்து. கசிவு, சட்டவிரோத இணைப்புகள், இலவச நீர் வழங்ககல் மற்றும் நிர்வாக திறமையீனங்கள் போன்றவற்றால் சபைக்கு குறிப்பிடத்தக்க நட்டங்கள் ஏற்பட்டிருந்த போதிலும். வருமானமற்ற தண்ணீரின் பெறுமதியை புறம்பாக கணக்கிடுவதற்குப் பதிலாக சாதாரண கிரயமாக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. மேலும், கொழும்பு நகரத்தில் வருமானமற்ற தண்ணீர் 34.75 சதவீதம் பதிவாகியிருந்த போதிலும், கொழும்பு நகரத்தில் வருமானமற்ற தண்ணீரின் அளவைக் குறைக்கும் நோக்கத்துடன் ரூபா 59,767 மில்லியன் கிரயத்தில் பாரியளவான வெளிநாட்டு நிதியளிப்புச் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு ள்ளன.<br><br>அதேநேரம் தெஹிவலை, கண்டி வடக்கு, கண்டி தெற்கு மற்றும் காலி பிராந்தியங்களில் வருமானமற்ற தண்ணீர் மீளாயவாண்டின் போது 30 சதவீதத்திற்கு மேலாக பதியவாகியிருந்த அதேவேளை கோட்டே, களனிய, களுத்துறை, கேகாலை, மாத்தறை, பண்டாரவல மற்றும் மொனராகலை ஆகிய ஏழு பிராந்தியங்களில் வருமானமற்ற தண்ணீர் 25 சதவீதத்திற்கு மேற்பட்டிருந்த போதிலும் 30 சதவீதத்திற்கு குறைவாகக் காணப்பட்டமையால் மீளாய்வாண்டின் மீளாய்வாண்டின் வருமானமற்ற தண்ணீரின் சதவீதத்தை குறைப்பதற்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை செய்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | கோவிட் 19-சூழ்நிலையின் விளைவாக வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளின் பற்றாக்குறை காரணமாக சபையின் வருடாந்த செயல்பாட்டு வரவுசெலவுத் திட்டத்தில் இருந்து ஒவ் வொரு பிராந்தியத்திற்கும் NRW இனை குறைப்ப தற்காக RSC இல் NRW நடவடிக்கைகளை திட்ட மிட்டபடி மேற்கொள்ள முடிந்திருக்கவில்லை. | குறிப்பிடத்தக்களவு பாதீட்டு ஒதுக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| i. | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடைப்போக்கிலுள்ள (உள்ளூர் கொள்வனவு) மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட இடைப்போக்கிலுள்ள இருப்புகள் முறையே ரூபா 61,113,682 மற்றும் ரூபா 2,224,233,337 ஆக இருந்தது. அந்த இருப்பில், ரூபா 454,921,682 தொகையான இருப்புகள் புலனாய்வு செய்யப்படாமல் ஒரு ஆண்டிற்கு மேலாக இருந்தது. | சபையிடம் எந்தவொரு வியாபாரப் பண்ட இருப்பும் இல்லை. பராமரிக்கப்படும் இருப்பு நுகர்வுப் பொருளா வதுடன் தேவைக்கேற்ப அவை பயன்படுத்தப்படுகி ன்றன. | நீண்டகாலம் நிலு வையாகவிருக்கின்ற இடைப் போக்கிலு ள்ள இருப்புக்களை புலனாய்வு செய்வத ற்கு நடவடிக்கை எடுப்பதுடன் நிதிக் கூற்றுக்களிலுள்ள இடைப் போக்கிலு ள்ள இருப்புக்களின் உண்மைத் தன்மை யை உறுதிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ii. | பண்டாரவளை பிராந்தியத்திலும், மொனராகலை, மாத்தறை மற்றும் காலி பிராந்தியங்களிலும் ரூபா 149,109,651 தொகையான வியாபார கடன்கொடுத்தோரிலுள்ள அசாதாரண வரவு மீதி தொடர்ந்தும் தீர்க்கப்படாது கணக்குகளில் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி மீதியில் ரூபா 17,482,910 தொகை பண்டாரவளை பிராந்திய த்தில் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை வைத்திருக்கப்பட்டுள்ளது. | **பண்டாரவலை**<br>இந்த மீதிகளை அகற்றும் செயல் முறையில் நாம் ஈடுபட்டுள்ளோம்.<br><br>**காலி பிராந்தியம்**<br>வியாபாரக் கடன்கொடுத் தோர் தொடர்பிலான சில கணக்கீட்டுப் பதிவுகள் கோவிட் 19 நிலைமை காரணமாக தாமதமடைந் தன. இருப்பினும் தற்போது இப்பதிவுகள் திருத்தப்பட்டு 2022.06.30 இல் அவை சாதரண வரவு மீதிகளாக உருவாக்கப்பட்டுள்ளன. | வியாபார கடன் கொடுத்தோரில் நீண்டகாலம் நிலுவையாகவிரு க்கின்ற அசாதாரண வரவு மீதிகளை புலனாய்வு செய்வ தற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| iii. | பாணந்துறை பிராந்தியத்தில் புதிய இணைப்புக் கடன்பட்டோர்களிலுள்ள ரூபா 5,545,062 தொகையான அசாதாரண செலவு மீதி புலானாய்வு செய்து தீர்க்கப்படாது மீளாய்வாண்டு இறுதிவரை கணக்குகளில் வைக்கப்பட்டுள்ளது. | வர்த்தகப் பிரிவின் உதவி யுடன் இந்த சிக்கலை தீர்ப்பதற்கு 2022 இல் நடவடிக்கை எடுக்கப்படும். | புதிய இணைப்புக் கடன்பட்டோரில் நீண்டகாலம் நிலு வையாகவிருக்கின்ற அசாதாரண செலவு மீதியை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| iv. | மீளாய்வாண்டு இறுதி வரையும் பலானாய்வு செய்து தீர்க்கப்படாமல் ரூபா 858,379 தொகையான இடைப் போக்கிலுள்ள காசில் அசாதாரண செலவு மீதியொன்று பிராந்திய ஆதரவு நிலையம் (ஊவா) இல் இருந்தது. | இந்த பெறுமதிக்காக கொடுப்பனவு செய்யப்ப டாத உறுதிச்சீட்டு ஒன்று 2022 சனவரி இல் தயாரிக்கப்பட்டது.<br>தற்போது அவ்வாறான மீதி எதுவும் இல்லை. | இடைப் போக்கிலு ள்ள காசு இலுள்ள அசாதாரண செலவு மீதியை புலனாய்வு செய்வதற்கு நடவடி க்கை எடுக்க வேண்டும். |
| v. | புலானாய்வு செய்து தீர்க்கப்படாது மீளாய்வாண்டு இறுதிவரை எட்டு செயற்திட்டங்களிற்குரிய (00/0/07/242/0 மற்றும் 00/0/05/242/0) ஒப்பந்த முற்பணங்களில் ரூபா 1,202,772 அசாதாரண செலவு மீதி அவதானிக்கப்பட்டது. | இது 2022 இல் திருத்தப்படும் | ஒப்பந்த முற்பணத் தில் நீண்ட கால மாக காணப்படும் அசாதாரண செலவு மீதியை புலனாய்வு செய்வதற்கு நடவடி க்கை எடுக்க வேண்டும்.<br>. |
| Vii | ஆம்பாறை முகாமையாளர் அலுவலகத்தின் வாகனப் பட்டியலில் உள்ளடக்கப்படாத எட்டு (08) வாகனங்களிற்கு எரிபொருள் வழங்குவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 480,000 தொகை விடுவிக்கப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | -மேற்படி- |

## 3.4 நிதியங்களை பயன்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் திட்டங்களின் அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட ரூபா 983.5 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 441.97 மில்லியன் மட்டுமே மீளாய்வாண்டின் இறுதியில பயன்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், பெறப்பட்ட நிதியிலிருந்து சி.கே.டி-யால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நீர் மூலம் பரவும் நோய்களைத் தடுப்பதற்கும் திருகோணமலை நீர் வழங்கல் திட்டத்தை விரிவாக்குவதற்கும் முறையே ரூபா 227.0 மில்லியன் மற்றும் ரூபா 79.39 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதிலிருந்து முறையே ரூபா 222.9 மில்லியன் மற்றும் ரூபா 75.86 மில்லியன் மதிப்பாய்வு மாத்திரமே மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மட்டுமே பயன்படுத்தப்பட்டது. | கோவிட்-19 உலக ளாவிய தொற்றுநோய் சூழ்நிலையின் விளை வாக, தளங்களில் தொழிலாளர் பற்றாக் குறை, பொருட்களை வழங்குவதில் தாமதம் போன்றவற்றால் எதிர்பார்த்தவாறு நிதியை பயன்படுத்த முடியவில்லை. | செயற்திட்டங்களு க்கு பெறப்பட்ட நிதி முழுமையாக பயன்படுத்தப்படு வதை உறுதி செய்ய வேண் டும். |

## 3.5 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாக பயன்படுத்திய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| i. | அம்பாறை, மொனராகலை மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களுக்கு நீர் விநியோகத்தை வழங்கு வதற்காக, அம்பாறை நீர் வழங்கல் செயற்திட்டம் (கட்டம் III) 2010 நவம்பரில் ரூபா 20,825 மில்லியன் மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்பட்டு 2015 டிசம்பரில் முடிக்க பட்டியலிடப்பட்டது. செயற்திட்டக் கூறின் (ii) கீழ், ஆறு உயர்த்தப்பட்ட நீர்த் தொட்டிகளை நிர்மாணித்து, 2013 சனவரி மற்றும் மார்ச் இல் ஒப்பந்தங்களை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டு, 2014 ஆகஸ்ட் மற்றும் 2015 மார்ச் ஆகிய தேதிகளில் முடிப்பதற்கு பட்டியலிடப்பட்டது. இருப்பினும், ஒப்பந்ததாரர்களின் மோசமான செயல்திறன் காரணமாக, 2020 ஆகஸ்ட் 24 இல் அது நிறுத்தப்பட்டது. அதன்படி ரூபா 30,351,710 செலவில் கட்டப்பட்ட ஆறு நீர் கோபுரங்கள் மற்றும் ரூபா 15,790,210 மதிப்பிலான DI குழாய்கள் மற்றும் பொருத்துதல்கள் 2022 பெப்ரவரி இறுதி வரை விளைவற்ற நிலையில் இருந்தன. இருப்பினும், மீதமுள்ள பணிகளை முடிப்பதற்கான புதிய ஒப்பந்தங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வழங்கப்படவில்லை. அதனால், செயற்திட்டத்தின் நோக்கங்களை உரிய நேரத்தில் அடைய முடிந்திருக்கவில்லை. | இந்த ஆறு தளங்களிலும் நீண்ட காலமாக மோச மான செயலாற்றல் காணப்பட்டதுடன் ஒப்பந் ததாரர் குறிப்பிட்ட காலத்திற்குள் தங்கள் இலக்கை அடையத் தவறியதால் ஒப்பந்தம் நிறுத்தப்பட்டது. மேற்படி நீர் கோபுர கட்டுமானத் தின் எஞ்சிய வேலை களை நாட்டின் தற்போ தைய பொருளாதார சூழ்நிலையின் காரண மாக, 2021 மார்ச் 10 அன்று புதிய ஒப்பந்தத் திற்கு கேள்விகள் அழைக்கப்பட்டு, MPC இனால் வழங்குவதற்குக் காத்திருக்கப்படுகின்றது. மேலும் நேரடி பம்பிங் காரணமாக, அதிக பம்ப் அழுத்தம் ஏற்படுவதால் அடிக்கடி வெடிப்புகள், அதிக சேறு, போன்ற பல சிரமங்களை O&M | செயற்திட்ட நோக் கங்களை அடை யும் நோக்கில் பகுதியளவில் பூரணப்படுத்திய தண்ணீர் கோபுரங் கள், DI குழாய் கள் மற்றும் பொரு த்துகளை வினைத் திறனாக பயன்படு த்தவதற்கு துரித மாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எதிர்கொள்கிறது. எனவே, 06 நீர் கோபுரங்களை பூரணப்படுத்துதல் முக்கியமானதாக உள்ளது. | |
| ii. | தமன நீர் வழங்கல் திட்டம், இறக்காமம் நீர் வழங்கல் திட்டம், சாகம்ம நீர் வழங்கல் திட்டம் மற்றும் மந்தான நீர் வழங்கல் திட்டங்களில் ரூபா 33,148,739 செலவில் நிர்மாணிக்கப்பட்ட பதின்மூன்று (13) அலுவலக விடுதிகள் மீளாய்வாண்டின் இறுதிவரை விளைவற்றதாகக் காணப்பட்டன. மேலும், அக்கரைப்பற்று மற்றும் அம்பாறை முகாமையாளர் அலுவலகங்கள் மற்றும் கொண்டுவட்டுவான நீர் வழங்கல் திட்டத்துடன் தொடர்புடைய 91 அலுவலக விடுதிகளில் எவரும் குடியிருத்தப்படவில்லை, எனவே 2022 சனவரி 28 அன்று மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையில் அவை விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | விடுதிகளுக்கான கோரிக்கைகள் கிடைக்கும் போது அவை ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. | அலுவலர் விடுதிகளை முழுமையாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| iii. | பரகஹகலே நீர் வழங்கல் திட்டம் மற்றும் ஹிங்குரானை நீர் வழங்கல் திட்டத்திற்குரிய விநியோக பாதைகள் மாற்றியமைக்கப்பட்டமை காரணமாக ரூபா 5,585,337 மற்றும் ரூபா 84,235,632 பெறுமதியுடைய முறையே இங்கினியாகல மற்றும் வதனகல நீர் வழங்கல் திட்டம் மற்றும் தமன நீர் வழங்கல் திட்டத்துடன் தொடர்புடைய அனைத்து கட்டுமானங்களும் மீளாய்வாண்டு இறுதிவரை பயன்படுத்தாது காணப்பட்டன. | குறித்துக்கொள்ளப்பட்டது | நிறுத்தப்பட்ட நீர் வழங்கல் திட்டங்களின் செயலற்ற கட்டுமானங்களை பயன்படுத்த மாற்று வழிகளைக் கண்டறிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| iv. | சீன அபிவிருத்தி வங்கியினால் கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவாங்கொட நீர் வழங்கல் திட்டத்திற்காக வழங்கப்பட்ட கடனுக்கான சலுகைக் காலத்தின் பின்னர், மீளாய்வாண்டின் இறுதியில் அமெரிக்க டொலர் 37.5 மில்லியன் தொகையான ஐந்து கடன் தவணைகள் செலுத்தப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், சீனா அபிவிருத்தி வங்கி வழங்கிய கடனிலிருந்து மீளாய்வாண்டின் இறுதிக்குள் செயற்திட்ட நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தாமல், ரூபா 11,828.23 மில்லியன் அல்லது கடனில் 30 சதவீதத்திற்கு சமமான அமெரிக்க டாலர் 58,267,381.31 தொகை எஸ்க்ரோ கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. | கடன் ஒப்பந்தத்தை மறுசீரமைக்க CDB வங்கி ஒப்புக்கொள்ளவில்லை, ஆனால் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களைத் தொடர்வதற்கு வழங்கப்படாத மீதிக் காசு தேவையாக உள்ளதால் ESCROW கணக்கில் வைப்புச் செய்யப்பட்டது. | எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளை அடைவதற்காக இணங்கிய ஒப்பந்த காலத்திற்கு முன்னர் திட்டத்தை முடிப்பதற்கும் உடன்படிக்கைகளிற்கு நிதியளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| v. | பொறியியல் மதிப்பீட்டைத் தயாரிக்காமல், அக்கரைப்பற்றுப் பொறுப்பதிகாரி அலுவலகத்தில் இருந்த 800 KVA இயலளவுடைய மின்பிறப்பாக்கி | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | விளைவற்ற சொத்துக்களை பயனுறுதியாக பயன்படு |

| | | | |
|---|---|---|---|
| | அதன் வழங்குனரிடம் 2019 யூலை 08 அன்று மதிப்பிடப்பட்ட பழுதுபார்ப்புச் செலவான ரூபா 10,466,352 தொகைக்கு ஒப்படைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, திணைக்கள கொள்வனவுச் சபை எடுத்த முடிவின் அடிப்படையில், 2021 ஆகஸ்ட 16 அன்று ரூபா 9,960,575 ஒப்பந்தத் தொகைக்கு மற்றொரு ஏலதாரருக்கு பழுதுபார்ப்பதற்கான ஒப்பந்தம் மீண்டும் வழங்கப்பட்டது. பின்னர் கையளிக்கப்பட்ட உடன்படிக்கையிலுள்ள ஒப்பந்த விலை ரூபா 12,625,465 ஆல் அல்லது அசல் ஒப்பந்த விலையில் 27 சதவீதத்தால் திருத்தப்பட்டது. எவ்வாறாயினும், 2022 சனவரி இறுதியில் உள்ளவாறு 2 ½ வருடங்கள் கடந்திருந்த நிலையில், போக்குவரத்து மற்றும் பரிசோதனைக்காக ரூபா 195,975 செலவழிக்கப்பட்ட பின்னரும் அதன் வழங்குனரைக் கொண்டு மின்பிறப்பாக்கியை பழுதுபார்ப்பதற்கு முகாமைத்துவத்தால் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | த்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| vi. | பிராந்திய ஆதரவு நிலையத்தின் (மேற்கு உற்பத்தி) பயன்பாட்டிற்காக கொழும்பு மாவட்ட கிழக்கு நீர் வழங்கல் திட்டத்தின் நிதியிலிருந்து 2018 ஆம் ஆண்டில் ரூபா 22.3 மில்லியன் செலவில் அகழ்வாராய்ச்சி இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டது. இருப்பினும், இது 2021 திசெம்பர் இறுதிவரை 60.5 மணிநேரம் மட்டுமே பயன்படுத்தப்பட்டதுடன் பிராந்திய ஆதரவு மையத்தின் (மேற்கு உற்பத்தி) செயல்பாட்டு நடவடிக்கைகளுக்கு 2021 ஏப்ரல் 28 முதல் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | -மேற்படி- |
| vii. | ரூபா 10 மில்லியன் பெறுமதியான பழுதடைந்த பொத்துவில் கெமரா முறைமை பொத்துவில் பொறுப்பதிகாரி அலுவலகத்தில் இருந்து 2017 யூலை 03 அன்று அக்கரைப்பற்று முகாமையாளர் காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டது. எனினும் 2022 ஜனவரி இறுதி வரையிலும் அது திருத்தப்பட்டிருக்கவில்லை. | அதனைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | -மேற்படி- |
| viii. | 2007 ஆம் ஆண்டு முதல் பொத்துவில் பொறுப்பதிகாரி அலுவலகத்தில் ரூபா 4 மில்லியன் பெறுமதியான சகதி களஞ்சியப் பகுதி மற்றும் சேறு பாதுகாப்புத் தொட்டி பயன்படுத்தப்படாதுள்ளது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | -மேற்படி- |
| ix. | USAID இடமிருந்து இலவசமாக கிடைத்திருந்த ரூபா 8 மில்லியன் பெறுமதியான நீர் சுத்திகரிப்பு அலகு (deposited filter media) பொத்துவில் | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | உல்லா நீர் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன் நீர்ச்சிக்கல் காரணமாக அது சேதமடைந்துள்ளது. மேலும் நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் 5600 Cum3 கொள்ளளவில், 1300 cum3 அல்லது 23 சதவீதம் மட்டுமே 2022 சனவரி இறுதியில் பயன்படுத்தப்பட்டிருந்தது. | | |
| x. | ரூபா 632,408,899 மற்றும் ரூபா 683,130,578 மதிப்புள்ள முறையே நகராத இருப்புகள் மற்றும் மெதுவாக நகரும் இருப்புகள் இந்த ஆண்டின் இறுதியில் உள்ளவாறு சபையின் களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்ததுடன், இது சபையின் மொத்த இருப்புகளில் முறையே 6 மற்றும் 8 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்திருந்தன. | நகராத இருப்புகள் மற்றும் மெதுவாக நகரும் இருப்புகள் என இருப்புக்கள் வகைப்படுத்தப்பட்ட போதிலும், அவை NWSDB இன் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. | நகராத இருப்புகள் மற்றும் மெதுவாக நகரும் இருப்புகளை தவிர்க்கும் விதத்தில் இருப்பு மட்டங்களைக் கருத்திற்கொண்டு எதிர்காலத்தில் இருப்புக்களிற்கு கட்டளையிடுதல் வேண்டும். |

## 3.6 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளிலுள்ள தாமதம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| i. | பதினாறு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் ஆறு உள்நாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் என்பன தொடர்பில் ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல், காணி சிக்கல்களை தீர்ப்பதில் தாமதம், சுற்றாடல் மற்றும் மீள்குடியேற்ற பிரச்சனைகள், ஒப்பந்தங்கள் வழங்குவதில் தாமதம் போன்றன காரணமாக 01 முதல் 09 சந்தர்ப்பங்களில் காலநீடிப்புக்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டங்களில் 184 நாட்கள் முதல் 1779 நாட்கள் வீச்செல்லையான கருத்திற் கொள்ளக்கூடிய தாமதங்கள் அவதானிக்கப்பட்டது. | நீர் மூலங்கள் தொடர்பில் விவசாயிகளின் எதிர்ப்புகள், கோவிட் -19 தொற்று நோய், கட்டுமானங்களுக்கு அரசு விதித்துள்ள தடைகள், கடன் தரமதிப்பீடு மற்றும் ஐபிசி கொடுப்பனவுகளை இடைநிறுத்தியமை, நிலம் கையகப்படுத்துதல் சிக்கல்கள், பயன்பாட்டு மாற்றம், வெளி நிறுவனங்களிடமிருந்து உரிய அனுமதிகளைப் பெறுவதில் தாமதம் ஒப்பந்ததாரர்களின் நிதி நெருக்கடி, பாதகமான வானிலை, நிதி ஒதுக்கீடுகள் பற்றாக்குறை, கொள்முதல் தாமதம் (ஒப்பந்தம் | • செயற்திட்ட தாமதங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஒப்பந்தகாரர்களிற்கு நீடிப்புகள் வழங்கப்பட்டு அவற்றால் ஒப்பந்தங்களிற்கு நீடிப்புகள் மற்றும் காலத்தை நீடிக்கும் சந்தர்ப்பத்தில். ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், தாமத கட்டணங்கள் கழிப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.<br>• அமுலாக்கலின் போது சபையினுடைய உத்தியோகத்தர்களால் செயற்திட்டத்தை நெருக்கமாக |

| | | |
|---|---|---|
| | வழங்குவதில் தாமதம்), தற்போதைய பொருளாதார நெருக்கடி, இறக்குமதி கட்டுப்பாடுகள், உப ஒப்பந்ததாரர்களை நியமிப்பதில் தாமதம் போன்றவற்றால் இந்த தாமதங்கள் ஏற்பட்டன. | கண்காணிக்க வேண்டும். |
| ii. இரத்தினபுரி வைத்தியசாலையிலுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்தை புனரமைப்பதற்கான ஒப்பந்தத்திற்கு 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் சுகாதார அமைச்சினால் தேவையான நிதி வழங்கப்பட்டுள்ள போதிலும், 3 வருட கால தாமதத்துடன் 2018 ஒக்டோபர் 17 ஆம் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டது. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், ஒப்பந்தத்தை 2019 பெப்ரவரி 28 அன்று முடிக்க வேண்டியிருந்தது. இருப்பினும், மோசமான ஒப்பந்ததாரர் செயலாற்றல் காரணமாக, 2021 நவம்பர் இறுதி வரையிலும் வேலைகள் முடிக்கப்படவில்லை. மேலும் முற்பணப் பிணைமுறியின் செல்லுபடியாகும் காலம் முடியும் வரை ஒப்பந்ததாரர் பணிகளைத் தொடங்கத் தவறியிருந்தார். | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | -மேற்படி- |
| iii. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, இறக்காமம், அக்கரைப்பற்று மற்றும் பொதுவில் நீர் வழங்கல் திட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட ரூபா 4,528,678 கிரயத்துடன் கூடிய நான்கு மீள உயிர்ப்பிக்கக்கூடிய (ரீசார்ஜ்) செயற்திட்டங்களின் பணிகளை நிறைவு செய்வதில் 1 வருடம் முதல் 5 வருடங்கள் வரை கணிசமான கால தாமதம் அவதானிக்கப்பட்டது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | -மேற்படி- |
| iv. சாய்ந்தமருது பொறுப்பாளர் அலுவலகம் மற்றும் உதவி பொது முகாமையாளர் அலுவலகம் (கிழக்கு) ஆகியவற்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் முறையே 2021 டிசம்பர் மற்றும் 2021 நவம்பர் இல் பூரணப்படுத்த வேண்டுமென்ற பட்டியலிடப்பட்ட திகதிகளுடன் ரூபா 15.85 மில்லியன் ஒப்பந்த பெறுமதிக்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2021 சனவரி 25 அன்று நடத்தப்பட்ட பௌதீக கணக்காய்வின் படி, அந்தந்த ஒப்பந்தங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதும், ரூபா 1,531,942 11,146,120 மதிப்பிலான 08 ஒப்பந்த வேலைகள் மற்றும் ரூபா மதிப்பிலான 26 ஒப்பந்த வேலைகள் தொடர்பாக எந்தவித பௌதீக செயன்முன்னேற்றமும் காணப்படவி ல்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| v. | சாகம்ம நிலத்தடி நீர் தேக்கத்தை புனரமைப்பதற்கான ஒப்பந்த வேலை ரூபா 7.04 மில்லியன் ஒப்பந்தத் தொகைக்கு 2021 யூலை 14 அன்று 63 நாட்களில் பூரணப்படுத்த வேண்டுமென்ற பட்டியலிடப்பட்ட காலத்துடன் வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்த வேலைகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட கடிதத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் வேலைகள் தொடங்கப்பட வேண்டிய போதிலும், 2021 செப்டம்பர் 03 வரையிலும் அதாவது 38 நாட்கள் கழிந்த பின்னரும் ஒப்பந்தக்காரர் திட்டப் பணிகளைத் தொடங்கத் தவறியிருந்தார். மேலும், ஒப்பந்ததாரர் ஒப்பந்த வேலைகளை ஏற்றுக்கொள்ளும் கடிதத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் செயலாற்றல் பிணைமுறியை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அதற்குப் பதிலாக பட்டியலிடப்பட்ட காலத்திலிருந்து மூன்று மாதங்கள் கழித்து அது சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் ஒப்பந்ததாரர் 2022 சனவரி இறுதி வரையிலும் ஒப்பந்த வேலைகளை முடிக்கத் தவறியிருந்ததுடன், 2022 சனவரி 28 நிலவரப்படி அதன் செயல் முன்னேற்றம் 7 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டது. | குறித்துக் கொள்ளப் பட்டது. | -மேற்படி- |

## 3.7 கொள்வனவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| i. | களுத்துறை அல்விஸ் இடத்திலுள்ள நிலக்கீழ் நீர்த்தேக்கத்தை புனரமைக்கும் ஒப்பந்தத்தின் மாற்றமின்றிய வேலை அளவுத்திட்டத்திற்காக இரண்டு தடவைகள் தயாரிக்கப்பட்ட இரண்டு பொறியியலாளர் மதிப்பீடுகளுக்கு இடையே 18.3 சதவீத அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. எனவே பொறியியல் மதிப்பீடுகளின் தயாரிப்பின் நம்பகத்தன்மை குறித்து சந்தேகம் காணப்படுகின்றது. மேலும், கொள்வனவுச் செயல்முறையின் வினைத்திறமையின்மை காரணமாக ஒப்பந்தத்தை வழங்குவதற்கு கிட்டத்தட்ட ஒரு வருடம் எடுக்கப்பட்டிருந்தது. அதுமட்டுமின்றி, ஒப்பந்தத்தின் நோக்கெல்லையை முறையாகக் கண்டறியத் தவறியதால், மேலதிக முரண் கட்டளைகளுக்காக ரூபா 3,736,057 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்டம் 2020 செப்டம்பர் 15 அன்று வழங்கப்பட்டிருந்ததுடன் மூன்று மாதங்களுக்குள் முடிப்பதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2021 ஒக்தோபர் 20 வரையிலும் எதிர்பார்த்தபடி ஒப்பந்தத்தை முடிக்கத் தவறியதால் இரண்டு கால நீடிப்புகள் சபையால் வழங்கப்பட்டன. இதன் விளைவாக சபை வழங்கிய ரூபா 14.8 மில்லியன் முற்பணத்திலிருந்து ரூபா 3.8 மில்லியனுக்குச் சமமான தொகை மாத்திரமே 2021 யூலை 31 வரையிலும் | இந்த குறித்துரைத்த பணியின் செயல்முறைச் சிரமங்களைக் கருத்தில் கொண்டு கட்டண வீதங்கள் திருத்தப்பட்டன;<br><br>பொறியாளரின் மதிப்பீட்டை மறுபரிசீலனை செய்வதற்கான தீர்மானம் 2020 சனவரி 28 அன்று பெறப்பட்டதுடன் ஒப்பந்தம் 2020 செப்தெம்பர் 15 அன்று வழங்கப்பட்டது. மேலும் கோவிட் 19 தாக்கமானது கொள்வனவுகளில் தாமதத்தை ஏற்படுத்தியது. இது $6,800m^3$ இயலளவுடைய 2 தாங்கிகளைக் கொண்ட நீர்த்தேக்கமாவதுடன் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் விரிவான விசாரணையை மேற்கொள்வது மிகவும் கடினமானதாகும்.<br>நடைமுறைக் கட்டுப்பாடுகளுடன், உயர் அழுத்த நீர் ஜெட்கள் மூலம் நீர்தேக்க | • கொள்வனவு செயல் முறையை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.<br>• ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன், விரிவான விசாரணை மூலம் பணிகளின் நோக்கம் கண்டறியப்பட வேண்டும்.<br>• கேள்விகோரல் அறிவிப்புகளை வெளியிடுவதற்கு முன் மிகவும் நம்பகமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்பட்டிருந்தது. | த்தை சுத்தம் செய்யும் போது எதிர்பாராத குறைபாடுகள் தோன்றுகின்றது. | |
| ii. | கொள்வனவு வழிகாட்டுதல்களின் பிரிவு 2.3.1 இன் படி, செயற்திட்டங்களை தடையின்றி செயல்படுத் துவதற்குத் தேவையாகவுள்ள காணி கையகப்படுத்தல்கள் மற்றும் இழப்பீடுகளை தீர்த்தல், பயன்பாட்டுச் சேவைகளை மீளவைத்தல் உள்ளிட்ட மீளக் குடியமர்த்தல் சிக்கல்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தீர்க்கப்பட்டுள்ளதா என்பது குறித்து சபை திருப்திப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், மீளக் குடியமர்த்தலுக்காக உத்தேசிக்கப்பட்ட காணிகளை கையகப்படுத்துதல் மற்றும் கம்பஹா அத்தனகல்ல மற்றும் மினுவாங்கொடை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்திற்கான நீர் கோபுரங்களை நிர்மாணித்தல் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்ட 2 வது நீடிப்பு காலம் முடிவடைந்த பின்னரும் அப்பணிகள் நிறைவடை யவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | நிலம் கையகப்படுத்துதலுக் கான நிதி வழங்கல் உறுதிப்பாடு இறுதியாக 2020 பெப்ரவரி இல் அங்கீகரிக்கப் பட்டது. பாதிக்கப்பட்ட குடும்ப ங்களின் துயர்கள் காரணமா கவும், கோல்டன் பங்கு உரிமையை விடுவித்தல் தாமதம் மற்றும் கோவிட் 19 காரணமாகவும் கட்டுமானப் பொருட்களின் தற்போதைய விரைவான விலை அதிகரிப்பு காரணமாகவும் இது மேலும் தாமதமடைந்துள்ளது. | ஆரசாங்க கொள்முதல் வழிகாட்டுதலின் விதிகளை கடை பிடிக்க வேண்டு ம். |
| iii. | கொள்வனவு வழிகாட்டியின் பிரிவு 6.3.3(ஆ) க்கு மாறாக, காரைதீவு பொறுப்பதிகாரி அலுவலகத்தை விரிவுபடுத்துவதற்கான ஒப்பந்தம் தொடர்பான கேள்விப்பத்திரங்களை திறக்க 48 நாட்கள் கால அவகாசம் செலவிடப்பட்டதுடன் கொள்வனவு வழிகாட்டுதலின் பிரிவு 7.8.6 க்கு முரணாக வேலை ஒப்பந்தமானது உரிய விதத்தில் கேள்வியை கையளித்திருந்த வெற்றிகரமான கேள்விதாரருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | -மேற்படி- |
| iv. | கொள்வனவு வழிகாட்டுதலின் பிரிவு 5.4.4 க்கு மாறாக, செல்லுபடியாகும் எழுத்துப்பூர்வ ஒப்பந்தம் இல்லாமல் காலி முகாமையாளர் அலுவலகத்தில் 2021 சனவரி 01 முதல் 2021 யூன் 30 வரை நேரடியாக வழங்குனர்களுக்கு ரூபா 1,417,515 செலுத்தப்பட்டிருந்தது. மேலும் 6 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட மேற்படி தொகையிலுந்து ரூபா 223,000க்கு இற்குச் சமமான தொகையானது 30 ஜூன் 2021 யூன் 30 வரையிலும் அந்தந்த வழங்குனர்களால் தீர்க்கப்படவில்லை. | சமீபத்திய கோவிட் தொற்று நோய் சூழ்நிலை காரணமாக நடமாட்டங்களிற்கு கட்டுப்பா டுகள் விதிக்கப்பட்டதாலும் அலுவலகத்திற்கு சமூகமளி த்தல் குறைந்ததன் காரணமா கவும் மேற்குறித்த தொகை பின்னர் தீர்க்கப்பட்டது. முற்ப ணங்கள் இப்போது முழுமை யாக தீர்க்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

### 3.8 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **3.8.1 களுகங்கை நீர் வழங்கல் விரிவாக்கச் செயற்திட்டம் (1)**<br>----------------------------------------<br>இச்செயற்திட்டமானது 2020 டிசம்பரில் தனது | இந்த காலகட்டத்தில் இல | செயற்திட்டத்தை |

| | | |
|---|---|---|
| செயற்பாடுகளை ஆரம்பித்து 2025 ஏப்ரலுக்குள் நிறைவு செய்ய பட்டியலிடப்பட்டிருந்தது. களுகங்கை நீர் வழங்கல் வசதிகளை விரிவுபடுத்துதல் மற்றும் நீர் விநியோக வலையமைப்பு மறுசீரமைப்பு மூலம் மேற்கு மாகாணத்தின் தெற்குப் பகுதியில் பாதுகாப்பான நீரினை வழங்குதல் மற்றும் நீர் விநியோகத் திறனை அதிகரிப்பதன் மூலம் அங்குள்ள மக்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்த பங்களித்தல் என்பன இச்செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்டமானது கட்டுமான நடவடிக்கைகளுக்கான பத்து ஒப்பந்தப் பொதிகளையும் ஒரு ஆலோசனைச் சேவைப் பொதியையும் கொண்டிருந்தது. பத்து ஒப்பந்தங்களில், திட்டம்-1 இல் உள்ள ஐந்து ஒப்பந்தங்களின் விரிவான வடிவமைப்பு மற்றும் கட்டுமானப் பணிகள் மற்றும் திட்டம் -2 இல் மீதமுள்ள ஐந்து ஒப்பந்த தொகுப்புகள் தொடர்பான விரிவான வடிவமைப்பு பணிகளை மாத்திரமே இச்செயற்திட்டத்தின் கீழ் முடிக்க பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஆலோசனை ஒப்பந்தம் மட்டுமே வழங்கப்பட்டதுடன் விரிவான வடிவமைப்பு மற்றும் கொள்வனவுச் செயல்பாட்டில் உதவி வழங்குதல் என்பன ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனவே, 2021 திசெம்பர் 31 வரை இச்செயற்திட்டத்தில் எந்தவிதமான பௌதீக செயல் முன்னேற்றமும் காணப்படவில்லை. | ங்கை அரசாங்கம் இடைக் கால கடன் கொள்கையை ஏற்றுக்கொண்டது. எனவே, இந்த செயற்திட்டத்திற்கு மானியம் வழங்குவது தடுக்கப்பட்டது. இதனால், இத்திட்டத்தின் முன்னேற்றம் நிறுத்தப்பட்டது. இருப்பினும், செயற்திட்டப் பணிகள் 2023 ஆம் ஆண்டில் தொடங்கப் படும். | ஒப்பந்த காலப் பகுதிக்குள் செயற்திட்டத்தை பூர்த்தியாக்கும் நோக்கில் செயற் திட்ட வேலை களை துரிதப்படு த்த நடவடிக்கை எடுத்தல் வேண் டும். |

**3.8.2 களனி வலதுபக்க நீர் வழங்கல் செயற்திட்டம் (கட்டம் ii)**

---

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| i. | இச்செயற்திட்டம் 2017 சனவரி 23 அன்று அதன் செயற்பாடுகளை ஆரம்பித்ததுடன் 2020 சனவரி 23 ஆம் திகதியுடன் நிறைவு செய்யப் பட்டியலிடப்பட்டது. எனினும் அது 2020 நவம்பர் 07 வரை நீடிக்கப்பட்டது. மேலும், களனி ஆற்றின் நீரின் தரத்தை மேம்படுத்துவதன் கீழ், பியகம முதலீட்டுச் சபை வலயத்தின் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை உள்வாங்கி ஆற்றில் கொட்டுதல் இச்செயற்திட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். இருப்பினும் 2022 சனவரி இறுதி வரையிலும் பணியை முடிக்க முடிந்திருக்க வில்லை. | பொதுமக்களின் ஆட்சேப னையின் காரணமாக ஆற்றின் வெளியேறும் இடம் இரண்டு முறை மாற்றப்பட்டு ஆற்றின் கீழ்ப்பகுதிக்கு (தல்வத்த கால்வாய் வெளி யேற்றம் வரை) மாற்றப்பட்ட துடன் பியகம பிரதேச சைபயில்ல் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபை யில் எடுக்கப்பட்ட தீர்மான ங்களின் படி இறுதி செய்யப் பட்டுள்ளது. | செயற்திட்டத்தை ஒப்பந்த காலப் பகுதிக்குள் பூர்த்தியாக்கும் நோக்கில் செயற் திட்ட வேலை களை துரிதப்படு த்த நடவடிக்கை எடுத்தல் வேண் டும். |
| ii. | சபையால் பொறியியல் மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் அலட்சியம் காட்டியதாலும், முறையான திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இல்லாமல் திட்டத்தைச் செயல்படுத்தியதாலும், மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 80,848,773 | NWSDB யில் சரியான களஞ்சிய வசதிகள் இல்லா ததால், களஞ்சியங்களை அமைப்பதற்கு செயற்திட்ட த்தின் உள்நாட்டு நிதியைப் | கொள்வனவை மேற்கொள்ள முன்னர் குழா ய்கள் மற்றும் பொருத்துதல்கை |

| | | | |
|---|---|---|---|
| | மேலதிக செலவினம் உள்நாட்டு நிதியில் இருந்து செய்யப்பட்டிருந்ததுடன் தற்காலிக களஞ்சிய த்திலிருந்து குழாய்கள் மற்றும் பொருத்துதல்களை மீள வைப்பதற்கான முரண் வேலைக் கட்டளைகளின் கீழ் ரூபா 15,803,377 செலுத்தப்பட்டிருந்தது. | பயன்படுத்த முடிவு செய்ய ப்பட்டது. கொள்வனவு தாம தம் காரணமாக குழாய்கள் இன்னும் வந்தடையாததால் RSC W-N ஆல் களஞ்சிய கட்டுமானத்தை முடிக்க முடியவில்லை. எனவே, பெறப்பட்ட குழாய் கொள்க லன்கள் குளாய்க் கொள்க லன் களஞ்சியத்தில் வைக்க ப்பட்டு புதிய இடங்களுக்கு மாற்றப்பட்டதுடன், அதற் கான போக்குவரத்து/ இறக்கிஏற்றல் செலவுகள் ஒப்பந்ததாரருக்கு செலுத்தப் பட்டது. | ள வைப்பதற்கு போதியளவு இடவசதி காணப் படுவதை உறுதி ப்படுத்த வேண் டும். |
| iii. | செயற்திட்ட நோக்கங்களுக்கு மாறாக செயற்திட்ட சேமிப்பில் இருந்து சபையின் பிராந்திய ஆதரவு மையங்களுக்கான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு மீளாய்வாண்டில் ரூபா 27,054,000 செலவழிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | புதிய இணைப்புகளின் செயல்பாடுகள் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கு வசதியாக, அத்தியாவசிய உபகரணங்களை வாங்குவ தற்கு பணம் செலுத்த, செயற்திட்டத்திற்காக கிடைக்கும் நிதியில் இருந்து மேற்கண்ட தொகை பயன்படுத்தப்பட்டது. | குறித்துரைத்த பணிகளிற்கு மாத்திரம் செயற் திட்ட நிதிகள் பயன்படுத்தப்படு வதை உறுதிப்ப டுத்த வேண்டும். |

### 3.8.3 நகரங்களின் செயற்திட்டத்திற்கான சுகாதாரம் மற்றும் சுத்திகரிப்பு ஏற்பாடுகள்

---

கழிவு நீர் சேகரிப்பு மற்றும் சுத்திகரிப்பு முறைமைகளை விரிவுபடுத்தி நீர்கொழும்பில் வசிக்கின்ற 73,000 பேருக்கு மேம்படுத்திய சுத்திகரிப்பு சேவைகளை பெற்றுக்கொடுத்தல், நீர் மற்றும் சுத்திகரிப்புத் துறையின் கட்டமைப்பை தெளிவுபடுத்தி மேம்படுத்துதல், பின்தங்கிய குடும்பங்களிற்கு வறுமையை எதிர்த்துப் போராடுவதற்கு உதவுதல், கடலோர மற்றும் கடல்சார் சூழல் அமைப்புகளைப் பாதுகாத்தல், உயிர்-பன்முகத்தன்மையைப் பேணுதல் ஆகியவற்றிற்காக இந்த செயற்திட்டம் தொடங்கப்பட்டது. இந்த செயற்திட்டம் 2016 யூன் 01 அன்று அதன் செயல்பாடுகளை ஆரம்பித்ததுடன் 2022 யூன் 30 க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| i. | ரூபா 54,667,356 செலவிலான கொள்கை மற்றும் நிறுவன மேம்படுத்தல் ஆலோசனை ஒப்பந்த மானது NWSD இன் கணக்கீட்டு முறைமையை அபிவிருத்தி செய்வதற்காக 3 வியோகிக்கத்தக்க, 4 வியோகிக்கத்தக்க மற்றும் 5 வியோகிக்கத்தக்க என்ற பெயருடைய அறிக்கைளையும் 2020 இல் சபை (NWSDB) இன் கழிவுநீர் முகாமைத்துவ திறன்களை மேம்படுத்துவதற்காக 7 வியோகிக் கத்தக்க மற்றும் 8 வியோகிக்கத்தக்க என்ற பெயருடைய அறிக்கைகளையும் சமர்ப்பித்து ள்ளது. இருப்பினும், அந்த அறிக்கைகளில் உள்ள பரிந்துரைகள் 2022 மே 25 வரையிலும் NWSDB ஆல் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | விநியோகத்தக்க 3,4,5 இற்காக PMU ஆனது NWSDB இன் தொடர்புடைய பிரிவுடன் ஒருங்கிணைக்கப் பட்டு செயல்படுத்துவதற்கு நெறிப்படுத்தப்பட்டது. விநியோகத்தக்க 7 மற்றும் 8 விநியோகத்தக்கவைகளின் பெறுபேறுகள் SMSDC பொதிகளுடன் ஒருங்கிணை க்கப்பட்டு செயல்படுத்தப் பட்டன. அதன்படி, விநியோகம் செய்யக்கூடிய 7,8 வெளியீடுகள் நீர் மீட்புப் பிரிவின் திறன் மேம்பாட்டி ற்குப் பயன்படுத்தப்படுகி ன்றன. | ஆலோசனை ஒப்பந்தங்களின் பெபேறுகள் வினைத்திறாக பயன்படுத்தப்படு வதை உறுதிப்ப டுத்த வேண்டும். |
| ii. | கொள்கை மற்றும் நிறுவன விரிவாக்க ஆலோசனை ஒப்பந்தத்தின் செயற்திட்ட நோக்கெல்லையை குறைப்பதன் மூலம் ஏற்படுகின்ற சேமிப்பைப் பயன்படுத்தி NWSDB க்கு மனித வள ஆலோசகர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்காக செயற்திட்டமானது முரண் கட்டளை இல. 3 இற்கு அங்கீகாரம் வழங்கியிருந்தது. | முரண் கட்டளைச் சபை யின் ஒப்புதலுடன் ஒரு மாதம் மட்டுமே முரண் கட்டளைகளிற்கு கொடுப் பனவு செய்யப்பட்டது. | செயற்திட்ட பணிகளிற்கு மாத்திரம் செயற் திட்ட நிதிகள் முழுமையதாக பயன்படுத்தப்படு வதை உறுதிப்ப டுத்த வேண்டும். |

### 3.8.4 கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டம்

----------------------------------------------------------

இந்த செயற்திட்டம் 2010 பெப்ரவரி 03 இல் அதன் செயற்பாடுகளை ஆரம்பித்துடன் 2017 செப்டெம்பர் மாதத்திற்குள் முடிக்க பட்டியலிடப்பட்டது. பின்னர், செயற்திட்டத்தின் காலம் 2022 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| i. | டிரங்க் கழிவோடை, கிளை கழிவோடை மற்றும் மேன் ஹோால் பம்ப் ஸ்டேஷன் என்பற்றை வடிவமைத்து நிர்மாணிக்கின்ற வேலைகள் வடிவமைப்பு ஒப்பந்தத் செயற்திட்டத்தால் சரியாக தயாரிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட் டது. இதன் விளைவாக, ஒப்பந்ததாரர் ரூபா 1,750 மில்லியன் தொகைக்கு முரண் கட்டளையை சமர்ப்பித்திருந்ததுடன் செயற்திட்டமானது மீளாய்வாண்டில் வடிவமைப்பு செலவாக ரூபா 52.12 மில்லியனை செலுத்தியது. | நிர்மாணத் தாமதம் மற்றும் மேலதிக செலவுகள் ஏற்பட்டி ருந்தன. ஆனால், ஒப்பந்த தாரர் சுமார் ரூபா 5,056 மில்லியனை கோரியிருந்த துடன் கவனமாக மதிப்பீடு செய்து அத்தொகை ரூபா 1,750 மில்லியனுக்கு குறைக்கப்பட்டது. | செயற்திட்டம் அமுல்படுத்தப்பட முன்னர் அது சிறப்பாக வடிவ மைக்கப்படிருப்ப தையும் பொறுப்பு வாய்த நபர்க ளின் கவனயீனம் தொடர்பில் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | | | எடுப்பதனையும் உறுதிப்படுத்த வேண்டும். |
| ii. | இந்த செயற்திட்டம் ஏற்கனவே உள்ள செயற்திட்ட ஊழியர்களை வேலைக்கு அமர்த்தியதுடன் செயற்திட்ட நோக்கெல்லையில் அடங்கியிருக்காத பேராதனை பல்கலைக்கழகத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்கான ஆதனச் சொத்து இணைப்பு ஒப்பந்தத்தின் கீழ் ரூபா 13.02 மில்லியன் தொகையை செலவிட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டில் ஆன்லைனில் நடைபெற்ற கண்டி கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் திறப்பு விழாவிற்கு ரூபா 2.6 மில்லியன் தொகையையும் செலவிட்டிருந்தது. | பேராதனைப் பல்கலைக் கழக செயற்திட்டம் KCWMP சிகிச்சை முறையுடன் இணைக்கப்படவுள்ளதால், செயற்திட்ட அனுபவத் தைக் கருத்தில் கொண்டு, தொழில்நுட்ப மற்றும் வணிக நலன்களை சிறப்பாக நிர்வகிப்பதற்காக அதே செயற்திட்டக் குழுவால் இந்த செயற்திட்டத்தையும் நிர்வகிக்க அனுமதிக்கப்பட்டது. | செயற்திட்ட பணிகளிற்கு மாத்திரம் செயற் திட்ட நிதிகள் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். |

### 3.8.5 ஆனமடுவ நீர்வழங்கல் செயற்திட்டம்

| | | | |
|---|---|---|---|
| | இச்செயற்திட்டம் 2017 பெப்ரவரியில் அதன் செயற்பாடுகளை ஆரம்பித்ததுடன் 2020 பெப்ரவரி இல் நிறைவு செய்யப் பட்டியலிடப்பட்டது. எனினும் ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல் காரணமாக அது 2022 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டது. அதற்கமைய ரூபா 16.91 மில்லியன் தொகையை தாமதக் கட்டணமாக கடன் வழங்கும் முகவருக்கு அரசாங்கம் செலுத்தியது. | குழாய் பொருட்கள் மற்றும் HDPE இன் நிறத்தை இறுதி செய்வதில் தாமதம், குழாய் கப்பலேற்றல் தாமதம், பொருத்தும் இடத்தின் மாற் றம், செலுத்தப்பட்ட VAT, NBT இனை அறவிடுவதில் தாமதம் மற்றும் கோவிட் தொற்றுநோய் நிலைமை போன்றன காரணமாக செயற்திட்டக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை ஒப்பந்த காலப் பகுதிக்குள் பூர்த்தியாக்கும் நோக்கில் செயற் திட்ட வேலைகளை துரிதப்படுத்தி அதன் மூலம் கடன் வழங்கும் முகவரால் விதிக்கப்படுகின்ற தாமத க்கட்டணத்தை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | ஒப்பந்ததாரரின் மோசமான செயல்பாட்டின் அடிப்படையில் வழங்கப்பட்ட கால நீடிப்புக்காக ஒப்பந்தக்காரரால் செலுத்தப்பட்டிருக்க வேண்டிய ரூபா 3,010,929 க்கு சமமான யூரோ 330,183.98 தொகையான மேலதிக நிதிக் கட்டணம் (பிணைமுறிகளை காலநீடிப்பதில் ஏற்பட்ட செலவு) FIDIC வழிகாட்டுதலின் பிரிவு 19.4 க்கு மாறாக சபையால் செலுத்தப்பட்டிருந்தது. | பிணை முறிகள் (செயலாற்றல் மற்றும் முற்பண பிணைமுறி) மற்றும் காப்புறுதிப்பத்திரங்களை கால நீடிப்புச் செய்வதில் ஏற்படும் செலவை மாத்திரம் செலுத்த V.O மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டது | FIDIC வழிகாட்டலிலுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்படுவது உறுதிப் படுத்தப்பட வேண்டும். |
| iii. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரிவு 8.5.4 இன் படி ஒப்பந்ததாரர் செயற்திட்டத்திற்கு 6 இரு சக்கர | 2019 ஆம் ஆண்டில் வாகனத்தை இறக்குமதி | ஒப்பந்ததாரர் ஒப்பந்த உடன்ப |

| | | | |
|---|---|---|---|
| | டபள்கெப் வாகனங்களை வழங்க வேண்டும். இருப்பினும், ஒப்பந்ததாரர் செயற்திட்டத்தின் முடிவில் மூன்று டபள்கெப் வாகனங்களை மட்டுமே வழங்கியுள்ளார். எனவே அளவுத்திட்ட பட்டியல் தொகையில் வழங்கப்பட்ட யூரோ 3,365.70 ஐ விட ரூபா 14.99 மில்லியன் தொகையானது, வாகனங்களை வாடகைக்கு எடுத்ததில் சிக்கனமற்ற செலவினமாகியிருந்தது. | செய்வதற்கான ஒப்புதல் பெறப்பட்டதுடன் ஒப்பந்த தாரர் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் 03 வாகனங் களை இறக்குமதி செய்தார். இறக்குமதியின் கட்டுப்பாடு காரணமாக அகற்றும் செயல்முறையில் பெரும் தாமதத்துடன் 2022 திசெம்ப ரில் அவை செயற்திட்டத் திற்கு ஒப்படைக்கப்பட்டது. எனவே, செயற்திட்டப் பணிகளுக்காக டடள் கேப்களை வாங்கும் வரை வாகனங்களை வாடகைக்கு எடுக்க வேண்டியிருந்தது | டிக்கையிலுள்ள நிபந்தனைகளுட ன் இணங்குவது உறுதிப்படுத்தப்ப ட வேண்டும். |

**3.8.6 மாத்தறை கட்டம் IV – நீர் வழங்கல் செயற்திட்டம்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| i. | செயற்திட்டமானது 2030 அளவில் 321,954 தொகையினருக்கு பாதுகாப்பான குடிதண்ணீர் வழங்கும் நோக்கில் தொடங்கப்பட்டிருந்தது. அதன் நடவடிக்கைகளை 2017 ஒக்தோபர் 11 இல் தொடங்கியிருந்ததுடன் 2020 ஒக்தோபர் 10 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்த காரரின் குறைவான செயலாற்றல், படம்வரைவு அனுமதிப்பதில் தாமதம் மற்றும் காணிச் சுவீகரிப்பில் தமதம் என்பன காரணமாக 2022 செப்தெம்பர் 30 வரை மூன்று தடவைகள் கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், 2022 யூலை இறுதிவரையும் செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 92 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டது. | WTP இன் நில உரிமை யாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது டன், ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல், வரைபடங்களை அங்கீகரிப் பதில் தாமதம் மற்றும் நிலங்களை கையகப்படுத்து வதில் தாமதம் போன்ற காரணங்களால் 2022 செப்டம்பர் 30 வரை மூன்று சந்தர்ப்பங்களில் மூன்று கால நீடிப்புகள் வழங்கப் பட்டன. | • ஒப்பந்தக்காலப் பகுதிக்குள் செயற்திட்டத் தை பூர்த்தி செய்வதை போல செயற்தி ட்டத்தினுடைய வேலைகளை நிறைவேற்றுவத ற்கும் நடவடி க்கை எடுக்க வேண்டும்.<br>• செயற்திட்ட வேலைகள் தொடங்குவதற் கு முன்னர் சகல காணிக ளும் சுவீகரிக்க ப்பட வேண்டி துடன் சகல படவரைவுகளும் அனுமதிக்கப்பட் டதை உறுதிப்ப டுத்த வேண்டும். |
| ii. | சாத்தியக்கூறு ஆய்வை மேற்கொள்வதில் தவறியதால், உவர்நீர் தடுப்புச்சுவர் அமைக்கும் பணியின் போது, வெள்ளம் காரணமாக | உப்பளத் தடுப்புச்சுவர் அமைக்கும் போது எதிர்பா ராத காலநிலை காரணமாக | எதிர்கால சாத்தி யமான சுற்றாடல் |

| | | | |
|---|---|---|---|
| | அப்பகுதிகளில் உள்ள நெற்பயிர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதையும், அதனால் கட்டுமானத் திற்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்ததையும் அவதானிக்க முடிந்தது. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சபை 2022 மார்ச் 10 அன்று மாத்தறை மாவட்டச் செயலகத்திற்கு ரூபா 7,223,924.60 இழப்பீடாகச் செலுத்த வேண்டியிருந்ததுடன் ரூபா 697,967 தொகை 2022 யூலை இறுதியில் சபையால் செலுத்தப்பட வேண்டும். | அப்பகுதிகளில் உள்ள நெற் செய்கைகள் வெள்ளத்தி னால் கடுமையாகப் பாதிக்க ப்பட்டிருந்தமையினால் விவ சாயிகள் நிர்மாணிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இப்பிரச்னைக்கு தீர்வு காண, சபை அவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும். | அனர்த்தங்களை இனங்காண்பதற் காக உரிய வித த்தில் சாத்தியக் கூறு ஆய்வு மற்றும் சுற்றாடல் ஆய்வு மேற் கொள்ளப்படு வதை உறுதிப்ப டுத்த வேண்டும். |
| iii. | ஒப்பந்தத்தை செயற்படுத்தும் நோக்கில் ஒப்பந்த ஆவணத்தின் 10.F ஆம் பிரிவின் பிரகாரம், ஒப்பந்தகாரர் நிர்மாண வேலைத்தளத்திற்கு அனுமதிக்க வேண்டியதுடன் கொள்வனவு வழிகாட்டலின் 2.3.1 ஆம் பிரிவின் பிரகாரம் சபையானது பயன்பாட்டு மீள்பொருத்துகை உள்ளடங்கலாக காணிச் சுவீகரிப்பு, தீர்க்கப்பட்ட இழப்பீடுகள் மற்றும் மீள்குடியேற்ற பிரச்சனைகள் மற்றும் செயற்திட்டத்தின் தடங்கலற்ற அமுலாக்கலிற்காக எடுக்கப்பட்ட ஏனைய அவசியமான விடங்கள் போன்றன பூர்த்தியாக்கப் பட்டிருந்தனவா என திருப்திப்பட வேண்டும். மேலும், FIDIC வழிகாட்டலின் 11.7 ஆம் பிரிவின் பிரகாரம், செயலாற்றல் பிணைமுறி பெற்ற பின்னர் ஒப்பந்தகாரர் நிர்மாண வேலைத்தளத்திற்கு நுழைவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், மாலிம்பட உட்பட சில கட்டுமான வளாகங்கள் மற்றும் பல காணிகளுக்குள் ஒப்பந்ததாரருக்கு அனுமதி வழங்குவதில் நியாயமான தாமதங்கள் காணப்பட்டன. மேலும், கராகொடை, உயங்கொட பிரதேசத்தின் ஒரு பகுதியிலுளள் இடங்களில் பாதைகளை இடுவதற்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதி 2022 ஜுலை மாத இறுதி வரையிலும் பெறப்படவில்லை. | WTP நிலத்தில் சட்ட நடவடிக்கை இறுதி செய்யப் படும் வரையும் மாலிம்பட நீர்த்தேக்கத் தளம் மற்றும் பல நிலங்களை சபையால் கையகப்படுத்தும் செயல்முறையை முடிக்கும் வரையும் ஒப்பந்ததாரர் சில கட்டுமான வளாகங்களுக் குள் நுழைய அனுமதிப்பது தொடர்பாக நியாயமான தாமதங்கள் காணப்பட்டன. | சகல காணிக ளும் கையப்படு த்தப்பட்டுள்ளதை யும் செயற்திட்ட த்தை ஆரம்பித்த ற்கு முன்னர் அனைத்துப் பட வரைபுகளும் அங்கீகரிக்கப்படு ள்ளதையும் உறுதிப்படுத்த வேண்டும். |
| iv. | FIDIC வழிகாட்டுதலின் பிரிவு 14.7(டி) இன் படி, இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழை சபைக்குச் சமர்ப்பித்த நாளிலிருந்து 56 நாட்களுக்குள் ஒப்பந்ததாரருக்கு பணம் செலுத்த வேண்டும். எவ்வாறாயினும், 2022 மார்ச் 31 இல் உள்ளவாறு ஒப்பந்ததாரருக்கு IPC 14 ஐத் தீர்ப்பதில் 182 நாட்கள் கணிசமான தாமதம் காணப்பட்டது. எனவே ஒப்பந்த உடன்படிக்கையின் விதிகளின்படி ஒப்பந்தக்காரரால் கோரப்படும் தாமதக் கட்டணங்களின் சாத்தியத்தை கணக்காய்வில் நிராகரிக்க முடியாதுள்ளது. | தேசிய அபிவிருத்தி வங்கி யில் வெளிநாட்டு நாணயம் வழங்கப்பட்டதே இதற்குக் காரணம். | FIDIC வழிகாட் டுதலிலுள்ள ஏற்பாடுகள் பின்ப ற்றப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| v. | ஆரம்பத் திட்டம் மற்றும் விலை வீத பட்டோலையின் படி, 200 கி.மீ தூரத்திற்கு ஒரு விநியோக பாதை அமைக்க திட்டமிடப்பட்டது. எவ்வாறாயினும் 2020 யூலை 01 அன்று வழங்கப்பட்ட நீடிப்பின்படி இது 105 கிமீ அல்லது 50 சதவீதமாக குறைக்கப்பட்டமையால் ஆரம்பத்தில் திட்டமிட்டபடி முழுப் பகுதியையும் உள்ளடக்கியதன் மூலம் செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைய முடியுமா என்பது சந்தேகமாக உள்ளது. ஆயினும்கூட, 58.3 கிலோமீட்டர்கள் அல்லது 83 சதவீத டிரான்ஸ்மிஷன் லைன் மற்றும் 101 கிமீ அல்லது 96 சதவிகித விநியோக பாதை மட்டுமே 2022 யூலை 31 அன்று வழங்கப்பட்ட இரண்டாவது நீட்டிப்பு காலாவதியான பிறகும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எனவே, குழாய் மற்றும் பொருத்துதல்களை அமைப்பதில் தாமதம் ஏற்படுவதால், திட்டமிட்டபடி செயற்ட்ட காலத்திற்குப் பிறகு குடிநீர் வழங்குவதற்கான இறுதி நோக்கம் ஏனைய கட்டுமானங்கள் அனைத்தும் முடிந்தாலும் கூட எட்டப்படாமல் போகலாம். | ஒப்பந்தத்தின் பொறியாளலரது கடிதத்தினால் ஒப்பந்தத்தின் அசல் நோக்கெல்லை வடிவமைப்பு மாற்றங்கள் காரணமாக விநியோக நோக்கெல்லை குறைக்கப்பட்டது. | செயற்திட்ட அமுல்படுத்தில்ன் போது தொடர்ச்சியான கண்காணிப்பை உறுதிப்படுத்த வேண்டும். |
| vi. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் மீளாய்வுக்குட்பட்ட வருடத்தின் இறுதியிலும் கூட மிரிஸ்வத்த பம்ப் ஹவுஸ் வளாகத்தில் உத்தியோகபூர்வ குடியிருப்புகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | DGM (தெற்கு) அவர்களின் வேண்டுகோளின்படி OIC அலுவலக கட்டிடத்தின் இரண்டு வடிவமைப்பு மாற்றங்கள் காரணமாக இது ஏற்பட்டதுடன் ஒப்பந்த உடன்படிக்கையின் படி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வடிவமைப்பு மாற்றங்கள் தொடர்பான ஒப்பந்த சிக்கல் தீர்க்கப்படவில்லை. | ஒப்பந்த காலத்தினுள் செயற்திட்டத்தை பூரணப்படுத்துவதற்காக செயற்திட்டப் பணிகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| vii. | கேள்விகோரல் ஆவணங்களின் பிரிவு 8.3.1.3 இன் படி, ஒப்பந்ததாரர் செயற்திட்டத்திற்கு 11 வாகனங்களை வழங்க வேண்டும். இருப்பினும் 2022 மே மாத இறுதி வரை 04 வாகனங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. | 07 டபள்கெப் வாகனங்களில் 03 வாகனங்கள் தலைமை அலுவலக நிதிப் பிரிவு, திட்டமிடல் மற்றும் வடிவமைப்புப் பிரிவு மற்றும் RSC (தெற்கு) ஆகியவற்றுக்கு மாற்றப்பட்டன. | ஒப்பந்ததாரர் ஒப்பந்த உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்த வேண்டும். |
| viii. | 2019 ஆம் ஆண்டு முதல் மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டு இறுதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய மாத்தறை | கருத்துரை வழங்கப்படவில்லை. | வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்த வேண் |

| | | |
|---|---|---|
| கட்டம் (iv) இன் செயற்திட்டம் தொடர்பாக ரூபா 43,172,397 தொகையான வீதி மேற்பார்வைக் கட்டணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | டிய மேற்பார்வைக் கட்டணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.8.7 கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம்- 01, 02 மற்றும் 03**

--------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| i. | மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ், நகர சூழலையும் கொழும்பில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துவதற்கான அடிப்படை நோக்கங்களை அடைவதற்காக கொழும்பில் 2012 முதல் காணப்பட்டு வருகின்ற 49 சதவீத வருமானமற்ற நீரின் விகிதத்தை 2020 இற்குள் 18 சதவீதமாகக் குறைத்தல், கொழும்பில் தொடர்ச்சியாக 24 மணிநேரமும் தரமான நீர் விநியோகத்தை வழங்குதல், நிலைபேறான கழிவு நீர் சேவையை வழங்குதல் உட்பட நிறுவனத்தின் செயற்பாடுகளை வலுப்படுத்துதல் ஆகியவை பிரதான நடவடிக்கைகளாக காணப்படுகின்றன. அதன் கீழ், கொழும்பு நகரில் 2012 இல் 49 வீதமாக இருந்த வருவாய் அல்லாத நீரின் விகிதத்தை 2020 ஆம் ஆண்டளவில் 18 வீதமாகக் குறைப்பதற்காக, I, II மற்றும் III என மூன்று பெரிய அளவிலான செயற்திட்டங்கள் முறையே 2013, 2014 மற்றும் 2016 இல் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்ததுடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி பங்களிப்பின் கீழ் அவற்றை முறையே 2016, 2019 மற்றும் 2020 க்குள் முடிக்க பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும் உரிய தேதிகளுக்குள் அவற்றை முடிக்கத் தவறியதால், முறையே 2021 யூன் 30 மற்றும் 2022 அக்டோபர் 24 வரை கால நீட்டிப்புகள் வழங்கப்பட்டன. | மூல நோகெல்லையில் இருந்து குழாய் பதிக்கும் நீளத்தின் அதிகரிப்பு, பிற அதிகாரிகளிடமிருந்து அகழ்வாராய்ச்சி அனுமதி பெறுவதில் உள்ள சிரமங்கள், பாதகமான வானிலை, ஈஸ்டர் தாக்குதல் மற்றும் கோவிட்-19 தொற்று நோய் போன்ற தவிர்க்க முடியாத சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு ஒப்பந்தக் காலத்தை நீடிக்க வேண்டியிருந்தது. | • வருமானமற்ற நீரைாக் குறைப்பதற்கான குறிக்கோளை அடையும் பொருட்டு செயற்திட்டத்தை ஒப்பந்த காலப் பகுதிக்குள் பூர்த்தியாக்கும் நோக்கில் செயற்திட்ட வேலைகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.<br>• காலநீடிப்புச் செய்வதற்குப் பதிலாக ஒப்பந்த உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் தாமதக் கட்டணத்தை குறைந்த செயலாற்றல் கொண்ட ஒப்பந்த காரர்களிற்கு சாட்டுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | இந்தத் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான மொத்த முதலீட்டின் பெறுமதி ரூபா 26,422 மில்லியன் இற்குச் சமமான USD 201.95 மில்லியன் ஆகும். 2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறு 08 ஆண்டுகள் கழிந்த பின்னரும் USD 161 | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டம் 1 இன் ஒட்டுமொத்த செயல் முன்னேற்றம் 96.52 சதவீதமாகவும், செயற்திட்டம் 02 | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் அல்லது மொத்த முதலீட்டில் 80 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வருமானமற்ற நீரின் சதவீதத்தை 18 சதவீதமாக குறைக்கின்ற எந்த ஒரு செயற்திட்டமும் முழுமையாக முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட் டிருக்கவில்லை. | இன் செயல் முன்னேற்றம் 72.90 சதவீதமாகவும் காணப் பட்டது. | |
| iii. | மேலும், கொழும்பு நகரில் உள்ள 77 DMA அலகுகளை இனங்கண்டு, முறைமைகளை புனரமைத்து, மேற்கூறியவாறு வருமானமற்ற நீரின் வீதத்தை 18 சதவீதமாகக் குறைத்ததன் பின்னர், சபையின் செயற்பாட்டு மற்றும் பராமரிப்புப் பிரிவிடம் ஒப்படைப்பது இதன் பிரதான இலக்காக இருந்தது. | மேலும் 14 அலகுகள் O & M பிரிவிடம் கைளிப்பதற்கு தயாராக உள்ளன. | திட்டமிடப்பட்ட வாறு மாவட்ட மானி வாசிப்பு பிரதேசங்களை பூரணப்படுத்துவத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| iv. | மேலும், செயற்திட்டம் இல. 1 இன் கடன் நிதிப்பயன்பாடு 2022 சனவரி 31 இல் முடிவடைந்திருந்ததுடன் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழுள்ள எஞ்சிய செயற் திட்டங்களுக்கான கடன் காலத்தை 2022 ஒக்தோபர் 24 இற்குள் முடிக்க பட்டியலிடப்ப ட்டிருந்து. அதன்படி, இந்த திட்டத்தை முடிக்க 10 மாதங்கள் காணப்படுகையில் சபை 2021 திசெம்பர் 31 இல் சமர்ப்பித்திருந்த அறிக்கை களின் படி கொழும்பு நகரில் வருமானமற்ற நீரின் சதவீதம் 34.75 சதவீதமாக உயவடைந்துள்ளது. கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடு களின் படி கொழும்பில் சபையின் வருமானமற்ற நீரின் சதவீதத்தை 1 சதவீதத்தால் குறைக்க முடியுமாயின் அதன் வருமானத்தை ரூபா 40.03 மில்லியன் ஆல் அதிகரிக்க முடியும். எவ்வாறாயினும், அவ்வாறு செய்யத் தவறியதால், ரூபா 37.43 மில்லியன் செயற்பாட்டுச் செலவுகளைச் செய்ய வேண்டியிருந்தது. இதன்படி வருவாய் அல்லாத நீரின் வீதத்தை எதிர்பார்த்த அளவான 18 வீதத்திற்கு குறைக்க முகாமைத்துவத்திற்கு முடியாது போயிருந்ததால் ரூபா 670.60 மில்லியன் வருமான இழப்பு ஏற்பட்டிருந்தது. | 2021 நவம்பர் 16 முதல் திசெம்பர் 16 வரையான காலத்திற்குரிய வருமான மற்ற நீரின் (NRW) சதவீதம் 30.6 ஆகும். | வருமானமற்ற நீரைக் குறைக் கும் செயற்திட்ட நோக்கத்ததை அடைவதற்காக ஒப்பந்த காலப் பகுதிக்குள் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்து செயற்திட்டத்தை நிறைவேற்றுவத ற்கு நடவடிக்கை எடுக்க வேண் டும். |
| v. | இந்த செயற்திட்ட காலத்தின் போது இச்செயற்திட்டத்தின் பலன்களை முழுமையாக அடைய முடியாமல் போனாலும், அரசுக்கு செலுத்த வேண்டியேற்பட்டுள்ள வட்டி செலவு மற்றும் கடப்பாட்டுக் கட்டணத்தின் பெறுமதி முறையே ரூபா 1,124.39 மில்லியன் மற்றும் ரூபா 203.97 மில்லியன் ஆகும். அத்துடன், எந்தவொரு செயற்திட்டமும் முழுமையாக முடிக்கப்படாவிட்டா | மேலே (i) இல் குறிப்பி டப்பட்டுள்ள காரணங்களால் செயன்முன்னேற்ற சதவீதம் பிரதானமாக பாதிக்கப்பட் டது. இருப்பினும், கொழும்பு மாவட்டத்தில் NRW பெறு மதி தற்போது 22 சதவீதத்தை அடைந்து | கடப்பாட்டுக் கட்டணங்களை தவிர்ப்பதற்காக இலக்கிடப்பட்ட திகதிக்குள் செயற்திட்டத்தை பூரணப்படுத்துவத ற்கு |

| | | | |
|---|---|---|---|
| | லும், மேற்குறிப்பிட்ட 1, 2 மற்றும் 3 செயற்திட்டங்களின் சார்பில் கடன் தவணைகளை திருப்பிச் செலுத்த அரசாங்கம் தொடங்கியுள்ளது. | ள்ளது. | செயற்திட்டப் பணிகளை துரித ப்படுத்த நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |

### 3.8.8 அம்பத்தலே எரிசக்தி சேமிப்புச் செயற்திட்டம்

---

| | | | |
|---|---|---|---|
| i. | குறைந்த வினைத்திறன் கொண்ட பழைய பம்புகளை மாற்றி புதிய பம்புகளை வைப்பதன் மூலம் அம்பத்தலே நீர் சுத்திகரிப்பு நிலையங்களிற்கான ரூபா 67 மில்லியனுக்கும் அதிகமான மாதாந்த எரிசக்தி சராசரி கிரயத்தை குறைப்பதும், 70 முதல் 100 ஆண்டுகள் பழமையான சிறிய பரிமாற்றக் குழாயை மாற்றுவதன் மூலம அதிக இயளலவுடைய குழாய்களை அமைப்பதன் மூலம் உராய்வுச் செலவைக் குறைப்பதும் இந்த செயற்திட்டத்தின் முதன்மை குறிக்கோள்களாகும். இந்த செயற்திட்டத்தின் மொத்த முதலீட்டுச் செலவு ரூபா 9,100 மில்லியன் இற்குச் சமமான அமெரிக்க டாலர்கள் 70 மில்லியன் ஆனதுடன் செயற்திட்டப் பணிகள் 2014 செப்டம்பர் இல் தொடங்கப்பட்டு 4 ½ ஆண்டுகளில் அதாவது 2019 யூன் இல் முடிக்க ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டது. இருப்பினும், அந்த தேதிக்குள் செயற்திட்டத்தை முடிக்கத் தவறியதால், 2023 வரையிலான ஆரம்ப நிறைவுக் காலத்திற்கு சமமான காலப்பகுதிக்கு காலம் நீடிக்கப்பட்டது. | அம்பத்தலே நீர்ச் சுத்திக ரிப்பு நிலையம் அமைந்து ள்ள வளவிற்கு நீரேந்துப் பிரதேசத்தை இடமாற்றி யமை, நாட்டில் அந்நியச் செலாவணி பற்றாக்குறை யால் ஒப்பந்தகாரருக்கு நாணயக் கடிதத்தை திறக்க முடியாமை, கிந்தா கால்வாய் பாலத்தை நிர்மாணிப்பதற்கு பொதுமக் களின் எதிர்ப்பு, நிதி வழங்குதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமை, ஆர்டீஏ கடப்பாடுகள், கொவிட் 19 இன் தாக்கம் போன்றன காரணமாக செயற்திட்டம் தாமதமடை ந்தது. | செயற்திட்ட குறிக்கோளை அடையும் பொரு ட்டு செயற்திட் டத்தை ஒப்பந்த காலப் பகுதிக் குள் பூர்த்தியா க்கும் நோக்கில் செயற்திட்ட வேலைகளை துரிதப்படுத்துவத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண் டும். |
| ii. | ஒவ்வொரு ஆண்டிற்குமான செயல் முன்னேற்றத்தை கருத்தில் கொள்கையில் 2015 இல் 1.5 சதவீதம், 2016 இல் 1.82 சதவீதம், 2017 இல் 4.38 சதவீதம், 2018 இல் 3.14 சதவீதம், 2019 இல் 12.24 சதவீதம், 2020 இல் 15.38 சதவீதம், 2021 இல் 18.57 சதவீதம் போன்ற குறைந்த செயல் முன்னேற்றமே அடையப்பட்டுள்ளது. அதன்படி, 07 வருடங்கள் கழிந்த பின்னரும் அதாவது 2021 டிசம்பர் 31 இல் அடையப்பட்டிருந்த ஒட்டுமொத்த செயல் முன்னேற்றம் 56.83 சதவீதமாக மட்டுமே இருந்தது. 2021 திசெம்பர் 31 இற்குள் பெரிய ஒப்பந்தங்கள் எதுவும் முடிக்கப்படாததால், மீதமுள்ள 43.17 சதவீத செயல் முன்னேற்றத்தை 2023 யூன் இற்குள் அதாவது இன்னும் 1½ ஆண்டுகளில் அடைய முடியுமா என்பது சந்தேகமாக உள்ளது. அதன்படி, 2021 திசெம்பர் 31 இல் பூரணப்படுத்துவதற்கு ஆரம்பத்தில் பட்டியலிடப்பட்டிருந்த காலத்திற்கும் அப்பால் 7 ஆண்டுகளாக செயற்திட்ட செயல்பாடுகள் | பல்வேறு காரணங்களால் செயற்திட்டம் தாமதமடைந் தது. அதன்படி, செயற்தி ட்டக் காலம் நீடிக்கப்பட்ட துடன் அதன் விளைவாக ஆரம்ப மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதலாக முகாமைத்துவ மற்றும் செயற்பாட்டுக் கிரயங்கள் ஏற்பட்டிருந்தன. | மேலதிக செயற் திட்ட முகாமைத் துவ மற்றும் நிவாக செலவுக ளைத் தவிர்ப்பத ற்காக செயற் திட்டத்தை ஒப்ப ந்த காலப் பகுதி க்குள் பூர்த்தியா க்கும் நோக்கில் செயற்திட்ட வேலைகளை துரிதப்படுத்துவத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண் டும். |

| | | | |
|---|---|---|---|
| | இடம்பெற்றுவருவதால் செயற்திட்ட முகாமைத்து வம் மற்றும் செயல்பாட்டு செலவுகளிற்காக உத்தேசிக்கப்பட்டிருந்த அமெரிக்க டொலர் 4.19 மில்லியனை விட அமெரிக்க டொலர் 5.04 மில்லியன் அதிகமாக செலவு ஏற்பட்டுள்ளது. | | |
| iii. | இதனைத் தவிர, இந்தத் செயற்திட்டத்தின் மோசமான செயலாற்றலின் விளைவாக, கடனை குறைவாகப் பயன்படுத்தியமை காரணமாக ரூபா அமெரிக்க டொலர் 2.19 மில்லியனிற்குச் சமமான.ரூபா 358.71 மில்லியன் தொகை அதாவது 15 சதவீதம் கடப்பாட்டுக் கட்டணமாக மாத்திரம் 2021 டிசம்பர் 31 நிலவரப்படி அரசாங்கம் செலுத்தியிருந்தது. | மேலே (i) இல் குறிப்பிடப் பட்ட காரணங்களால் திட்டமிடப்பட்டவாறு ஒப்பந்த காரருக்கு நிதிகளை வழங் குவதற்கு செயற்திட்டத்திற்கு முடியாது போயிருந்த போதிலும், கடன் உடன்படிக் கையிலுள்ள நிபந்தனைக ளின் படி கடப்பாட்டுக் கட்டணத்தை அரசாங்கம் செலுத்த வேண்டும். இருப்பினும், ஒப்பந்தத்தில் காணப்படுகின்ற ஏற்பாடுகளி ற்கு உட்பட்டு மேலதிக வேலைகளை தவிர்ப்பதற் காக செயற்திட்டம் உச்ச பட்ச முயற்சி எடுத்தது. | கடப்பாட்டுக் கட்டணங்களை தவிர்ப்பதற்காக இலக்கிடப்பட்ட திகதிக்குள் செயற்திட்டத்தை பூரணப்படுத்துவத ற்கு செயற்திட்டப் பணிகளை துரித ப்படுத்த நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |
| iv. | செயற்திட்ட ஆலோசனை மற்றும் முகாமைத்துவக் கிரயம் மதிப்பிடப்பட்ட பெறுமதியை விட அதிகமாக இருந்தமையால், செயற்திட்ட ஆலோசனை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவக் கிரயமானது செயற்திட்டத்தின் செயலாற்றலில் சாதகமான விளைவை ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டதா என்பது கணக்காய்விற்கு சிக்கலாக இருந்தது. | ஆலோசனைச் சேவை ஒப்பந்தமானது முக்கிய நிபுணர்களின் நகர்த்தப்ப டாத சேமிப்புக்களிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. | ஆலோசனைச் சேவை ஒப்பந்த மானது செயற்தி ட்டத்தின் செயலாற்றலில் சாதகமான விளைவை ஏற்ப டுத்தும் வகை யில் மேற்கொள் ளப்படுவதனை உறுதிப்படுத்த வேண்டும். |

### 3.8.9 அநுராதபுரம் வடக்கு நீர்வழங்கல் செயற்திட்டம் - கட்டம் 01

-----------------------------------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் கட்டம் - 01 ஆனது மதவாச்சிய மற்றும் ரம்பேவ பிரிதேச செயலகப் பகுதிகளை உள்ளடக்கியதாகும். அனுராதபுர வடக்கு பகுதியில் நீர் வழங்கல் முறைமையை நிர்மாணிப்பதன் மூலம் பாதுகாப்பான குடிநீரை வழங்கி, நீர் வழங்கல் பாதுகாப்பை அதிகரிப்பதன் மூலம் சுகாதார நிலை மற்றும் | LOT B ஆனது 2022 அக்டோபர் 31 அன்று நிறைவடையும். கையளித்தல் தாமதத்திற்கு மேலதிகமாக, கொடுப்பனவுச் சிக்கல்கள், கோவிட் 19, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் என்பன | • செயற்திட்டக் குறிக்கோள்க ளை அடைவத ற்காக இலக்கிட ப்பட்ட திகதிக் குள் கொள்வ னவு நடவடிக் |

சுத்திகரிப்பு நிலையை மேம்படுத்துவதற்கு பங்களித்து அதனூடாக அப்பகுதியில் பாதுகாப்பற்ற அசுத்தமான நிலத்தடி நீரை சார்ந்து ள்ளோர்கள் பல் மற்றும் எலும்பு ஃப்ளோரோசிஸ் மற்றும் நாள்பட்ட சிறுநீரக நோய்களை பரவுவதற்கான அபாயகரமான காரணிகளில் ஒன்றாக நீர் இருப்பதனால் அதனைத் தடுப்பதும் இந்த செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். எனவே பாதுகாப்பான குடிநீரை வழங்க இந்த நீர் வழங்கல் திட்டங்களை செயல்படுத்த அரசாங்கம் முன்னுரிமை அளித்துள்ளது. அதன்படி, இந்த பகுதியில் அமுல்படுத்தப்பட்டுள்ள நீர் வழங்கல் செயற்திட்டங்களிலிருந்து மக்கள் தாமதமின்றி நிவாரணம் பெற திட்டமிடப்பட்ட காலத்திற்குள் அவை முடிக்கப்பட வேண்டும். இருப்பினும், இச்செயற்திட்டம் 2013 பெப்ரவரி இல் அதன் நடவடிக்கைகளைத் தொடங்கியிருந்ததுடன், இதனை 2018 பெப்ரவரி இறுதிக்குள் அல்லது 5 ஆண்டுகளுக்குள் முடிக்க பட்டியலிடப்பட்டது. பின்னர் ஒப்பந்த காரரின் மோசமான செயலாற்றல் காரணமாக இச்செயற்திட்டத்தின் காலம் 9 ஆண்டுகள் வரை அதாவது 2022 யூலை 05 வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஆயினும்கூட, 2022 யூன் 30 ஆம் தேதி வரை பௌதீக செயல் முன்னேற்றம் 97.46 சதவீதமாக மட்டுமே காணப்பட்டது. லொட்-ஆ (LOT B) இன் பிரதான குழாய் அமைக்கும் ஒப்பந்தத்தின் மோசமான செயல் முன்னேற்றம் காரணமாக இது 2022 யூலை 31 வரை கூட முடிக்கப்படவில்லை. அதன் விளைவாக, ஒப்புக் கொள்ளப்பட்ட கடன் தொகையினை பயன்படுத்தியிருக்காமையால் ரூபா 45.68 மில்லியன் தொகை கடப்பாட்டுக் கட்டணமாக செலுத்தப்பட்டதுடன் செயற்திட்டத்தை பூரணப்படுத்துவதற்கு முன்னர் அதாவது ஒப்புக் கொள்ளப்பட்ட கடன் தொகையை முழுமையாக பயன்படுத்தாமலும் அரசாங்க மற்றும் பொதுமக்க ளின் குறிக்கோள்கள் அடையப்படாமலும் ரூபா 994.38 மில்லியன் தொகை 2021 திசெம்பர் 31 வரை மூலதன திருப்பிச் செலுத்துதலாக கொடுப்பனவு செய்யப்பட்டது.

### 3.8.10 அனைவருக்கும் நீர் செயற்திட்டம்

-----------------------------------------------------------------

சனாதிபதி அவர்களின் சௌபாக்கிய தூரநோக்கு தேசியக் கொள்கையின்படி, அனைவருக்கும் சுத்தமான நீர் கிடைக்கக்கூடிய விதத்தில் சுத்தமான நீர்கிடைக்கும் எல்லைப் பிரதேசத்தை அதிகரிப்பதற்காக இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன்படி,

செயற் திட்டத்தை முடிப்பதில் தாமதத்தை ஏற்படுத்தி இருந்தன. மேலும், திருப்பிச் செலுத்தும் விதிமுறைகளை மாற்றாமல் கடன் வழங்குவதற்கான காலம் 2022 யூலை வரை JICA இனால் நீடிக்கப்பட்டது.

கைகளை பூர ணப்படுத்துவத ன் மூலம் செய ற்திட்டப் பணி களை துரிதப்ப டுத்த நடவடி க்கை எடுத்தல் வேண்டும்.

- செயற்திட்ட ஒப்பந்த காலத் தின் போது நிதிகள் பூரண மாக பயன்படுத் தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

சபை ஒரு ”ஒட்டுமொத்த செயற்திட்ட பணிப்பாளர்” மற்றும் ஒரு தனி பணியாளர் குழுவுடன் ஒரு தனிப்பிரிவை நிறுவியது. அவர்களில் சிலர் ஒப்பந்த அடிப்படையில் புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதுடன், மேலும் சிலர் சபையின் தற்போதைய ஊழியர்களிலிருந்து விடுவிக்கப்பட்டனர். 2022 யூலை இறுதியில் நடத்தப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்படி, பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| i | சபையின் ஓய்வுபெற்ற மேலதிக பொது முகாமையாளர் இந்த செயற்திட்டத்தின் திட்ட பணிப்பாளராக அவர் ஓய்வுபெற்ற திகதியிலிருந்து ஒரு வருட ஒப்பந்தக் காலத்திற்கு 2021 செப்டம்பர் 27 முதல் நியமிக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக 02/2020 ஆம் இலக்க 2020 ஒக்தோபர் 26 ஆந் தேதியிட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் அடிப்படையில் அத்திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெறப்படாது 2021 செப்டம்பர் 13 அன்று எடுக்கப்பட்ட சபை தீர்மானத்தின் அடிப்படையில் மட்டுமே இவர் நியமிக்கப்பட்டிருந்தார். மேலும் அவரது இறுதிமாத சம்பளத்திற்கு சமமான ஊதியம் மற்றும் இறுதியாக அவர் வகித்த பதவியின் ஏனைய கொடுப்பனவுகளை செலுத்த மேற்கண்ட சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட் டிருந்ததுடன் இதற்காக 2019 மார்ச் 15 ஆந் தேதியிட்ட 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களச் சுற்றிக்கையின் 3.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி தேவையான அங்கீகாரங்களும் சம்பளம் மற்றும் ஆளனி ஆணைக்குழுவின் அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை. அதன்படி, ரூபா 4,395,955 க்கு சமமான தொகை 2022 யூன் மாத இறுதி வரை மேற்படி அங்கீகாரமற்ற பதவிக்கு சம்பளம் மற்றும் ஊதியமாக வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், இந்த செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த திட்ட பணிப்பாளர் சபையின் ஏனைய செயற்திட்டங்களிற்குரிய கடமைகள் மற்றும் பொறுப்புக்களைப் போன்ற கடமைகளைச் செய்திருக்கவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன், ஒரு ஒருங்கிணைப்பாளராக மட்டுமே செயல்பட்டிருந்தார். எனவே சபையால் செய்யப்பட்ட செலவினங்களுக்கு மேற்குறித்த அதிகாரியின் பெறுமதி சேர்த்தல் தொடர்பில் கணக்காய்வில் சர்ச்சைக்குரிய விடயமாக காணப்பட்டது. | இந்த திட்டத்திற்காக, கட்டுமான மேற்பார்வை செலவைக் குறைக்கும் நோக்குடன் சபை விசேட செயற்திட்ட கண்காணிப்பு பிரிவை நிறுவவில்லை, ஆனால் செயற்திட்டத்தை உருவாக்குவதில் ஈடுபட்டிருந்த ஓய்வுபெற்ற மேலதிக பொது முகாமையாளரை ஆடசேர்ப்புச் செய்தது. முழுமையான வடிவமைப்பு மற்றும் கேள்வி ஆவணங்களைப் பெறுதல், கொள்வனவு செயல்முறையை நிறைவு செய்தல், கோரப்பட்ட நிதியைப் திறைசேரியில் இருந்து பெறுதல், செயற்திட்டத்தைக் கண்காணித்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல் ஆகியவற்றின் போது தொடர்புடைய அனைத்து ஆர்வமுள்ள தரப்பினர்களுடனும் தேவையான ஒருங்கிணைப்பை செய்தல் ஆகிய பணிகள் அவருக்கு ஒரு பொறுப்பளிக்கப்பட்டிருந்தன. செயற்திட்டத்தின் பெறுமதி சுமார் ரூபா 3,060 மில்லியன் ஆக இருந்தமையால், மேலதிக முகாமையாளர் பதிவி வகித்த அதிக அனுபவம் உள்ள ஒருவரை ஆட்சேர்ப்பது பொருத்தமாக இருந்தமையால் மேலுள்ள ஒட்டுமொத்த செயற்திட்ட பணிப்பாளர் பதவிக்கு அதே சம்பளத்தில் அவரை | ஆட்சேர்த்தலுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன்கூட்டிய அனுமதி பெறப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நியமிக்க பணிப்பாளர் சபை தீர்மானித்தது. | |
| ii. | கணக்காய்வின் மூலம் பெறப்பட்ட தகவல்களின்படி, சபையின் தற்போதுள்ள நிரந்தர பணியாளர்களில் ஆறு அதிகாரிகள் இந்த செயற்திட்டத்தில் இணைக்கப்பட்டிருந்ததுடன் மேலும் ஏழு அதிகாரிகள் பதிற்கடமை அடிப்படையில் செயல்படுகிறார்கள் என்பது அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பிலுள்ள வெற்றிடங்களிற்கு ஆட்சேர்ப்பு/ நிரப்புதல் தொடர்பில் திறைசேரியின் செயலாளர் வெளியிட்ட 02/2020 ஆம் இலக்க 2020 அக்டோபர் 26 தேதியிட்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரிவு 02 (II) க்கு மாறாக, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாது 176 பேர் இந்த செயற்திட்டத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு, ரூபா 211.88 மில்லியன் தொகை சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக 2022 யூலை 31 வரை சபை செலுத்தியிருந்தது. | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- |
| iii. | துறைமுகத்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் எச்டிபிஇ, டிஐ மற்றும் பி.வி.சி குழாய்களை விடுவிக்க போதிய நிதி காணப்படுவதை உறுதிப்படுத்த அல்லது வழங்குனர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் ஏற்றுமதிகளை தாமதப்படுத்துவதற்கு சபையின் உயர்மட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்திருக்காமையால், திறைசேரியின் ஒப்புதலைப் பெறாமல் 2022 ஆம் ஆண்டின் யூன் இறுதியில் ரூபா 33.3 மில்லியன் தொகையை தாமதக் கட்டணமாக சபை செலுத்தியிருந்தது. அத்துடன், 2022 ஆம் ஆண்டின் யூலை இறுதிக்குள் கூட ஏற்கனவே துறைமுகத்திற்கு வந்தடைந்திருந்த 207 கொள்கலன்களை அகற்றுவதற்கு உயர் முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்கு பெறப்பட்ட தகவல்களின்படி, இந்த கொள்கலன்களை அகற்றிக் கொள்வதற்காக (ஏறத்தாழ) ரூபா 813.12 மில்லியன் தொகையை 2022 ஆம் ஆண்டின் யூலை இறுதியில் தாமதக் கட்டணமாக செலுத்த வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 2022 யூலை இறுதிக்குள் கூட எந்த டிஐ குழாய்களும் பயன்படுத்தப்பட்டிருக் காததுடன் பத்து (10) பிராந்திய ஆதரவு மையங்களின் கீழ் உள்ள களஞ்சியகங்களிலி ருந்து வழங்கப்பட்ட எச்டிபிஇ | அனைவருக்கும் தண்ணீர் செயற்திட்டத்திற்கான காசு உட்பாய்ச்சலை பொது திறைசேரி உறுதிப்படுத்தியது. ஆனால் நாட்டின் தற்போதைய நிதி மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, 2022 பெப்ரவரி முதல் நிதியை வழங்க முடிந்திருக்கவில்லை.<br>எனவே, நாட்டில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நாணய ங்கள் கிடைக்காததால், துறைமுகத்திலிருந்து குழாயை அகற்ற சபைக்கு முடிந்திருக்கவில்லை.<br>எனவே, சபை கடனை செலுத்த வேண்டியிருந்தது. குழாய் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதாலும், திறைசேரி ஒப்புக்கொண்டபடி நிதியை வழங்காததாலும், சபையால் முற்பணம் செலுத்த முடியாதிருந்தது | கொள்வனவு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் நிதிகள் காணப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குழாய்களிலிருந்து, 40 சதவீதத்திற்கும் அதிகமானவை 2022 ஆம் ஆண்டின் யூலை இறுதிக்குள் கூட பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதேபோல் ஆறு பிராந்திய ஆதரவு மையங்களுக்கு வழங்கப்பட்டிருந்த 173087 மீட்டர் எச்டிபிஇ குழாய்களின் 12 வகை டிஐஏ மீட்டர்கள் 2022 ஆம் ஆண்டின் யூலை இறுதிக்குள் கூட பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | டன் குழாய் பதிக்கும் ஒப்பந்ததாரர்களுக்கு பட்டியல்களிற்கு பணம் செலுத்த முடியாது போன மையால் திட்டமிட்டபடி குழாய் பதிக்கும் ஒப்பந்த ங்களை சபையால் செயல் படுத்த முடிந்திருக்கவி ல்லை. | |
| iv. | மேலும், இந்த நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த குளாய் பதித்தல் வேலை ஒப்பந்தங்கள் 2022 யூன் இறுதிவைரயிலும் ஆரம்பிக்கப்படாதிருந்தமை தெரிவுக் கணக்கா ய்வில் அவதானிக்கப்பட்டதுடன், ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பந்த வேலைகளின் செயல் முன்னேற்றம் திருப்திகரமாக காணப்படவுமில்லை. | கருத்துரை வழங்கப்பட்டி ருக்கவில்லை. | • செயற்திட்ட அமுல்படுத்தலி ன் போது தொட ர்ச்சியான கண்காணிப்பை உறுதிப்படுத்த வேண்டும்.<br>• செயற்திட்டக் குறிக்கோள்க ளை அடைவத ற்காக இலக்கிட ப்பட்ட திகதிக் குள் செயற்தி ட்ட நடவடிக் கைகளை பூர ணப்படுத்துவதற் கு நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |

## 3.9 ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 மற்றும் 2021 நவம்பர் 17 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தின் பொது முயற்சிகளிற்கான வழிகாட்டல்கள் கையேட்டின் 3.5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளிற்கு முரணாக இருப்பதியொரு (21) ஊழியர்கள் 2021 திசெம்பர் 31 அளவில் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது அவர்கள் சார்பில் ரூபா 28.73 மில்லியன் தொகை ஏற்பட்டிருந்தது. இதன்படி, 2015 திசெம்பரிலிருந்த 2021 திசெம்பர் 31 வரை சபையால் விடுவிக்கப்பட்ட ஊழியர்களிற்காக நீர் | உத்தியோகத்தர்களை விடுவிப்பதற்கு அமை ச்சு செயலளரால் வேண்டுகை செய்யப் பட்டதுதற்கு இணங்க ஊழியர்கள் விடுவிக்க ப்பட்டனர். அவர்க ளிற்கு செலுத்தப்பட்ட சம்பளங்களை மீளளிப்பதற்கு அமைச்சிற்கு நிதி ஏற்பாடு இல்லாததால் அதனை மீளளிக்க | வேறு நிறுவனங்க ளிற்கு வளங்களை விடுவிப்பது தொடர் பில் பொது முயற்சி கள் திணைக்கள சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்ட ல்களுடன் இணங்கி நடப்பதை உறுதிப்ப டுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| வழங்கல் அமைச்சால் ரூபா 216.12 மில்லியன் தொகை மீளளிக்க வேண்டியுள்ளது. மேலும், சொல்லப்பட்ட காலப்பகுதியின் போது உரிய அமைச்சிற்கு ஆறு (06) மோட்டார் வாகனங்களும் விடுவிக்கப்பட்டிருந்த துடன் மீளாய்வாண்டில் அந்த வாகனங்களின் வருமான அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதிக்காக ரூபா 245,848 செலவிடப்பட்டிருந்தது. | முடியாதிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |

## 3.10 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| i. | 2021 நவம்பர் 17 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தின் செயற்பாட்டுக் கையேட்டின் 3.4 (ii) இன் படி, ஆகக்குறைந்தது மூன்று ஆண்டுகால முன் அனுபவம் கொண்ட பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்காக வெற்றிகரமான திட்டமொன்றை சபை தயாரித்திருக்கவில்லை. | மனிதவள முகாமைத்துவப் பிரிவினால் உரிய திட்டம் தயாரிக்கப்பட்டு, பணிப்பா ளர் சபையின் ஒப்புதலுக் காகச் சமர்ப்பிக்கப்பட இருப்பதுடன் காலத்தின் முடிவில் அதன் செயல் முன்னேற்றம் அறிவிக்கப்படும். | பிரதான நிறைவே ற்று அதிகாரிகளை நியமிக்க உதவும் வெற்றிகரமான திட்டத்தை தயாரிப்ப துடன் தொடர்பு டைய பொது முயற்சிகள் வழிகா ட்டுதல்களுடன் இணங்குவதை உறுதி செய்யவும். |
| ii. | பிரதி பொது முகாமையாளர் (தொழில்நுட்பம் சாராத), உதிவி பொது முகாமையாளர் போன்ற தந்திரோபார மட்ட பதவிகள், முகாமையா ளர்கள், பொறியியலார் (இயந்திரவியல்), பொறியியலாளர் (மின்னியல்) பொறியியலாளர் (சிவில்), மத்திய தொழில்நுட்ப (ML-T) எழுதுனர் மற்றும் இணைந்த தர வகுதியினர் போன்ற நடுத்தர மட்ட பதவிகள் உள்ளடங்கலாக 1739 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | உதவி பொது முகாமை யாளர் (கணக்காய்வு) பதிவிக்கு ஆட்சேர்த்தல் மற்றும் பதவி உயர்வு வழங்குதல் நடைமுறை தயாரிக்கப்பட்டு ஒப்புதலு க்காக சமர்ப்பிக்கப்பட்டு ள்ளது. முகாமையாளர் (மனித வளம்) பதவி வெற்றிடம் உடனடியாக நிரப்பப்படும். தீர்ப்புக்குப் பிறகு தலைமைக் கணக் காளர் பதவி நிரப்பப்படும். முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 02/2020 ஆல் பதவி வெற்றிடங்க ளிற்கான ஆட்சேர்ப்புகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதா ல் PL வகை பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நீண்ட காலமாக நிரப்ப முடியவில்லை. | சபைக்கு போதிய உத்தியோகத்தர்க ளை சேர்க்க வேண்டும் அல்லது பதவியணித் தேவை ப்பாட்டை உரிய விதத்தில் மீளாய்வு செய்து அங்கீகரித்த பதவியணியை மாற்றியமைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| iii. | 18 அனுமதிக்கப்பட்ட பதவிகளிற்காக எவ்வித ஆட்சேர்ப்புகளும் செய்யப்பட்டிருக்கவில்லை ஆனால் ஆரம்பத் தரத்திலுள்ள மூன்று அனுமதிக்கப்படாத பதவிகளிற்காக நிரந்தர அடிப்படையில் 23 ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந் தனர். மேலும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாதும் அனுமதித்த ஊழியர் கோப்பனை மிகைத்தும் ஆண்டின் போது 14 சிவில் பொறியியலாளர்கள், 17 அளவுத்திட்ட ஆய்வா ளர்கள், 45 பொறியியல் உதவியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந் தனர். | 2025 இல் அனைவருக்கும் தண்ணீர் எனும் செயற் திட்டத்தை செயல்படுத்து வதற்காக, சபையின் பொறியியல் மற்றும் தொழில் துறையில் பணிபுரியும் அதிகாரிகள் போதுமானதாக இல்லாத தால், பொறியியல் மற்றும் தொழில்துறையில் பல அதிகாரிகள் ஒப்பந்தம் அடிப்படையில் ஆட்சேர்க் கப்பட்டனர். இதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி இதுவரை கிடைக்கவில்லை. | அனுமதிக்கப்பட்ட வெற்றிடங்களிற்காக ஊழியர்களை சேர்ப் பதற்கு நடவடிககை எடுக்க வேண்டு மென்பதுடன், அனுமதித்த ஊழியர் கோப்பனை மிகை த்து ஆட்ரேப்புச் செய்வதற்கு அங்கீ காரம் பெறப்பட வேண்டும். |
| iv. | 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதி 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை மற்றும் 2021 நவம்பர் 17 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தின் செயற்பாட்டுக் கையேட்டின் பிரிவு 3.2(i) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டவாறு ஆட்சேர்ப்பு திட்டம் மற்றும் பதவியுயர்வு என்பவற்றிற்கான அனுமதியை பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது தொழிற்சங்க ங்கள் முன்வைத்த விடயங்கள் உள்ளடக்கப்ப ட்டு இறுதிப் படிவம் தயாரிக்கப்பட்டு பணிப்பா ளர் சபையின் அனுமதி 2022.06.06 அன்று அமைச் சினால் பெறப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக் களத்திடமிருந்து SOR இற்கான அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| v. | சபையின் தற்போதைய ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டத்திற்கு மாறாக, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கணக்கியலில் 2 வருட அனுபவத்துடன் கூடிய வணிகவியலில் இளங்கலைப் பட்டப்படிப்புக்கான வெளிப்புறத் தகுதியானது கணக்காளர்-CL III (சபைத் தரம் 07) பதவிக்கான தகுதியாக சேர்க்கப்பட்டு 2015 டிசம்பர் 07 அன்று மேலதிக பொது முகாமையாளர் (மனித வளங்கள்) பதவிக்கு ஆட்சேர்த்தல் அறிவிப்பை வெளியிட்டு 2018 ஆம் ஆண்டில் உள்வாரியாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது. எனவே ஏற்கனவே தேவையான தகுதிகளை பூர்த்தி செய்த மூத்த அதிகாரிகள் மேலே உள்ள பதவித்தேர்வுக்கான வாய்ப்பை இழந்துள்ளனர். | ஊழியர்கள் மனச்சோர்வ டையலாம் என்பதாலும் ஊழியர்களின் உந்துதல் இல்லாது போகலாம் என்பதாலும் 2015 இல் வெளிவாரி அழைப்பில் கோரப்பட்ட தகைமை களை உள்வாரியாக பரிசீலிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. | தற்போதைய ஆட் சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டத்திற்கு அமைய ஆட்சேர்ப்பு கள் மற்றும் பதவியு யர்வுகள் இடம் பெறுவதை உறுதி செய்தல் வேண்டும். |
| vi. | ஊழியர் எண் 2023334 ஐக் கொண்ட ஊழியர், தற்போது சபைத் தரம் (VI) இலுள்ள சமூகவியலாளர் பதவியை வகிப்பதுடன் சமூகவியல் துறையில் முதுகலைப் பட்டத்துடன் | இந்த அதிகாரி சாதாரண பட்டம் பெற்றிருந்ததால், அவர் சபைத் தரம் VIII இல் நியமிக்கப்பட்டார். | பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போது தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | பொதுப் பட்டம் பெற்ற ஒருவர் ஆரம்பத்தில் சமூகவியலாளர் பதவிக்கு 2006 ஏப்ரல் 03 அன்று (VIII) தரத்தில் நியமிக்கப்பட்டார். இதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளாது பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி இந்த நியமனம் செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், சபையின் தற்போதைய ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டத்தின் படி, சமூகவியலாளர் தரம் 7 பதவிக்கு, சமூகவியலில் சிறப்புப் பட்டம் பெற்ற தகுதியுடன் கூடிய ஒருவர் வெளியிலிருந்தே ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். அதன்பின்னர், இந்த உத்தியோகத்தர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சிபாரிசுகளை கருத்திற்கொள்ளாமல், அமைச்ச ரின் ஒருங்கிணைப்பு அதிகாரியின் கோரிக்கை யின் அடிப்படையில், சபை தரத்திலுள்ள (VI) சமூகவியலாளர்கள் (I) பதவிக்கு பதவியுயர்த்தப் பட்டார். அதன்பின்னர், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு மாறாக உயர் மட்ட முகாமைத்துவத்தால் எடுக்கப்பட்ட பக்கச்சார்பான தீர்மானத்தின் அடிப்படையில் சபையின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டத்திலிருந்து விலகி அவர் MM-1 (வகுப்பு ii) இன் கீழ் பதவி உயர்வு பெற்றுள்ளார். | இருப்பினும், தற்போதுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறை யின்படி, தரங்களிற்கு பதவி உயர்வு பெற முடியாது. மேலும், சபைத் தரங்கள்: VII மற்றும் VI ஆகியவை JM 1-2 ஊதியக் குழுவின் கீழ் கருத்திற் கொள்ளப்பட்டு தனிப்பட்ட முறையில் அவருக்கு மட்டுமே வழங் கப்பட்டுள்ளன. இதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனு மதி கோரப்பட்ட போதும் அது கிடைக்கவில்லை. | தகுதிகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்யவும். |
| vii. | மீட்டர் வாசிப்பின் போது செய்த தண்டணைக்குரிய குற்றம் (கடமைகளை மறைத்தல்) காரணமாக 2066581 மற்றும் 2076640 என்ற ஊழியர் இலக்கங்களைக் கொண்ட இரண்டு மானி வாசிப்பாளர்கள் முறையே கடமைகளில் இருந்து நீக்கப்பட்டதுடன் முதற்கட்ட விசாரணைகளின் பின்னர் அவர்கள் பணிகளில் இருந்து இடைநிறுத்தப்பட்டனர். எவ்வாறாயினும், போலி மீட்டர் வாசிப்பின் காரணமாக இரண்டு மீட்டர் வாசிப்பாளர்கள் செய்த குற்றங்களால் ஏற்பட்ட இழப்புகளை அவர்களிடமிருந்து அறவிடாது சபை ஒழுங்கு விதிகளின் பிரிவு 31.1 க்கு மாறாக நீர் வழங்கல் அமைச்சரின் கோரிக்கையின் அடிப்படையில் அவர்கள் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டனர். | கவனக்குறைவாக பில் நோட்டுகளை எடுத்தத ற்காக கவர் பில் ரெக்கா ர்டர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார் இதுவரை அவர் மீது புகார் எதுவும் வரவில்லை. மேலும் மற்ற மீட்டர் ரீடரின் கோரிக்கை அனுதாபத்துடன் பரிசீலிக் கப்பட்டு, அவருக்கு எதிரான முறையான ஒழுங்கு விசாரணையின் முடிவுக்கு உட்பட்டு அவர் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டு, உதவிப் பொது முகாமையாளர் (மேற்கு-மத்திய) இற்கு நியமிக்கப்பட்டார். | சபையின் ஒழுங்கு விதிகளின்படி தண்டிக் கப்படும் மீட்டர் ரீடர்கள் மீது நடவடி க்கை எடுக்க வேண் டும். |

viii. கடந்த ஐந்து ஆண்டுகளிற்கான ஊழியர் ஒருவருக்கான மொத்த கிரயம் பின்வருமாறு உள்ளது.

| ஆண்டு | மொத்த ஊழியர் எண்ணிக்கை | மொத்த ஊழியர் கிரயம் ரூபா மில்லியன் | ஒரு ஊழியருக்கான கிரயம் ரூபா மில்லியன் |
|---|---|---|---|
| 2017 | 10338 | 11,575.10 | 1.12 |
| 2018 | 10022 | 12,863.07 | 1.28 |
| 2019 | 10104 | 12862.19 | 1.27 |
| 2020 | 9736 | 12841.0 | 1.31 |
| 2021 | 9336 | 16,416.85 | 1.76 |

இதன்படி, ஒரு ஊழியருக்கான கிரயம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 34 சதவீதத்தால் அதிகரித்திருந்தமை அவதானிக் கப்பட்டது.

கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை.

பதவியணியினர் கிரயத்தை இயன்றளவு குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

**கணக்காய்வு அவதானிப்பு**

i. 2020-2025 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டத்தின் படி, தேசிய கொள்கை கட்டமைப்பின் கீழ் ”அனைவருக்கும் தண்ணீர்” என்ற கருத்துடன் இணைந்து ஆண்டுக்கு 301,762 என்ற புதிய இணைப்பு இலக்கு நிறுவப்பட்டது, பின்னர் அந்த ஆண்டில் இலக்கு 215,000 ஆக மாற்றப்பட்டது. இருப்பினும், இந்த ஆண்டில் 192,087 புதிய இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இருந்த போதிலும், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீட்டர் விற்பனை வருவாய் 0.1 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்துள்ளது, இது 2019 முதல் 2020 வரையிலான வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 0.06 எதிர்மறையான வளர்ச்சியைக் காட்டுகிறது, இருப்பினும் புதிய இணைப்புகளின் எண்ணிக்கை 56 சதவீதம் அதிகரித்துள்ளது. முந்தைய ஆண்டு. அதற்கு மேலதிகமாக மூன்று பாரிய பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் மீளாய்வாண்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன மற்றும் பெரிய அளவிலான மூன்று பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் ஏற்கனவே முடிக்கப்பட்டுள்ளன.

**முகாமைத்துவத்தின் கருத்துரை**

ஒரு இணைப்புக்கான உள்நாட்டு நுகர்வு குறைந்த அடுக்குக ளில் இருப்பதால் பில் லிங் வருமானம் அதிக ரிக்கப்படவில்லை. பெரும்பாலான உள் நாட்டு அல்லாத நிறுவ னங்கள் தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக தண்ணீரை குறைவாக அல்லது உட்கொள்ள வில்லை, 50% க்கும் அதிகமான புதிய இணைப்புகள் பிற்பகு தியில் வழங்கப்பட் டுள்ளன. 2021. மேலும், திட்டமிட்ட திட்டங்க ளைச் செயல்படுத்துவ

**பரிந்துரை**

கூட்டிணைந்த திட்ட த்தில் சேர்க்கப்பட் டுள்ள இலக்குகளை அடைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | எவ்வாறாயினும், ஆண்டின் இறுதியில் மொத்த மக்கள்தொகையில் 2.08 சதவீதத்தை மட்டுமே வாரியத்தால் வழங்க முடிந்தது, இது முந்தைய ஆண்டு இலக்கான 2.1 சதவீதத்தை கூட வாரியத்தால் அடைய முடியவில்லை என்பதைக் காட்டுகிறது. | தற்கான நிதிப் பற்றாக்குறை மற்றும் கோவிட் தொற்றுநோய் காரணமாக சாக்கடை இலக்கை அடைய முடியவில்லை. | |
| ii. | கூட்டிணைந்த திட்டத்தின்படி கொழும்பு மாவட்டத்தில் ஒன்பது (09) கழிவுநீர்த் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது மற்றும் வருடத்திற்கு ரூபா 790 பில்லியனுக்கு சமமான தொகை மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இந்த ஆண்டு இறுதி வரையிலும் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் எதுவும் செயல்படுத்தப்படவில்லை. | நிதி பற்றாக்குறையால், எதிர்பார்த்த பாதாள சாக்கடை திட்டங்களை செயல்படுத்த முடியவில்லை. | -மேற்படி- |

## 4.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| i. | 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு, ஆண்டு தொடங்குவதற்கு முன்பே ஒப்புதல் பெறப்பட்டிருக்க வேண்டும். ஆனால் 2022 பிப்ரவரி 01 ஆம் தேதியன்று வரிசை அமைச்சின் செயலாளரால், செயல் நடவடிக்கைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு ஒரு மாதத்திற்குப் பிறகு ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தது. | 2020 டிசம்பர் 21 அன்று அமைச்சகத்திடம் இருந்து பெறப்ப ட்ட ஆண்டுக்கான அங்கீகரிக்க ப்பட்ட பட்ஜெட் ஒதுக்கீடு பெற்ற பத்து நாட்களுக்குள் செயல் திட்டம் அமைச்சகத்திடம் சமர்ப்பிக் கப்பட்டது. எவ்வாறாயினும், சமர்ப் பிக்கப்பட்ட செயல் திட்டங்கள் 2022 பெப்ரவரி 01 அன்று நீர் வழங்கல் அமைச்சின் செயலாள ரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. | செயல் நடவடிக்கை த் திட்டம் தயாரிக்க ப்பட்டு, ஆண்டு தொடங்கும் முன் அதற்கு ஒப்புதல் பெற வேண்டும். |
| ii. | சபையால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது இருபத்தி இரண்டு (22) வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட நீர் வழங்கல் செயற்திட்டங்கள், பதனொரு (11) உள்நாட்டு நிதியளிக்கப்பட்ட நீர் வழங்கல் செயற்திட்டங்கள் மற்றும் பாரியளவிலான மூன்று (03) கழிவுநீர் அகற்றல் செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டன. எவ்வாறாயினும், அதில், இருபத்து ஐந்து (25) செயற்திட்டங்கள் எதிர்பார்த்த முன்னேற்றத்தை அடைவதற்கு தவறிவிட்டது. | கோவிட்-19 தொற்றுநோய், ஒப்பந்ததாரர்களின் நிதி சிக்கல் கள், இறக்குமதி மீதான இறக்குமதி கட்டுப்பாடுகள், எதிர்பாராத வானிலை போன்ற காரணங்களால் திட்டப் பணிகள் தாமதமாகின்றன. | மீளாய்வாண்டின் இறுதியில் எதிர்பார ்க்கப்படும் திட்ட முன்னேற்றத்தை அடைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| iii. | 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயற்திட்டத்தின் பிரகாரம், ஐந்து பெரிய அளவிலான வெளிநாட்டு நிதியுதவி | கோவிட் -19 தொற்றுநோய், தற்போதுள்ள நீர் குழாய்களின் துல்லியமான வரைபடங்கள் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | திட்டங்கள், ரூபா 3.5 பில்லியன் கடன் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் உட்பட ஆறு உள்நாட்டு வங்கி நிதியுதவி திட்டங்கள் மற்றும் பயன்பாட்டின் கீழ் வடக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் நடைமுறைப்படுத் தப்பட்ட திட்டங்கள் ஆகியவற்றை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறா யினும், மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில் எதிர்பார்த்த முன்னேற்றத்தை அடைய முடியவில்லை. | கிடைக்காதது, எதிர்பாராத நிலத் தடி பயன்பாடுகள் மற்றும் கொழும்பு சாலையில் கடுமை யான போக்குவரத்து நிலைமை கள், விவசாயிகளின் ஆட்சேபனை, எதிர்பாராத பாறை, சாதகமற்ற வானிலை, கிடைப்பதில் தாமதம் ஆகியவை காரணமாக இந்த தாமதங்கள் ஏற்பட்டன. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதிகள், ஒப்பந்ததாரர்களின் நிதிப் பிரச்சினைகள், ஒப்பந்தக் காரர்களின் மோசமான செயல்திறன் போன்றவை. | |
| iv. | மீளாய்வாண்டில் ஆரம்பிக்க திட்டமிடப்பட் டிருந்த ஒன்பது (09) செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆரம்பிக்கப்படவில்லை. | செயல் திட்டம் -2021 இல் சேர்க்கப்பட்டிருந்தாலும், மேலே உள்ள நிதிக் கட்டுப்பாடுகள் காரணமாக, திட்டங்கள் தொடங்கப் படவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்திலுள்ள எதிர் பார்த்த இலக்குகளை அடைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| i. | பிரதி பொது முகாமையாளர், உதவி பொது முகாமையாளர், நான்கு (4) பிரதம உள்ளக கணக்காய்வாளர்கள் மற்றும் பொறியிய லாளர்கள் உள்ளடங்கலாக பதினேழு (17) வெற்றிடங்கள் 2022 யூலை 31 வரையும் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்ற வழக்குகள் நிலுவை யில் உள்ளதால் தலைமை உள் ளக கணக்காய்வு பணியிடங் களை நிரப்ப முடியவில்லை. உதவி பொது முகாமையாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறை ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட் டுள்ளது. அளவுத் திட்ட ஆய்வாளர் காலியிடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர் த்தப்பட்டுள்ளனர். | வெற்றிடங்களை நிர ப்புவதற்கு தாமதமி ன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | சபையால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளை பயன்படுத்தி பாரிய எண்ணிக்கையான நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. எவ்வாறாயினும், போதிய எண்ணிக்கையான உத்தியோகத்தர்கள் சபையின் தொழில்நுட்ப கணக்காய்வு பிரிவுக்கு இணைக்கப் பட்டிருக்கவில்லை. மேலும், | ஏற்கனவே 10 பேர் நியமிக்கப்பட் டுள்ளனர். பணம் செலுத்துதல் மற்றும் தரக் கட்டுப்பாடு, நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் விநியோக நெட்வொர்க்குகளின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு, கொள்முதல் செயல்முறைகள் மற்றும் பிற இன்-லைன் செயல்பாடுகளுக்கு ஏற்ப புதிய | சபையின் தொழில் நுட்ப கணக்காய்வு பிரிவிற்கு போதிய உள்ளக கணக்கா ய்வு உத்தியோகத்த ர்கள் சேர்க்கப்பட வேண்டியதுடன் முகா மைத்துவ |

| | | |
|---|---|---|
| பெரிய அளவிலான வெளிநாட்டு நிதியுதவி திட்டங்களான பெரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் மேலாண்மை மேம்பாட்டு முதலீட்டு திட்டம், அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் திட்டம் கட்டம்-ii, களுகங்கை நீர் வழங்கல் திட்டம், கண்டி நகர கழிவுநீர் மேலாண்மை திட்டம் போன்றவற்றிற்காக முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத் தின் 26 ஜுலை 2010 இன் சுற்றறிக்கை எண்.05-ன்படி ஆண்டு முழுவதும் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களிற்காக ஒரு உள்ளக கணக்காய்வாளர் மாத்திரம் நியமிக்கப் பட்டிருந்தார். | திட்ட நடவடிக்கைகளில் தொழில் நுட்ப கணக்காய்வை மேற்கொ ள்ள உள்ளக கணக்காய்வுப் பிரிவிலுள்ள பொறியியல் உதவியாளர்கள் மற்றும் RSC களுடன் பிராந்திய அளவில் இணைக்கப்பட்டுள்ளனர். | கணக்கா ய்வு திணைக்கள த்தின் சுற்றறிக்கை யை பின்பற்ற வேண்டும். |

## 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவியங்களிற்கு இடையில் 13 முதல் 214 சதவீதம் வரையான வீச்சிலான குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டது. எனவே, இது பாதீடானது சிறந்த மும்காமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை என்பதைக் குறிக்கின்றது. | கடந்த ஆண்டு நிலவிய கொந்தளிப்பான பொருளா தார சூழ்நிலையால், அது வித்தியாசத்தை விரிவுபடுத் தியது. எவ்வாறாயினும், அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதில் அவற்றின் மாறுபாடு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். | பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமா னம் மற்றும் செலவினங் களிற்கு இடையில் குறிப் பிடத்தக்களவு முரண் களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வெண்டும். |

## 4.5 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| i. | ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி ஐக்கிய நாடுகள் தாபன நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் -2030 மீதான நிகழ்ச்சிநிரல் வழங்குவதில், சபையானது பாதுகாப்பிற்கு பொதுவான மற்றும் நியாயமான வழிகளை அடைதல் மற்றும் சகலருக்குமான மலிவான குடிதண்ணீர் மற்றும் சகலருக்குமாக போதிய மற்றும் மலிவான சுகாதார மற்றும் சுத்தமான வழிகளை அடைதல் மற்றும் திறந்த மலங்கழித்தலை முடிவுறுத்தல், மகளீர் மற்றும் பெண்களின் தேவைகளிற்கு விசேட கவனம் செலுத்துதல் போன்ற நிலைபெறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டிருந்ததுடன். அவை 2030 இல் பாதிக்கக்கூடிய நிலையில் உள்ளது. எவ்வாறாயினும், அவற்றின் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற வேறு இலக்குகள், இலக்குகள், புள்ளிவிபர தரவுகள் மற்றும் செயலாற்றல் | கூட்டிணைந்த திட்டம் 2020 - 2025 ஆனது அனைவருக்கும் குழாய் மூலம் பாதுகாப்பான குடிநீரை அணுகுவத ற்கான உரிமையை உறுதி செய்வதற்காக அரசாங்கத்தின் வாக்கு றுதியுடன் இணையாக தயாரிக்கப்பட்டது.<br>கூட்டிணைந்த திட்டம் 2020-2025ன் படி, சபை யினால் 79% குழாய் குடிநீர் விநியோகத்தை அடைய திட்டமிடப்பட்டு ள்ளது. மேலும் புதிய இணைப்புகளின் | நிலைபேறான அபிவிரு த்தி இலக்குகள், இலக்கு கள் மற்றும் புள்ளியியல் தரவு ஆகியவற்றின் கீழ் வரும் மற்ற இலக்கு களை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டு மென்பதுடன் அவற்றின் செயல்திறனை மதிப்பீடு செய்தல் மற்றும் நிலை பேறான அபிவிருத்தியை செயல்படுத்துவது தொடர்பான உள்ளக சுற்றறிக்கைகள் அல்லது வழிகாட்டுதல்களை |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பாய்வைப் போல அவற்றிற்காக சம்பந்தப்பட்ட இலக்குகளை அடைவதிலுள்ள மைல்கல்கள் என்பவற்றினை இனங்காண்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2021 ஆண்டு இறுதிவரையும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அமுலாக்குவது தொடர்பில் சபையால் உள்ளக சுற்றறிக்கைகள் அல்லது வழிகாட்டல்கள் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடத்தக்க சாதனை 2021 இல் எட்டப்பட்டது என்பது குறிப்பிடத்த க்கது. | பின்பற்ற வேண்டும். |
| ii. | உரிய சபையுடன் தொடர்பான விடயங்கள் தொடர்பில் சகல தரப்பினரையும் பிரதி நிதித்துவப்படுத்துகின்ற தேவையற்ற தரவுகளை தவிர்ப்பதற்காக எந்தவொரு முறையும் பின்பற்றப்பட்டிருக்காததுடன் 2022 மார்ச் 31 வரையும் தரவின் உண்மைத் தன்மையை மெய்மையாய்வு செய்யும் முறை எதுவும் இனங்காணப்பட்டிருக்கவில்லை | பொது முயற்சிகள் திணைக்களம், திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் திணைக்களம் போன்ற வெளிப்புற நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் நிறுவன நோக்கத்தின் அறிக்கை, நிறுவன முடிவுகள் கட்ட மைப்பு, தரவு மற்றும் தேவையின் அடிப்படையில் வழங்கப்படும் தகவல் போன்ற முன்னேற்ற அறிக்கைகள் புள்ளியியல் மற்றும் தொடர்புடைய அமைச் சகங்கள். | உரிய செயற்பாட்டை கண்காணிப்பதற்காக வேண்டப்பட்ட எல்லைகள் இனங்காண்பதற்கும் தரவின் உண்மைத் தன்மையை மெய்மையாய்வு செய்யும் முறை பின்பற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| iii. | நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கு ஏற்ப 2019 ஆம் ஆண்டில் வரி அமைச்சின் செயலாளரால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளின்படி, 2020 ஆம் ஆண்டில் 2.25 சதவிகிதம் மற்றும் 2025 ஆம் ஆண்டில் 4 சதவிகிதம் வரை கழிவுநீர் பாதுகாப்பு அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது. பரிசீலனைக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில் கூட கழிவுநீர் கவரேஜ் 2.08 வரை மட்டுமே இருந்தது. மேலும், 2025 ஆம் ஆண்டுக்குள் 90 சதவிகித மக்கள் பாதுகாப்பு-நிர்வகிக்கப்பட்ட துப்புரவு வசதிகளைப் பயன்படுத்துகின்றனர் மற்றும் 2025 ஆம் ஆண்டுக்குள் 25 சதவிகித உள்ளூர் அதிகாரிகள் செப்டேஜ் சுத்திகரிப்பு வசதிகளைப் பயன்படுத்துகிறார்கள் என்பதை உறுதிப்படுத்த வாரியத்தால் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. வரிசை அமைச்சகத்தின் செயலாளரின் மேற்கண்ட இலக்குகளின்படி ஆதரவு எதிர்பார்க்கப்பட்டது. | முக்கிய பிரதேசங்களில் பிரதான சுத்திகரிப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. | எதிர்வுகூறப்பட்ட சுத்திகரிப்பு இலக்குகளை அடைவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |